
ஜூன் 27 - ஜூலை 03, 2010 June 27 - July 03, 2010 பக்கங்கள் - 28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI
வார மலர்



அச்சுறுத்தும் மெக்ஸிக்கோ வளைகுடா

## ரிங் மாஸ்டர் மரடோனா!

# அகதிகளின் பிரச்சினைக்கு என்ன தீர்வு?





தமிழ்ப் பிரதேசங்களின் மீது மீண்டும் ஒரு படை நடவடிக்கையா?

# பாஸ்கோ அதிரடி; அகாஷி பல்டி

யாழவன்

வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இலங்கைக்கு வந்து போவது நாட்டுக்கு நல்லது. நாட்டின் நற்பெயரைக் காப்பாற்ற உதவியாக இருக்கும் என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்து, சர்வதேசப் பிரதிநிதிகளை கைகூப்பி



வரவேற்று வருகிறது. அவர்களுக்கு இலங்கை தொடர்பாக விளக்கங்களையும் அளித்து வருகின்றது.

என்பது போல இலங்கையின் நிலைப்பாடு இருந்தது. போர்க் குற்றம் தொடர்பாக சாட்சியங்களை - ஆவணங்களை 'சனல் 4' என்ற பிரிட்டிஷ் தொலைக்காட்சி பகிரங்கப்படுத்திய போதும் கூட, இலங்கை அதை உதாசீனம் செய்தது.

போர்க்குற்ற விசாரணை தொடர்பாக அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் போன்ற மேற்குலக நாடுகள் எல்லாம் குரல் கொடுத்த போதும், அவற்றை எல்லாம் கவனிக்காமல் ''நாங்கள் சுத்த மானவர்கள்'' என்ற போக்கையே இலங்கை கடைப்பிடித்துக் கொண்டிருந்தது.

போர்க் குற்ற விசாரணை தொடர்பான தகவல் வெளிவர அவற்றைக் கண்டும் காணாத போக்கை இலங்கை அரசு கொண்டிருந்த போதும் - அது தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுக்காமல் அந்தத் தகவல்களை மறுத்துக் கொண்டிருந்தது.

மனித உரிமைகள் காப்பகம், சர்வதேச மனித உரிமைகள் குழு, ஆசிய மனித உரிமைகள் குழு போன்றவை குற்றவிசாரணைக் குழு தொடர்பாகக் கருத்துக்களை வெளியிட்டபோதும், அவற்றை இலங்கை உதாசீனப்படுத்தியது.

கருத்துக்களைக் கேட்டறிந்தார்.

அதன் பின் கொழும்பு திரும்பிய அவர், நாடு திரும்ப முன்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் வைத்து அதிரடி அறிவிப்பை விடுத்துள்ளார்.


இலங்கையில் இறுதிக் கட்டப்போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள், போர்க் குற்ற விசாரணை ஆகியன தொடர்பாக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு ஆலோசனை வழங்க நிபுணர் குழு ஒன்றை ஐ.நா. நியமிக்க முடிவு செய்துள்ளது. அந்தக் குழுவில் இடம்பெறும் நிபுணர்களின் விவரங்கள் அடுத்த வாரம் வெளியிடப்படும் என்று அவர் அறிவித்தார்.

அதற்கு அப்பால் அந்தக் குழு என்ன செய்யும், அதன் பணி, அந்தக் குழுவின் செயற்பாடு ஆகியன தொடர்பான விவரங்களை வெளியிட அவர் மறுத்துவிட்டார்.

ஐ.நாவில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த போர்க் குற்ற விசாரணை தொடர்பான தகவலை, அந்த விசாரணையுடன் சம்பந்தப்பட்ட நாட்டின் தலைநகரில் வைத்து அவர் வெளியிட்டுள்ளார்.


இந்த விவகாரம் தொடர்பாக துள்ளிக்குதித்துக் கொண்டிருந்த இலங்கை அரசு வாயடைத்து நிற்கிறது; அதிர்ச்சியில் உறைந்து போயிருக்கிறது.

இலங்கைப் படைகளுக்கு எதிராகச் சுமத்தப்படும் போர்க்குற்ற விசாரணைக்கு முகம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். நானோ எனக்குக் கீழ் பணியாற்றிய படையினரோ மனித உரிமை மீறல்களில் ஈடுபடவில்லை. யுத்த மரபுக்கு ஏற்பவே போர் செய்தோம். எந்த விசாரணையையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று தற்போது தடுப்புக் காவலில் உள்ள முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத்பொன்சேகா பி.பி.ஸிக்கு அளித்துள்ள பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.



படையினரின் குற்ற விசாரணைக்கு முகம் கொடுத்து, படையினரை சரத்

தெரிவிக்கப்படும் சந்தேகங்கள், ஐ.நாவின் போர்க் குற்ற விசாரணை ஒன்று நடக்கத்தான் போகின்றது



என்பதற்குக் கட்டியம் கூறுகின்றன.

சட்டவிரோதப் படுகொலைகள் தொடர்பான ஐ.நாவின் விசேட பிரதி நிதி பிலிப் அல்ஸ்டன், இலங்கை ஜனாதிபதி நியமித்துள்ள நல்லிணக்க ஆணைக்குழு நாட்டில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் குறித் தோ, போர்க்குற்றங்கள் குறித்தோ விசாரணை நடத்தமாட்டாது. அதற்கான உத்தரவோ, அதிகாரமோ அந்த ஆணைக் குழுவுக்கு வழங்கப்படவில்லை என்று கூறியுள்ளார்.

ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூனின் நிபுணர் குழுவுக்கு மாற்றீடாக இலங்கை அரசு நியமித்துள்ள நல்லிணக்க ஆணைக் குழு போதுமானது அல்ல. இந்தக்குழு சுயாதீனமாக விசாரணை நடத்தும் என்று கூற முடியாது என்று அமெரிக்காவின் ஐ.நா.சபைக்கான பிரதிநி ஸ்டெபன் ரெப் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் சட்டவிரோதப் படுகொலைகள் தொடர்பான விசேட பிரதிநிதி பிலிப் அல்ஸ்டன், அமெரிக்காவின் ஐ.நா.பிரதிநிதி ஸ்டெபன் ரெப் ஆகியோர் வெளியிட்டுள்ள கருத்தைச் உற்று நோக்கினால், ஐ.நாவின் பான் கீ மூனின் நிபுணர் குழு அமெரிக்கா,பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் ஆசியுடன்தான் வருகின்றது என்பது சுட்டிநிற்கிறது.

அந்த நிபுணர் குழுவின் அறிக்கை நிச்சயம் இலங்கைக்கு நெருக்கடியாகத் தான் அமையப் போகின்றது.

அது நிற்க -

இலங்கைக்குக் கடந்தவாரம் விஜயம் மேற்கொண்ட ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி நாடு திரும்புமுன் தெரிவித்த கருத்துக்கள் இலங்கைக்கு ஆறுதல் அளிப்பதாக இருக்கும் எனக் கருதலாம்.

இலங்கை மீதான மனித உரிமை மீறல் தொடர்பாக ஐ.நா.செயலாளர் நாயகம்

ஆனால் கடந்த வாரத்தில் வந்த ஐ.நா வின் அதிஉயர் அதிகாரியான லின் பாஸ்கோ கொழும்பில் விடுத்த அதிரடி அறிவிப்பு இலங்கைக்குப் பெரும் அதிர்ச்சி வைத்தியமாக அமைந்துவிட்டது.

ஐ.நா. சபையில் இருந்தவாறு அதன் செயலாளர் பான் கீ மூன் அடிக்கடி விடுத்துவந்த விடயத்தை அவருக்கு அடுத்த நிலையில் உள்ள அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் லின் பாஸ்கோ கொழும்பில் வைத்து அதிரடி அறிவிப்பாக பகிரங்கமாக விடுத்துள்ளார். இதனால் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளது இலங்கை.



கடந்த வருடம் மே மாதத்தில் இறுதிக்கட்டப் போரில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன. அது தொடர்பாக குற்றவிசாரணை நடத்த வேண்டும் என்று போர் முடிந்த கையோடு இலங்கை வந்த ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடம் கேட்டுக் கொண்டார்.

போர் முடிந்த கையோடு இலங்கை வந்த அவர், நேரடியாக போர் நடந்த இடங்களுக்குச் சென்று, நடந்தவற்றைப் பார்த்து, அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடி, இந்தக் கோரிக்கையை இலங்கையிடம் விடுத்தார்.

இலங்கை அரசும் அதற்குச் சம்மதம் தெரிவித்தது. பேச்சுக்களின் பின்னர் வெளியிட்ட கூட்டறிக்கை அதை உறுதிசெய்தது.

அதன் பின்னர் ஆரம்பமானதுதான் இலங்கை மீதான போர்க் குற்றவிசாரணை

## போர் குற்றவிசாரணை; முகம் கொடுக்குமா இலங்கை?

என்ற விவகாரம். அன்று ஆரம்பித்த விவகாரம் ஓராண்டைக் கடந்தும் தொடர்ந்து சென்றுகொண்டிருக்கிறது.

அதன் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் 2,3 தடவைகள் தொலைபேசியில் உரையாடிய போதும் இந்தப் போர்க் குற்ற விசாரணை தொடர்பாக பான் கீ மூன் பிரஸ்தாபித்து வந்தார்.

ஐ.நா. என்ன எம்மைக் கேட்பது,

இலங்கையின் போர்க் குற்ற விசாரணையை உள்ளூரில் விசாரணை செய்யச் சட்டங்கள் உள்ளன. அவற்றை விசாரணை செய்து சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்படுவார்கள். ஆனால் பயங்கரவாதத்தை ஒழிக்கப் பாடுபட்டவர்களைத் தண்டிக்க முடியாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார்.

இந்நிலையில் -

இலங்கையின் மீள் குடியமர்வு, இனப்பிரச்சினை தீர்வு ஆகியன தொடர்பாக கலந்துரையாடத் தனது பிரதி நிதி ஒருவரை இலங்கைக்கு அனுப்பப் போகிறேன். அதற்கு அனுமதியுங்கள் என்று பான் கீ மூன் இலங்கையிடம் விண்ணப்பித்திருந்தார்.



அண்மையில் அவரைச் சந்தித்த இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸிடமும் பான் கீ மூன் இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தார்.

இதன் பயனாக இழுத்தடிப்புக்குப் பின்னர் லிம் பாஸ்கோ இலங்கை வருவதற்கு ஒருவாறு அனுமதியை இலங்கை வழங்கியது.

இலங்கைக்குக் கடந்த வாரம் வந்த லிம் பாஸ்கோவை இலங்கை அரசு வரவேற்று, கலந்துரையாடித் தமது நிலைப்பாடுகளை விளக்கியது.

போர்க் குற்றம் தொடர்பாக எழுந்துள்ள விவகாரம் குறித்து ஆராயப் படித்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவை நியமித்துள்ளோம். அந்த ஆணைக் குழு கடந்த 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 21 ஆம் திகதி முதல், அதாவது விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான தினத்தில் இருந்து இடம்பெற்ற சம்பவங்களை விசாரித்து அறிக்கை தரும். அந்த அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்போம் என்று இலங்கை அவருக்குக் கூறியது.

இலங்கையுடன் பேச்சுக்களை நடத்தி விட்டு, போர் நடந்த பிரதேசங்களுக்கு அவர் சென்றார். போர் நடந்த பிரதேசங்களில் மேற்கொண்டுள்ள அபிவிருத்தி, மீள் குடியமர்வு போன்ற இமாலயச் சாதனைகளை அவருக்கு இலங்கை அரசு காட்டியது. மீள் குடியமர்ந்த மக்களுடன் அவர் கலந்துரையாடி அவர்களின்

## மேற்கு - தென்னாசியா! மஹிந்த - பொன்சேகா!!

## இரு அணிகள் களத்தில்

பொன்சேகா காட்டிக் கொடுத்தால் அவரைத் தூக்கி விடுவேன் என்று பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருந்தார்.

அதற்குப் பதில் அளித்து தாம் வழங்கிய பேட்டியிலேயே சரத் பொன்சேகா மேற்கண்டவாறு காட்டமாகக் கூறியுள்ளார்.

ஒருபுறம், போர்க்குற்றவிசாரணைக்கு முகம் கொடுக்க இலங்கை அரசு மறுக்க, மறுபுறத்தில் குற்றவிசாரணைக்கு முகம் கொடுக்கத் தயார் என போரை வழிநடத்திய இராணுவத் தளபதி பொன்சேகா கூறியுள்ளார்.

போர்க் குற்ற விசாரணை ஆரம்பிக்கப்பட்டால், இலங்கைத் தரப்பிடம் இருந்து இரு வேறுபட்ட சாட்சியங்கள் விசாரணையில் பதியப்படப்போகின்றன.

அந்தச் சாட்சியங்கள்தான் எதிர்காலத்தில் இலங்கையின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகின்றன.

இலங்கை படித்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு தொடர்பாகத்

பான் கீ மூனுக்கு ஆலோசனை வழங்குவதற்கான நிபுணர்குழு இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடக்கூடாது. அக்குழு இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள தேசிய நல்லிணக்க ஆணைக் குழுவுக்கு ஆலோசனைகள், அனுபவங்கள் மற்றும் வழிகாட்டல்கள் போன்றவற்றை மாத்திரம் வழங்க முடியும் என்று யசூசி அகாஷி நாடு திரும்ப முன்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

மொத்தத்தில் போர்க் குற்ற விசாரணை விடயத்தில் மேற்குலகம் இலங்கைக்கு எதிராக அணி திரண்டுள்ளது. தென்னாசியா இலங்கைக்கு ஆதரவாக அணி திரண்டுள்ளது.

இவற்றுக்குப் புறம்பாக, இலங்கைக்குள் மஹிந்த - பொன்சேகா என இரு அணிகள் களம் இறங்கியுள்ளன.

இந்நிலையில் போர்க்குற்ற விசாரணை என்ற விவகாரம் மேற்கு - தென்கு அணிகளுக்கு இடையிலும், மஹிந்த - பொன்சேகா அணிகளுக்கும் இடையிலும் பலப்பரீட்சையாக அமைந்துள்ளது.

இந்தப் பலப்பரீட்சையில் சாதிக்கப் போகிறவர்கள் யார் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். *

# தமிழ்ப் பிரதேசங்களின் மீது மீண்டும் ஒரு படை நடவடிக்கையா?

அருள் மனோகரன்

வடக்கிலும் கிழக்கிலும் மீண்டும் ஒரு யுத்தம் நடத்தப்படுகிறது அதிலும் வடக்கில் தான் இந்த யுத்தம் தீவிரமடைந்துள்ளது. இது கத்தி இல்லாத யுத்தம்; இரத்தம் சிந்தாத யுத்தம். ஆனால், ஆயுதந்தாங்கிய யுத்தத்தையும் விட பயங்கரமான யுத்தம் இது. வெளிப்படையாகச் சிந்தப்படும் இரத்தத்தை விட இந்த யுத்தத்தின் போதும், அதன் பிறகும் வீணடிக்கப் படப் போகின்ற - உறிஞ்சப்படப் போகின்ற குருதி அதிகமாக இருக்கப்போகிறது.

வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம், போருக்குப் பின்னான அபிவிருத்தி என்ற பெயர்களில் நடக்கின்ற இந்த யுத்தத்திற்கு தெற்கிலிருந்து அமைச்சர்களும் அரச பிரதானிகளும் படையெடுக்கின்றனர். போதாக் குறைக்கு வங்கிகளும் பெரும் வணிக நிறுவனங்க ளும் கூட இந்தப் படையெடுப்பில் கலந்து கொண்டு யுத்தத்தை நடத்துகின்றன.

இது ஓர் அபாயகரமான நிலைமையே! பாதிக்கப்பட்ட பிரதேசம், பாதிக்கப்பட்ட மக்கள் என்பவற்றுக்கான மறுசீராக்கம், அபிவிருத்தி என்பவை அந்தப் பிரதேச மக்களுடன், மக்கள் அமைப்புகளுடன் கலந்தாலேசித்து மேற்கொள்ளப்படுவது முக்கியமானது. அந்த அபிவிருத்தியில் அந்த மக்களைப் பங்காளிகளாக்குவது இன்னும் முக்கியமானது.

ஆனால் அப்படி எதுவுமே நடக்க வில்லை; யாருடைய அபிவிருத்திக் காகவோ யார்யாரெல்லாமோ செயற் படுகின்றார்கள். சம்பந்தப்படவேண்டிய மக்கள் ஒன்றுமே புரியாமலும் எதுவுமே செய்ய முடியாமலும் இருக்கின்றனர். இது தான் பிரச்சனைக் குரிய விஷயம்.

உண்மையில், போரினால் பாதிக்கப் பட்ட மக்களின் மறுவாழ்வு பற்றியும் போர் பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு அல்லது மறுசீரமைப்பு பற்றியும் ஒரு பொதுத்திட்டம் வரையப்பட்டிருக்க வேண்டும்.

எந்தெந்த அடிப்படையில், எவ்வா ன பணிகளையும் நடவடிக்கைளை ம், எவ்வளவு கால அடிப்படையில் மேற்கொள்வது என இந்தத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இவ்வாறு வரையப்படும் திட்டத்துக் கான ஆலோசனையிலும் திட்டக் குழு விலும் அபிவிருத்தி மற்றும் மறுசீராக்கம் போன்ற பணிகளிலும் நிச்சயம் பாதிக்கப்பட்ட தரப்பின் பிரதிநிதிகள் உள்ளடக்கப்பட்டிருப்பது அவசியம்.

ஆனால், இவை எதுவுமே நடக்க வில்லை. பாதிக்கப்பட்ட மக்கள் பிரதி நிதிகளாகவும், போரினால் அழிவுண்ட பிரதேசத்தின் பிரதிநிதிகளாகவும் நாடளுமன்ற உறுப்பினர்கள் முதல் உள்ளூர் மக்கள் பிரதிநிதிகள் வரை பலர் இருக்கின்றனர்.

இவர்களையெல்லாம் புறக்கணித்து விட்டே வடக்கின் வசந்தமும், கிழக்கின் உதயமும், போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான ஜனாதிபதியின் விசேட செயலணிக்குழுவும் இயங்குகின்றன.

இதனால், ஏற்கனவே பாதிக்கப்பட் டிருந்த பிரதேசங்கள் மேலும் பாதிப்புக் குள்ளாகின்றன. குறிப்பாக வீதிப் புனர மைப்புக்காக வன்னியில் பல இடங்களிலும் அகழப்பட்டிருக்கும் மண் எதிர் காலத்தில் பெரும் பாதிப்பை உண்டு பண்ணக்கூடியது. இப்போதைய அவசர தேவைக்காகவும் ஒப்பந்த வேலை செய்வோரின் வசதிக்காகவும் எவருடைய ஒப்புதலு மின்றியும் கண்ட கண்ட இடங்களில் இருந்தெல்லாம் மண் அகழ் தெடுக்கப் படுகிறது. இதனால் தனியார் காணிகள், காட்டுப் பகுதிகள், வீதியோரங்கள் எல்லாமே பாதிக்கப்படுகின்றன.

அத்துடன் அபிவிருத்தி என்ற பெயரில் போடப்படுகின்ற வீதிகள் ஒழுங்காக அமையாமல், கிரவலால் நிரப்பப்படுகிறது. இந்தக் கிரவலானது தூசியைக் கிளப்பி சுவாச நோய்களை உண்டுபண்ணுகிறது. தவிரவும் வீதியோரங்களில் இருக்கும் வீடுகள், பயிர்கள், கிணறுகள் போன்றவற்றையும் நாசமாக்குகிறது.

அத்துடன் கிரவலைப் பரப்பி அமைக் கப்படும் வீதியானது ஓர் ஆண்டுகாலம் தாக்குப் பிடித்து நிற்பதே கடினமானது. ஒரு காலத்தில் வீதி திரும்பவும் பழையபடி பாழடைந்துவிடும்.

இதையெல்லாம் பொருட்படுத் தாமல் வீதி அபிவிருத்தி என்ற பெயரில் செலவழிக்கப்படுகின்ற பணமும் வளங் களும் வீண் விரயங்கள் மட்டுமல்ல, எதிர் விளைவுகளையுமல்லவா ஏற்படுத்துகின்றன.

இது தனியே வீதிக்கு மட்டுமான குறைபாடல்ல. சகல வேலைகளிலும், அத்தியாவசியப் பணிகளிலும் உள்ள குறைபாடாகும்.

கடந்த வாரம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதியின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான நாமல் ராஜபக்ஷ கூரையில்லாத கட்டிடமொன்றைத் திறந்து வைத்திருக் கிறார். ஆனால் இந்த விழா வைபவத் துக்கு தெற்கிலிருந்து அழைத்துவரப் பட்டு நடத்தப்பட்ட நடன நிகழ்ச்சி போன்றவற்றுக்குச் செலவழிக்கப்பட்ட பணத்தில் அந்தக் கட்டிடத்தின் கூரையைப் போட்டிருக்கலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு கடந்த 15 நாட்களுக்குள் மீன்பிடி அமைச்சரும் துணை அமைச்சரும் வந்திருந்தனர்.

இவர்களைக் குடாநாட்டின் மீனவர்கள் சந்தித்து விரிவாக தமது பிரச்சினைகள் பற்றிக் கதைக்க முடியவில்லை. காலையில் வந்து பிற்பகல் மூன்று மணிக்குத் திரும்பும் இந்தக் குறுகிய நேரத்தில் - ஐந்து மணித்தியாலத்திற் குள் பல நிகழ்ச்சி நிரல்கள் இருக்கும்.

வந்த அமைச்சர்களின் வாகனத் தொடரணி மிக வேகமாகப் பறந்து கொண்டிருக்கும். சம்பிரதாயபூர்வமாக ஒரு மக்கள் சந்திப்பு, அபிவிருத்தி



அல்லது புனரமைப்புத் தொடர்பாக ஒரு கூட்டம், சில இடங்களைப் பார்வை யிடுவது என்பவற்றுடன் அமைச்சரின் பயணம் முடிந்துவிடும்.

எவ்வளவோ தேவைகளோடும், பிரச்சினைகளோடும் வருகின்ற மக்கள் தாங்கள் குறைகளைத் தீர்ப்பதற்கான வழி தெரியாமல் தடுமாறிக் கொண்டி ருக்க அமைச்சர்கள் கையசைத்துக் கொண்டு போய்விடுகிறார்கள்.

உண்மையில், இந்த நிலை மாற்றப் பட வேண்டும். மீள் குடியேற்றத்துக் கான அமைச்சர்களும் துணை அமைச்சர் களும் யாழ்ப்பாணம் வந்திருந்தனர். மாவட்ட செயலகத் தில் கூட்டம் நடந்து ஏதோ சொன்னார்கள், சென்று விட்டனர். 20ஆண்டுகளுக்கு மேலாக அகதிகளாக இருப்பவர்கள் அகதிளாகவே இருக்கிறார்கள்.

இவற்றுக்கெல்லாம் ஒரு பொதுத் திட்டத்தை வரைந்து, அரசாங்கத்தின் கொள்கை - நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தியே தீர்வைக் காணமுடியும்.

ஆனால், அதெல்லாம் கிடையாது. பெருமளவு நிதியைச் செலவழித்து வடக்குக்கும் கிழக்குக்கும் அமைச்சர் களும் பிரதிநிதிகளும் வருகின்றனர். அதாவது படை யெடுக்கின்றனர்.

ஏதோ செய்வதைப் போல என்னவெல்லாமோ செய்கின்றனர். ஆனால், விளைவு கள் பாதகமானதாக இருக்கின்றன.

வங்கிகள் பணத்தைச் சுருட்டிக்கொண்டு போகின்றன. பதிலாக, எந்தப் பெரிய தொழில் முயற்சியும் மேற் கொள்ளப்பட வில்லை.

ஆயிரக்கணக் கானவர்கள் வேலை இல்லாமல் இருக்கின்றனர் தொழில் மையங்கள் எதுவும் ஆரம்பிக் கப்பட வில்லை. உதாரணமாக ஆனை யிரவு உப்பளம், தும்பு ஆலைகள் போன்றவற்றை ஆரம்பிக்கலாம்.

ஆனால் இதில் எல்லாம் சரியான உயர்பாதுகாப்பு வலயம் பற்றி ஒரு சரியான தீர்மானம் எடுக்காமல் அகதி களின் பிரச்சனைக்ளுக்குத் தீர்வு காணா மல் வடக்குக் கிழக்கில் எதனையும் செய்ய முடியாது.


இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மட்டும் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளுடன் பேசவேண்டு என்றில்லை. அபிவிருத் திக்கும் மக்களின் பிரதிநிதிகளுடன் பேசவேண்டும்.

இல்லையென்றால், அமைச்சர்கள், அரச பிரதானிகள், வெளியூர் ஒப்பந்தக் காரர்கள், வெளிநாட்டு நிறுவனங்கள், வங்கிகள், வணிக அமைப்புக்கள் என்பவற்றுடன் படையெடுப்புகளாலும் மக்களே பாதிக்கப்படுவர்.

அதிலும் பாதிக்கப்பட்ட மக்களே மேலும் மேலும் பாதிக்கப்படுவர் எனவே, ஊடகங்களும் மக்கள் அமைப்புக்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கவனம் எடுத்து புத்திகரமாக இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும்.

வருகின்ற உதவிகளை நிராகரிக்கா மல் அவற்றை உரிய முறையில் பயன்படுத்தக்கூடிய பொறிமுறையை நாம் உருவாக்க முயற்சிக்க வேண்டும். அதற்கான அழுத்தங்களை உருவாக் குவதே இப்போதுள்ள பணி. இந்த அழுத்தமே முன்னெடுக்கப்பட்டு வரும் படையெடுப்புக்கும் யுத்தத்துக்குமான பதிலாக இருக்கும்.

எனவே இப்போது தேவை பொருத்தமான அணுகுமுறையே. *




ஹோட்டல் பாடசாலை

சர்வதேச சமையற்கலை
உணவுவகைகளைப் பரிமாறுதல்
விருந்தினர் வரவேற்பு
ஹோட்டல் பராமரிப்பு

கப்பற் சேவைக்குத் தேவையான
CDC பயிற்சி

ஆரம்பப் பாடசாலை
ஆசிரியர் பயிற்சிப் பாடத்திட்டம் (ஆங்கிலம் மற்றும் சிங்களம் மூலம்)

ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி
முழுநேர/பகுதிநேர பாடத்திட்டங்கள்

JULISTON LANKA INTERNATIONAL (PVT) LTD
இல.01 வீரசிங்க ஒழுங்கை, காலிவீதி, பாணந்துறை.
தொலைபேசி: 038 4281499 / 038 5671582
E-mail: juliston@isplanka.lk / Web - www.julistonlanka.com

சுடர் ஒளி

ஜுன். 27 - ஜுலை. 03, 2010

85, ஜெயந்தமல் விமாரச்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன்: 0115798005
பக்ஸ்: 0114734404
E-mail: editorial@sudaroli.com

## நெருக்கடியிலிருந்து இலங்கை மீளுமா?

இவ்வாரம் இலங்கை அரசு சர்வதேச அரங்கில் இரு நெருக்கடிகளை எதிர்நோக்கி உள்ளது. இரு நெருக்கடிகளுமே இலங்கை மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் ஏற்பட்டவை தான். இதில் பிரதானமானது ஐ.நாவில் இருந்து வந்துள்ள நெருக்கடி. அடுத்தது ஐரோப்பிய ஒன்றியம் கொடுத்து வரும் நெருக்கடிகள்.

வன்னி யுத்தத்தின் இறுதி நாட்களில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக சர்வதேச யுத்தக்குற்ற நீதிமன்றத்தில் இலங்கை விசாரிக்கப்படவேண்டும் என்று, கடந்த ஆண்டு மே மாதம் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்பு வெளிநாடுகளில் வலியுறுத்தப்பட்டு வந்தது. இந்தக் கோரிக்கையை தொடர்ச்சியாக முன்வைத்து வந்தவர் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை.

யுத்தம் முடிவடைந்து ஒருவருடம் ஒரு மாதம் கடந்த நிலையில்-இலங்கை யுத்த வெற்றிக்கொண்டாட்டங்களைப் பெரும் எடுப்பில் கொழும்பு காலி முகத்திடலில் நடத்தி இருந்த தருணத்தில்-ஐ.நா. நிபுணர் குழு அமைக்கப்படும் தகவல் இலங்கை வந்திருந்த அரசியல் விவகாரங்களுக்கான ஐ.நா உதவிச் செயலாளர் நாயகம் லின் பாஸ்கோவினால் வெளியிடப்பட்டது.

அவரது அறிவிப்பைத் தொடர்ந்து ஐந்து நாட்களில், இந்தோனேஷியாவின் முன்னாள் சட்ட மா அதிபர் மர்சுகிதருசுமன் தலைமையில் மூவர் அடங்கிய நிபுணர் குழு அமைக்கப்பட்டதான அறிவிப்பு வெளிவந்தது. இதுவே தற்பொழுது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனினால் அமைக்கப்பட்ட இந்த நிபுணர் குழு, அரச படைகளில் மனித உரிமை மீறல்களை மட்டும் அல்ல விடுதலைப் புலிகளின் மனித உரிமை மீறல்கள் குறித்தும் பரிசீலனை செய்யும் என்று நிபுணர் குழுவின் தலைவர் மர்சுகிதருசுமன் தெளிவாகக் கூறி உள்ளார்.

போரின் இறுதி நாட்களில் சாட்சியம் எதுவும் இன்றி பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர் என்றும் வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்த புலிப் பிரமுகர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும் இலங்கை மீதும்-

பலவந்தமாகச் சிறுவர்களைப்படையில் சேர்த்தனர், அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்ல முயன்ற பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று புலிகள் மீதும்- பல தரப்பட்ட குற்றச் சாட்டுக்கள் தற்பொழுது சுமத்தப்பட்டு வருகின்றன.

போரின் இறுதியில் இடம் பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்களை இலங்கை அடியோடு மறுத்துவிட்டது. பொது மக்கள் உயிரிழப்பதைத் தவிர்க்கும் முயற்சியில் ஈடுபட்டதன் காரணமாக போரில் தனது படையினர் பலரை இழக்க நேரிட்டது என்று அரசு கூறுகிறது. வெள்ளைக் கொடியுடன் வந்த புலிப் பிரமுகர்கள் சுடப்பட்டதாகக் கூறப்படும் தகவலிலும் உண்மை இல்லை என்கிறது இலங்கை.

இதே போன்று வெளிநாடுகளில் உள்ள புலிகள் ஆதரவுச் சக்திகளும் புலிகள் மீதான குற்றச்சாட்டை மறுத்து விட்டன.

இப்படியான நிலைமையிலேயே போரின் இறுதி நாட்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக ஐ.நா செயலாளர் நாயகத்துக்கு ஆலோசனை கூறுவதற்காக நிபுணர்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த விவகாரங்களை ஆராய நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை நியமித்திருப்பதாகவும் அதன் செயற்பாடுகளை ஐ.நா. நிபுணர் குழு குழப்பிவிடும் என்றும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிக்கிறார். ஐ.நா நிபுணர் குழு இலங்கை வருவதற்கு விஸா வழங்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஆனால், இலங்கையின் நிலைப்பாட்டை ஏற்கும் நிலையில் சர்வதேசம் இல்லை. இதனையே நிபுணர்குழு நியமனம் எடுத்துக்காட்டுகிறது.

ஆகவே, குற்றச் சாட்டுக்களை மறுத்துக் கொண்டிருப்பதை விட அவற்றை எதிர்கொண்டு தெளிவை ஏற்படுத்துவதே காலத்தின் தேவை. ✱

# அகதிகளின் பிரச்சினைக்கு என்ன தீர்வு?

இலங்கையில் அகதிகளின் பிரச்சினைக்கு என்ன தீர்வு? உள்நாட்டு நெருக்கடியின் விளைவாக உருவாகிய அகதிகளின் பிரச்சினை யுத்தகாலத்தில் மிகப் பெரும் பிரச்சினையாக உருவாகியது.

குறிப்பாக, தமிழ் பேசும் மக்களில் 80% மானவர்கள் அகதிகளாகினார்கள். இதிலும் தமிழ்மக்களே அதிகளவில் அகதிகளாயினர். இவர்களில் ஒரு பகுதியினர் புலம் பெயர்ந்து தூரநாடுகளுக்குச் சென்றனர். இரண்டுலட்சம் வரையானவர்கள் இந்தியாவுக்குச் சென்றனர். ஏனையவர்கள் உள்நாட்டிலேயே அகதிகளாக இருக்கின்றனர். இதிலும், அகதிமுகாம்களில் இருப்போர் ஏறக்குறைய இரண்டு லட்சத்துக்கும் அதிகமானவர்கள்.

இலங்கைத்தமிழ் அகதிகளில் 25 ஆண்டுகளுக்கும் அதிகமான காலம் அகதிகளாகவே இருப்பவர்களும் உண்டு. இந்தியாவில்- தமிழகத்தில் இருப்பவர்களில் ஒரு தொகுதியினர் பதினைந்து ஆண்டுக்கும் அதிகமான காலம் முகாம்களிலேயே இருக்கின்றனர்.

இப்போது யுத்தம் முடிந்துவிட்டது. அநேகமாக வன்முறைச்சூழல் தணிந்துவிட்டது. என்றாலும், அகதிகள் பிரச்சினை, இப்[illegible]தைக்குத் தீரும்போலத் தெரியவில்லை. ஒரு பெண் குறிப்பிட்டதைப்போல, உயர்பாதுகாப்பு வலயங்கள் இருக்கும் வரை அகதிப் பிரச்சினையும் இருக்கும் என்பது உண்மை. அகதிகளாகப் புலம் பெயர்ந்து சென்றவர்கள் எப்படியோ அந்தந்த நாடுகளில் குடியேறி விடுகிறார்கள். தமிழகத்தில் இருப்பவர்களும், உள்நாட்டில் இருப்பவர்களும் தான் நிரந்தர



அகதிகளாக இருக்கும் பலன் பெற்றவர்கள்.

இதில், தமிழக அகதிகளின் பிரச்சினைக்குக்கூட விரைவில் தீர்வு கிட்டலாம். குறைந்தபட்சம் அவர்கள் அங்கிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்படலாம். வேண்டுமானால், அவர்கள் இலங்கையில் அகதிகளாக இருக்க வேண்டிவரலாம்.

ஆனால், இலங்கையில் தங்களின் சொந்த இடங்களுக்குத்திரும்ப முடியாமல் இருக்கும் அகதிகளின் நிலைதான் இங்கே கவனத்துக்குரியது. இவர்கள் எப்போது மீண்டும் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்புவார்கள் என்று யாருக்குமே தெரியாது.

அதுவரை அகதிமுகாம்களில் இருக்க வேண்டியதுதான். அல்லது அகதிகளாக, வெவ்வேறு இரவல் வீடுகளில், அடிக்கடி இடம் மாறியபடி, அகதி அட்டையுடன் இருக்கவேண்டியதே.

இவர்கள் மீண்டும் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமைக்குக் காரணம் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பிரச்சினையே.

அதாவது, பாதுகாப்பு முதன்மைப்படுத்தப்பட்டு, மக்களின் உரிமையும் நலனும் இரண்டாம் பட்சமாக்கப்பட்டதன் விளைவு.

இதை அரச தரப்பு மறுத்துரைக்கிறது. அரச தரப்பின் விளக்கத்தின்படி, மக்கள் நலனுக்காகவே பாதுகாப்பு ஏற்பாடுகள். அந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளால் மக்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன என்று. இந்தக் கூற்றானது அதிகாரத்தரப்பின் வாதத்துக்குச் சரியாக இருக்கலாம். ஆனால், மக்களை அகதிகளாகவே வைத்துக்கொண்டு, அவர்களுடைய சொந்த இடங்களுக்குத் திரும்ப விடாது தடுத்துக்கொண்டு இந்த நியாயத்தை அரசாங்கம் சொல்ல முடியாது.

கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், நாயாறு, கருநாட்டுக் கேணி, முல்லைத்தீவு, வலிவடக்கு, வடமராட்சி கிழக்கு, யாழ் நகரத்தின் சில பகுதிகள், தென்மராட்சி கிழக்கில் வரணி, எழுதுமட்டுவாள், மிருசுவில் போன்ற இடங்கள் இயக்கச்சிப் பிரதேசம் என இவ்வாறு அடுக்கிக்கொண்டே போகலாம்- படையினர் வசமுள்ள பகுதிகளை.

இந்தப் பகுதிகள் எல்லாம் மீண்டும் மக்களிடம் கையளிக்கப்படும்போதுதான் இலங்கையில் அகதிப் பிரச்சினை முடிவுக்கு வரும். ஆனால், அதற்கான சாத்தியங்கள் தெரியவில்லை.

மீள்குடியேற்றத்துக்கான தனி அமைச்சே உருவாக்கப்பட்டுள்ளது. அகதிகள் புனர்வாழ்வுக்கு என தனியான அமைச்சும் உண்டு. ஆனால், போர் முடிந்த பின்னும் அகதிகள் தொடர்ந்தும் அகதிகளாகவே இருக்கப் போகின்றனர். இந்தப் பிரச்சினைக்கான கால எல்லையை யார் நிர்ணயம் செய்வது?

ஐ.நா செய்யவேண்டும். சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் செய்யவேண்டும். இலங்கை அரசு செய்ய வேண்டும். தமிழ் மக்களின் சார்பான நாடாளுமன்ற உறுப்பினர்கள் செய்யவேண்டும்.

**-ஜோசப் தயாளன்**

ஒரு முழுமையான மீள் குடியேற்றத்துக்கான சாத்தியப்பாட்டை உருவாக்குவதைப் பற்றி முதலில் சகல தரப்பினரும் சிந்திக்க வேண்டும். இதில் புலம் பெயர் தமிழர்களின் பங்களிப்பும் அவசியமானது. புலம் பெயர் மக்களின் பங்களிப்பு எனும் போது அவர்கள் உடனடியாக நிதி உதவிகளையே சிந்திப்பர். ஆனால், அதுவல்ல இங்கே குறிப்பிடப்படுவது.

அரசியல் அணுகுமுறை ரீதியான பங்களிப்புத்தான் இங்கே முக்கியமானது. எதன் பொருட்டும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கருதிக்கொள்ளும் வகையில் உயர்பாதுகாப்பு வலயங்களைப் படைத்தரப்பு கைவிடப்போவதில்லை.

அத்துடன் போருக்கெனப் பெருகியிருக்கும் படைகளின் பெருக்கம் அகதிகளின் பிரச்சினைக்கு ஒரு காரணமாகவே இருக்கப் போகிறது. அதாவது பெருகியிருக்கும் படைகளைக் கொண்டுபோய் ஒரு குறிப்பிட்ட இடத்தில் முடிக்கமுடியாது.

எனவே, அவைகளை நாடுமுழுவதும் பரப்பி வைத்திருப்பதே அரசாங்கத்தின் பாதுகாப்புக்குப் பொருத்தமானது. இல்லையென்றால், இந்தப் படைகளே அரசாங்கத்துக்குச் சவாலாகி விடும்.

எனவே, அரசாங்கம் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக படைகளை எங்கும் பரப்பியே வைத்திருக்கும். இதனால், சனங்களின் வாழ்விடங்களும் பறிக்கப்படுகின்றன.

வாழ்விடங்களை இழந்த சனங்கள் அகதிகளாகவே இருக்கப்போகின்றனர். ஆகவே, அகதிகளின் பிரச்சினை என்பது நீண்டகாலத்துக்குத் தொடரவே போகிறது. நீண்டகாலத்துக்கு அகதிகளின் பிரச்சினை தொடருமாக இருந்தால், அது உள்நாட்டு நெருக்கடியை அதிகரிக்கும்.

இதில் கவனிக்க வேண்டிய இன்னொரு விஷயமும் உண்டு. இந்த அகதிகள் அனைவரும் தமிழர்கள். ஆகமொத்தத்தில், தமிழர்கள் அகதிகளாக இருப்பதைப் பற்றி நாடாளுமன்றம் என்ன கருதுகிறது? நாட்டின் தலைவரான ஜனாதிபதி என்ன நினைக்கிறார்? கட்சிகள் என்ன நிலைப்பாட்டுடன் இருக்கின்றன? சிங்கள ஊடகங்களின் கருத்தென்ன? ஒட்டுமொத்தமாக இந்த நாடு என்ன கருதிக்கொண்டிருக்கிறது?

யாழ்ப்பாணத்தில்கூட 64 இடங்களில் 20,000 பேர் 20 ஆண்டுகளாக அகதிகளாக இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைக்கு உள்ளூர் அரசியல் தலைவர்கள் கூட ஓர் உருப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

ஆனால், அகதிகள் போராட்டங்களில் பங்கேற்றிருக்கின்றனர். தேர்தல்களில் வாக்களித்திருக்கிறார்கள். எல்லாவற்றையும் செய்து விட்டும் அவர்கள் அகதிகளாகவே இருக்கின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் கடந்த வாரம், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மீள்குடியேற்றம் தொடர்பான மாநாட்டில் தெரிவித்ததைப் போல, தங்களுக்கென்று ஒரு மலசல கூடத்தைக்கூட வைத்திருக்க முடியாமல் தான் அகதிகள் இருக்கின்றனர்.

இடம்பெயர்ந்த பாடசாலைகள், இடம்பெயர்ந்த மக்கள், இடம்பெயர்ந்த மலசல கூடங்கள் என்றுதான் இலங்கையில் அகதிகள் பிரச்சினை நீடிக்கிறது.

இதற்கான [illegible] தீர்வும் எப்போது? இன்னும் [illegible] ன தேர்தல்களை. இந்த அகதி[illegible]க வேண்டும்? ✱



## உங்களின் உடலினை நீங்கள் கட்டுக்கோப்புடன் வைத்துள்ளீர்களா?

மிதமிஞ்சிய உடல் வளர்ச்சி,
உடலின் எடை அதிகரித்தல்,
வயிறு வைத்தல், கெஸ்ட்ரிக்
மற்றும் உயர் இரத்த அழுத்தம்
போன்ற நோய்களினால் நீங்கள்
கவலைப்படுகிறீர்களா..............

நாம் இப்போது
பம்பலப்பிட்டியிலும்
(மிலாகிரி புனித போல் பள்ளிக்கு முன்பாக)

**இதோ !**
**அதற்கான தீர்வு**
**எம்மிடமிருந்து...**




VISA MasterCard HSBC SEYLAN BODY

# ESER MARKETING (PVT) LTD

ESER MARKETING

## நாடளாவிய கிளைகள்

| | | | |
|---|---|---|---|
| கோட்டை | தொ: 011 5731888 | கம்பஹா | தொ: 033 5628889 |
| பம்பலப்பிட்டி | தொ: 011 2585330 | காலி | தொ: 091 5457777 |
| நுகேகொடை | தொ: 011 5529888 | மாத்தறை | தொ: 041 5629888 |
| மொறடுவை | தொ: 011 5528888 | இரத்தினபுரி | தொ: 045 5678887 |
| ஜா-எல | தொ: 011 5731730 | நீர்கொழும்பு | தொ: 031 5678880 |
| களனி | தொ: 011 5552008 | களுத்துறை | தொ: 034 5629888 |
| இராஜகிரி | தொ: 071 4440555, 5347632, 5357632 | அம்பலன்கொடை | தொ: 091 5678888 |
| கண்டி | தொ: 081 5673333 | அநுராதபுரம் | தொ: 025 5628889 |
| குருநாகல் | தொ: 037 5672562 | கேகாலை | தொ: 035 5628889 |
| மாத்தளை | தொ: 066 5678886 | பண்டாரவல | தொ: 057 5678889 |

## முகவர்கள்

- மட்டக்களப்பு - சனயில் ஸ்போட்ஸ், 362, பிரதான வீதி, காத்தான்குடி. தொ: 060 2652848, 077 3512341
- மன்னார் - உஷா சேல்ஸ் சென்டர். தொ: 023 2222010
- திருகோணமலை - அஜ்மீர் டிரேடர்ஸ், 186, என்.சீ. வீதி. தொ: 026 2222702
- வவுனியா - 'கணேஷ்' 100, ஸ்டேசன் வீதி, வைரவ புளியங்குளம். தொ: 024 4924775
- யாழ்ப்பாணம் - 'யாழகம்' 568, ஹொஸ்பிடல் வீதி. தொ: 021 2225563

**HOTLINE: 5652652** **www.esermarketing.com**


# போபால் விஷவாயு கசிவு வழக்கு
# மன்மோகன் அரசை ஆட்டங் காணவைக்குமா?

-எஸ். சுரேந்திரராஜித்



ஓர் அரசாங்கத்தை கவிழ்க்குமளவுக்கு போபால் விஷவாயுக் கசிவு அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததா என்றால் ஆம் என்று தான் சொல்லமுடியும்.

அரசாங்கம் ஆட்டம் காண்பது மட்டுமன்றி கவிழ்ந்தாலும் ஆச்சரியம் இல்லை. ஏனென்றால் 15 ஆயிரம் பேரின் உயிரை ஒருசில மணிநேரத்தில் குடித்த, மேலும் 3லட்சம் பேரை அங்கவீனராக்கிய ஒரு பேரழிவு அதுவாகும். கிட்டத்தட்ட ஹிரோஷிமா-நாகசாகிக்கு ஒப்பிடக்கூடியதும் கூட. ஹிரோஷிமா நாகசாகி அளவுக்கு உயிர், உடல் சேதம் உயர்வாக இல்லை. எனினும் ஹிரோஷிமா-நாகசாகி அழிவு ஒரு பெரும் யுத்தத்தில் எதிரி



ராஜீவ் காந்தி

நாடொன்றினால் ஏற்படுத்தப்பட்ட அழிவு என்பது கவனிக்கத்தக்கது. ஆனால், போபால் பேரழிவு ஒரு நாட்டின் -ஒரு மாநில அரசின்- செயற்பாட்டினால் அம்மாநில மக்கள் லட்சக்கணக்கில் பாதிக்கப்பட காரணமானதாகும். எனவே ஹிரோஷிமா நாகசாகி அழிவுகள் மன்னிக்கப்பட்டாலும் போபால் அழிவு மன்னிக்க முடியாதது என்பதே சரியான வாதம். மேலும் ஹிரோஷிமா நாகசாகி நடந்தது 65 வருடங்களுக்கு முன் உலகம் முன்னேறாத ஒரு காலகட்டத்திலாகும். போபால் அழிவோ தகவல் தொடர்பு விருத்தியடைந்த யுகத்தில் நிகழ்ந்துள்ளது. எனவே போபால் பேரழிவின் சூத்திரதாரிகள் நிச்சயமாக தண்டிக்கப்பட்டே இருக்கவேண்டும். நீதித்துறை, சூழல் பாதுகாப்பு ஆர்வலர்களின் செயற்பாடு என்பன தீவிரமடைந்துள்ள ஒரு புதிய யுகத்தில் போபால் அனர்த்தம் இடம்பெற்றதும் அதன் குற்றவாளிகள் தப்பிக்கொண்டதும் வியப்பை அளிக்கிறது.

உலகம் ஒரு சிறிய கிராமமாக மாறிவிட்டதால் உலகின் ஒரு மூலையில் நடப்பது மற்றமூலையை கணப்பொழுதில் சென்றடையும் சகாப்தம் இதுவாகும். இருந்தும் குற்றவாளி தப்பியுள்ளான்- அது மட்டுமன்றி திட்டமிட்டு தப்பவிடப்பட்டுள்ளான் என்ற செய்தி இப்போது உலகை சுற்றி வலம் வரத்தொடங்கியுள்ளது. காலம் தாமதித்தாயினும் இந்த படுபாதகத்தை உலகறியச்செய்த பெருமை இந்திய பத்திகைகளையே சாரும். அதுவும் ஆளும் காங்கிரஸுக்கு ஜால்ரா போடாது நடுநிலை நிற்கும் பத்திரிகைகளுக்கு ஒரு சபாஷ் போடவே வேண்டும்.

1984இல் பதவியில் இருந்த பிரதமர் ராஜீவ் காந்தியும் போபாலை உள்ளடக்கிய மத்தியபிரதேச மாநிலத்தின் அன்றைய முதல்வர் அர்ஜுன் சிங்கும் தெரிந்துகொண்டே பிரதான குற்றவாளியைத் தப்பவிட்ட தான செய்தி இந்தியபிரதேசத்தையும் மட்டுமன்றி முழு உலகையுமே அதிரவைத்துள்ளது. ராஜீவ் காந்தியின் பெயர் இதில் சம்பந்தப்பட்டதாக கருதப்படுவதால் இந்தியாவின் பிரதமருக்கும் அவர் சார்ந்த காங்கிரஸுக்கும் பெரும் அவப்பெயர் இதனால் ஏற்பட்டுள்ளது. கல்விமான், புத்திஜீவி, ஊழலற்ற நேர்மையாளர் எனப் பெயர் பெற்ற பிரதமா மன்மோகன்சிங் இது குறித்து பெரும் கவலை கொண்டுள்ளார். விஷயம் கையைமீறினால் ராஜினாமாச் செய்யவும் மன்மோகன் தயாராகி வருகிறார் என்றும் கூறப்படுகிறது. எதிர்க்கட்சிகளோ வெறும் வாய்க்கு மெல்ல அவல் கிடைத்த கதையாக காங்கிரஸ் கட்சியை வருத்தி வருகின்றன.

கடந்த வாரங்களில் இந்த விபத்து குறித்த வழக்கு விசாரணை முடிந்து வழங்கப்பட்ட தீர்ப்பில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் பெரும்பாலானோர் விடுவிக்கப்பட்டனர். ஏழு பேருக்கு மட்டும் மிக அற்ப. இரண்டு ஆண்டு தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. இதனை அடுத்தே அனர்த்தம் நடந்தவிதம், குற்றவாளி தப்பியது குறித்த புதிய தகவல்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. அவ்வகையில் குறைந்த தண்டனை வழங்கிய நீதிபதி ஒரு விதத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கும் வழிக்கு இட்டுச் சென்றுள்ளார் எனலாம். இவர் இவ்வாறு அற்ப தீர்ப்பை வழங்கியதால்தான் மறைந்திருந்த பலரும் இதில் முழு ஆர்வத்துடன் இறங்கியுள்ளனர்.

1984 டிசம்பர் 3ஆம் திகதி இரவு போபால் நகரம் வேதனையில் வெந்து கதறியது. லட்சக் கணக்கானோர் உடல் உபாதை அடைந்தனர். 15,000பேர் மரணித்தனர். ராஜீவ் அரசு இதை மூடிமறைந்து 3,000 பேர் தான் உயிரழிப்பு என்று பறைசாற்றியது. போபால் நகரின் புறநகர்ப்பகுதியில் அமைந்திருந்த யூனியன் காபைட் எனும் பூச்சி நாசினி தொழில்சாலையில் ஏற்பட்ட கசிவு உண்மையில் ஒரு விபத்தல்ல, திட்டமிட்டு நடத்தப்பட்ட இரசாயன பரீட்சை என்பது பலருக்குத் தெரியாது.

அமெரிக்க பன்னாட்டு பணமுதலையான யூனியன் காபைட் நிறுவனம் படித்த மக்கள் கூடுதலாக வாழும் அமெரிக்காவில் தனது பருப்பு வேகாது என்பதால் கல்வியறிவு குறைந்த இந்தியாவில் மீதைல் ஐசோ சயனைட் என்ற இந்த இரசாயனத்தை பரீட்சை செய்து பார்க்க முடிவு செய்தது. பிரதமராக இருந்த இந்திரா காந்தியிடம் பெரும் சன்மானம் தருவதாக விலைபேசப்பட்டது. நேரு, காந்தி பாசறையில் வளர்ந்த தாய்த்தெய்வம் அதற்கு இணங்கவில்லை. 1984 அக்டோபர் 31 இல் அன்னை இந்திரா கொல்லப்பட்டது யூனியன் காபனைட் நிறுவனத்துக்கு வாய்ப்பாகப் போயிற்று. தமது தரகரான மத்தியபிரதேச முதல்வர் அர்ஜுன் சிங் ஊடாக புதிய பிரதமர் ராஜீவை அந்த நிறுவனம் மீண்டும் அணுகியது. கற்றுக்குட்டி அரசியல்வாதியான ராஜீவ் காந்தி இலங்கை விவகாரம், போபால் ஊழல் போன்றவை போல இவ்விவகாரத்திலும் சரியான ஆலோசனை பெறாது இணக்கம் தெரிவித்தார். அந்நேரம் அன்னை இந்திரா கொலையை அடுத்து லோக்சபாவை கலைத்து ராஜீவ் தேர்தலை சந்திக்க இருந்த நேரம். இவ்வாறான பாரிய உயிரிழப்பு நடந்தால் காங்கிரஸின் வாக்கு வங்கியை பாதிக்கும் என்ற கவலை கூட ராஜீவ் அரசுக்கு இருக்கவில்லை. காரணம் இந்திரா மரணத்தின் அனுதாப அலையில் கரைசேர முடியும் என்று அவர்களுக்கு தெரிந்திருந்தது.

விபத்து நடந்த அடுத்தடுத்த தினங்களில் யூனியன் காபைட் நிறுவனத்தலைவர் வாரென் அன்டர்சன் போபாலில் இருந்துள்ளார். எதிர்பார்த்ததை விட அதிக சேதம் உண்டானதால் அன்டர்சனும் முதலமைச்சர் அர்ஜுன் சிங்கும் கலவரமடைந்தனர். வன்முறைக் கும்பல்களால் அன்டர்சன் உயிருக்கு ஆபத்து வரலாம் என்று அச்சம் ஏற்பட்டது. உடனடியாக மாநில அரசின் விமானத்தில் ஏற்றப்பட்டு அவர் டில்லி அனுப்பப்பட்டார். அங்கிருந்து அமெரிக்காவையும் உடனடியாகவே சென்றடைந்தார். அந்த விமானத்தில் அன்டர்சன் மட்டுமே பயணித்தார் என்பதை விமானி சையத் கடந்தவாரம் உறுதி செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. போபால் மாவட்ட கலெக்டரும் பொலிஸ் உயரதிகாரியும் அவரை அர்ஜுன் சிங்கின் உத்தரவின் பேரில் பாதுகாப்பாக போபால் விமானநிலையத்தில் ஏற்றிவிட்டுள்ளனர். இதை மாவட்ட கலெக்டராக இருந்தவரும் பொலிஸ் உயரதிகாரியாக இருந்தவரும் உறுதிப்படுத்தி உள்ளனர். இதுதவிர அப்போது டெல்லியிலுள்ள அமெரிக்க தூதரகத்தில் இருந்த கனிஷ்ட ராஜதந்திரி ஒருவர் அன்டர்சன் தப்பிச்செல்ல ராஜீவ் அரசு உச்ச அளவில் உதவியது என கூறி இருப்பதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நிச்சயமாக அமெரிக்க தூதரக அதிகாரிகள் இதைப்பற்றி அறிந்திருப்பார்கள் என்பது ஏற்கத்தக்கதே. அன்றைய அரசின் உள்துறை அமைச்சராக இருந்த பி.வி.நரசிம்மராவுக்கும் இது விஷயம் தெரியும் என்ற செய்திகள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன. இது மட்டுமன்றி ராஜீவின் பிரத்தியேக செயலராக இருந்த பி.சி. அலெக்ஸாண்டர் ராஜீவ் அரசு அன்டர்சன் தப்ப உதவியிருக்கலாம் என பத்திரிகைகளுக்கு பேட்டி அளித்துள்ளார். பின்பு அரசியலில் நுழைந்த அலெக்சாண்டர் காங்கிரஸில் சேர்ந்து பணியாற்றினார். எனினும் ஜனாதிபதியாக வர கடந்த 2 தடவைகளும் அவர் முயன்றார் என்றும் அதை சோனியா ஏற்கவில்லை என்றும் கூறப்படுகிறது. கோபமடைந்த அலெக்சாண்டர் பி.ஜே.பியில் போய் சேர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. எனவே ஜனாதிபதி பதவி தராத கோபத்தில் உளறுகிறார் என்று காங்கிரஸ் கூறுகிறது.

எவ்வாறாயினும் ராஜீவ்காந்தி, நரசிம்மராவ், அர்ஜுன் சிங் என வரிசையாக காங்கிரஸ் பெரும் தலைகளின் பெயர் இந்த பாதகச் செயலுடன் இணைத்து கிசுகிசுக்கப்டுவதால்



அர்ஜுன் சிங்

காங்கிரஸ்கட்சி கதிகலங்கிப் போய் உள்ளது. அதிலிருந்து தப்ப, வழக்கை தரம் இ.பி.கோ 302 பிரிவின் படி அன்றி 306இன் படி விசாரிக்க முன்னாள் தலைமை நீதிபதி ஏ.எம். அஹமதி தான் உத்தரவிட்டார். அதனால் தான் குற்றவாளிகள் தப்பமுடிந்தது என அக்கட்சி கூறிவருகிறது. இந்த வழக்கு அமெரிக்காவில் விசாரிக்கப்பட்டால் பில்லியன் கணக்கில் நஷ்டஈடு வழங்க நேரும் என்பதால் யூனியன் காபைட் நிறுவனம் கடும் சிரமப்பட்டு வழக்கு அமெரிக்காவில் விசாரிக்கப்படாமல் இந்தியாவில் விசாரிக்கப்பட பார்த்துக் கொண்டது. இந்திய நீதிமன்றங்கள் நஷ்டஈடாக-அது வும் இவ்வாறான வழக்குகளில் பெரும் தொகையை விதிப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தப்புவது சுலபம் என்பதாலேயே அன்டர்சன் இந்தியாவில் வழக்கை சந்திக்கத்தயாரானார். அவர் எதிர்பார்த்தபடியே குறைந்த நஷ்டஈடு, தண்டனையுடன் இந்திய

(19 ஆம் பக்கம் பார்க்க)



## உயிர் வலிக்கும் கணங்கள்....!!

# ஓர் இடம்பெயர்ந்த தாயின் அவலம் !

இலங்கைத்தீவில் போர் ஓய்ந்து விட்டது. ஆனால் போரின் வடுக்கள் மாறாது இன்றும் மனதுக்கு துயரத்தை பறைசாற்றுவது வவுனியா நிவாரணக் கிராமங்களும், நகர வைத்தியசாலையுமே.

தம்மை நோக்கி ஓடிவரும் ஒவ்வொரு நோயாளிக்கும் நேர்த்தியுடன் மருத்துவம் அளித்து போரில் காயத்துக்கும், வெளித் தெரியா மனக்காயத்துக்கும் ஆறுதல் அளிக்கும் அன்புத் தாயாக துரிதகதியில் இயங்கிக் கொண்டிருக்கிறது வவுனியா பொது மருத்துவமனை.

அவ்வாறான ஒரு காலைப் பொழுதில் நோயாளர்கள் முண்டியடித்து வைத்தியர்களை சந்திக்க காத்திருக்கின்றனர். தாதியர்களும், ஏனைய பணியாளர்களும் கடும் பிரயத்தனத்தின் மத்தியில் நோயாளர்களை அமரவைத்து ஒழுங்கு முறைக்கு அமைவாக வைத்தியர்களை அனுப்பிக் கொண்டிருக்கின்றனர். நானும் அவர்களில் ஒருவராக மருந்து பெற்றுக்கொள்வதற்காக நீண்ட வரிசையில் ஓர் இடத்தில் அமர்ந்து கொண்டேன். சோகமே வாழ்வு போல் வாடி வதங்கி எதையோ எதிர்பார்த்து காத்திருப்பது போன்று ஓர் இளம் தாய் என்னருகே அமர்ந்திருந்தார். நெற்றியில் பொட்டு இல்லை. வாரி முடியப்படாது கலைந்து போய்க்கிடந்த கூந்தல். அப்போது என் மனக்கண்ணில் ஓடியது, 'இந்தத் தாய் வன்னிப் போரில் தன் வாழ்வை தொலைத்த ஓர் அபலை' என்று. அப்போது என் உணர்வுகளை மீறி, ''அம்மா உங்களுக்கு சுகயீனமா?'' என்று கேட்டேன். சோகமே வாழ்வாக தன் ஒவ்வொரு நொடியையும் கழிக்கும் ஒரு தாயுள்ளம் அவர். அவருடைய கதைகள் என் மனத்தை நெருடின.



இராமநாதன் நலன்புரி முகாம் தான் இவரின் தற்காலிக வாழ்விடம். இவரின் சொந்த இடம் தர்மபுரம், கிளிநொச்சி. ''பல்வேறு இன்னல்கள் மத்தியிலும் வன்னியில் இருந்து உயிர்களை மட்டும் கையில் பிடித்தவாறு முகாம் வந்து சேர்ந்தோம்'' என்றார் இவர்.

இவருடைய உள்ளக்குமுறலை நான் எதிர்பார்க்கிறேன் என உணர்ந்த அந்த தாயுள்ளம் தன் மன ஆறுதலுக்காக தன் கதையை என்னிடம் பகிர்ந்து கொண்டார்.

''எனக்கு ஒரு மாதத்துக்கு முன் முகாமில் உள்ள வைத்தியசாலையில் குழந்தை கிடைத்தது. ஒன்பது மாதத்தில் குழந்தை கிடைத்ததால் குழந்தை கிடைத்தவுடன் நான் மயக்கமடைந்து விட்டேன். நான் மயக்கம் அடையும் போது குழந்தை உயிருடன் பிறந்து அழும் சத்தம் எனக்குக் கேட்டது. பிறகு எனக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை'' இப்படிச் சொல்லி பெருமூச்சு விட்டவர், ''பிறகு...?'' என்று நான் கேட்கவே, ''குறைமாதத்தில் குழந்தை கிடைத்ததால் எனக்கும் குழந்தைக்கும் ஏற்படப்போகும் உயிராபத்தை தவிர்க்கும் பொருட்டு முகாம் வைத்தியர்களும், தாதியர்களும் என்னையும் வேறு சில தாய்மார்களையும் அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளையும் அவசர சிகிச்சையின் பொருட்டு அவசர அவசரமாக மருத்துவ காவு வண்டியில் ஏற்றி செட்டிக்குளம் கொண்டு சென்று அங்குள்ள வைத்தியசாலையில் அனுமதித்தனர். நீண்ட நேரம் சிகிச்சையின் பின்பு நான் கண் விழித்துப் பார்த்தேன். என்னருகில் குழந்தையைக் காணோம். என்ன நடந்தது என அறியாத நான் அழுது குழறினேன். அங்கிருந்த தாதி ஒருவரிடம் கேட்டபோது, ''அம்மா உங்கள் குழந்தை இறந்துவிட்டது'' என்றார். நான் மயங்கும் போது எனது குழந்தை உயிருடன்தான் இருந்தது. ஏதோ நடந்துவிட்டது என நினைத்து நான் அங்கிருந்த பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைக் கொடுத்துவிட்டு எனது முகாம் சென்றடைந்தேன்'' என்றார்.

தம்பி என்று மேலும் தன் கதையைச் சொல்லத் தொடங்கினார் அப்பெண்.

''சரியாக ஒரு மாதத்தை தாண்டிய நிலையில் பொலிஸாரிடமிருந்து தகவல் ஒன்று வந்தது. 'உங்கள் குழந்தை வவுனியா பொது மருத்துவமனையில் இருக்கிறது. வந்து பெற்றுக் கொள்ளுங்கள்' என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனக்கோ சந்தோசம். உடனே முகாம் பொலிஸுக்குத் தகவல் கொடுத்து அவர்களின் துணையுடன் அந்த வைத்தியசாலைக்கு வந்தேன். நேற்று வந்த நான் இன்னும் என் பிள்ளையைப் பார்க்கவில்லை. என் குழந்தை பிறந்த சமநேரத்தில் கிடைத்த இன்னுமொரு குழந்தையும் இருப்பதால் அதற்கான வைத்திய பரிசோதனையை மேற்கொண்டு உங்கள் குழந்தை எதுவென உறுதிப்படுத்திவிட்டு தருகிறோம் என்கிறார்கள். இரண்டும் பொம்புளைப் பிள்ளைகள் தம்பி'' என்று கூறி நிமிர்ந்த அந்தத் தாயாரின் கண்களிலிருந்து நீர் கசிந்தது. அப்போது இவரைக் கூட்டி வந்த பொலிஸ் அதிகாரியும், இத்தகவல் உண்மையே எனக் கூறி யோசிக்க வேண்டாம் இன்னும் கொஞ்ச நேரத்தில் உங்கள் பிள்ளை கிடைத்துவிடும் என ஆறுதல் கூறினார். என் மனமோ உடைந்து சுக்குநூறாவது போல் உணர்ந்தேன். போரின் கொடுமை இந்த தாயுள்ளத்தை நீண்ட பாதிப்புக்குள் தள்ளிவிட்டது என்பதை மட்டுமே என்னால் உணர முடிந்தது.

என் வாயிலிருந்து ஆறுதல் வார்த்தைகளே வர மறுத்தன. இவரின் சிந்தனையை மாற்ற ''அம்மா உங்கட குடும்பம்..?'' என்றதுமே கண்கள் கலங்கியபடி ''தம்பி வன்னியில் பல தடவைகள் இடம் பெயர்ந்து மாத்தளனில் இறுதியாக இருந்தோம். ஒரு நாள் இங்கால வர வெளிக்கிட்டு வரேக்க என்ர கணவரை எங்கையோ தவறவிட்டிட்டன். எனக்கு எவரது உதவியும் இல்லை. தேடவேண்டிய இடமெல்லாம் தேடிட்டன். எனக்கு இரண்டு பெண்பிள்ளைகள். இதற்கு முதல் அம்மா இறந்திட்டா. அப்பான்ர துணையில் நான் வாழுகிறேன். முகாமில் தருகின்ற பொருட்களில் தான் என்ர சீவியமும் போகுது'' அந்த தாயின் கண்களிலிருந்து நீர் நிலத்தில் சொட்டியது.

**அந்த இறுதி நாட்களில் வன்னியில் நேர்ந்த அவலங்கள்**

''அழாதேயுங்க... அம்மா உங்கட குழந்தை உங்களுக்கு நிச்சயம் கிடைத்துவிடும் என்று அடுத்தடுமாறி வார்த்தைகள் ஏதுமின்றி ஆறுதல் கூறிய நான் மீதி அறிய நேரமில்லாதவனாக கடவுளே துயருறும் இந்த தாயாருக்கு கருணை காட்டு என்று மனதார பிரார்த்தித்துக் கொண்டு எல்லாமே இந்தக் கொடிய போரின் வடுக்களே என்று மனதில் எண்ணியவாறு அந்த தாயிடம் இருந்து விடைபெற்றுச் சென்றேன்.

ஜெ. சுதா

# இலங்கையைக் கூண்டில் நிறுத்துமா இங்கிலாந்து?





இலங்கை ராணுவத்தின் போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை செய்யப் பட வேண்டும் என்று சர்வதேச மனித உரிமை அமைப்புகள் வலியுறுத்திவரும் நேரத்தில், அந்தக் கோரிக்கைக்கு வலு வூட்டுவதாக இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்று நடைபெற்றது. கடந்த 16ஆம் திகதி நடைபெற்ற அந்த விவாதத்தில், தொழில் கட்சி, கன்சர்வேட்டிவ் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு பேசினர். இறுதியில், அரசு தரப்பில் அமைச்சரும் பதில் கூறியுள்ளார். இந்த விவாதம், இலங்கை அரசுக்கு நெருக் கடியைக் கொடுப்பதாக அமைந்துள்ளது.

விவாதத்தைத் தொடங்கிவைத்துப் பேசிய தொழில் கட்சி உறுப்பினர் சியோபின் மெக் டொனாக், பல்வேறு ஆதாரங்களை முன்வைத்து இலங்கையில் நடை பெற்ற போர்க் குற்றங்கள் குறித்து சுயேச்சையான ஒரு விசாரணை நடத்தப் பட வேண்டும் என்று வலியுறுத்தினார். ''கடந்த ஆட்சியின்போதே பல்வேறு உறுப்பினர்கள் வலியுறுத்தியதை முன்னிட்டு, இலங்கைக்கு அளிக்கப்பட்டு வந்த பல்வேறு சலுகைகள் ரத்துச் செய்யப் பட்டன. ஐரோப்பிய யூனியன் விசாரணை ஒன்றை மேற்கொண்டு இலங்கையில் மனித உரிமைகள் பெருமளவு மீறப்படுவ தாகக் கண்டறிந்தது. அதன் காரணமாக, இலங்கைக்கு வழங்கி வந்த சிறப்புப் பொருளாதாரச் சலுகையான 'ஜி.எஸ்.பி. பிளஸ்' ரத்துச் செய்யப்பட்டது. தவிர, காமன்வெல்த் நாடுகள் தமது மாநாட்டை அடுத்ததாக இலங்கையில் நடத்துவதாக இருந்தது. அதுவும் ரத்துச் செய்யப் பட்டது. இந்த விவாதத்துக்கு நான் அழைப்பு விடுக்க முக்கியமான காரணம், கடந்த ஓர் ஆண்டாக இலங்கை குறித்து கவலை அளிக்கும் பல உண்மைகள் வெளிப்பட்டு வருகின்றன. குறிப்பாக, 'சர்வதேச நெருக்கடிகள் குழு' வெளியிட்ட 'இலங்கையில் போர்க் குற்றங்கள்' என்ற அறிக்கையும், நெல்சன் மண்டேலாவால் 2007ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட 'மூத்த அரசியல் தலைவர்களின் குழு' அளித்த அறிக்கையும் இதை உறுதி செய்வதாக உள்ளன. மூத்த தலைவர்களின் குழு சார்பில் டெஸ்மாண்ட் டுட்டு மற்றும் லக்தார் ப்ராஹிமி ஆகியோர் வெளியிட்ட அறிக்கையில், 'போர் நடந்த கடைசி மாதங்களில் சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் இலங்கை அரசால் பலமுறை கடுமையாக மீறப்பட்டுள்ளன' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் கமிஷன் நம்பகமானதாக இல்லை என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது!'' என்றார் அவர்.

இந்த விவாதத்தில் கலந்துகொண்ட தொழில் கட்சி எம்.பி-யான கெய்த் வாஸ் பேசும்போது, ''கடந்த அரசு, இலங்கை விவகாரத்தை ஆய்வு செய்வதற்காக சிறப்புத் தூதர் ஒருவரை நியமித்தது. இந்த அரசும் அதேபோல் ஒருவரை நியமித்து, அங்கு நடை பெற்ற போரின் மோசமான விளைவுகள் குறித்து ஆய்வு செய்வதற்கு ஏற்பாடு செய்யுமா?'' என்று கேட்டார். விவாதத்தில் பேசிய, லீ ஸ்காட் என்ற நாடாளுமன்ற உறுப்பினர், ''சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பது அவசியம் தான். அதே சமயத்தில், அங்கு இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கி இருக்கும் தமிழ் மக்கள் அனைவரும் தங்களது சொந்த இடங்களுக்கு பாதுகாப்பாக அனுப்பப்பட வேண்டும். ஒருவர் கூட முகாமில் வைத்திருக்கப்படக் கூடாது. இது உடனடியாக நிறை வேற்றப்பட வேண்டும்!'' என்று வலியுறுத்தினார்.

ஆண்ட்ரு ...வ் என்ற உறுப்பினர், ''இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா. சபை எதுவும் செய்யாமல் தோல்வி அடைந்து விட்ட நிலையில் உள்ளது. இந்தப் பிரச்சினையில் மேற்கத்திய நாடுகள், குறிப்பாக இங்கிலாந்து முனைப்பான பாத்திரத்தை ஆற்ற வேண்டும். போர்க் குற்றங்கள் குறித்து சுதந்திரமான ஒரு விசாரணையை ஏன் இங்கிலாந்தே முன்வந்து மேற்கொள்ளக் கூடாது?'' என்று கேள்வி எழுப்பினார். கன்சர் வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ராபர்ட் அல்போன், ''இலங்கையில் பத்திரிகையாளர்களின் சுதந்திரம் உறுதி செய்யப்பட வேண்டும். அங்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்குத் தேவையான அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்!'' என்று வலியுறுத்தினார்.

'சர்வதேச நெருக்கடிகள் குழு' வெளியிட்ட அறிக்கையில் இருந்து பல பகுதிகளை வாசித்துக் காட்டி உறுப்பினர்களின் கவனத்தை ஈர்த்த சியோபின் மெக் டொனாக், ''இந்த அறிக்கை சர்வதேச சமூகத்துக்கு இருக்கும் பொறுப்பை வலியுறுத்தியுள்ளது. இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் குறித்து முழுமையான விசாரணை ஒன்றை மேற்கொள்ள வேண்டியது சர்வதேசச் சமூகத்தின் கடமை. என் நாடாளுமன்றத் தொகுதியைச் சேர்ந்த பலருடைய குடும்ப உறுப்பினர்கள் இலங்கைப் போரில் சிக்கிக்கொண்டு பாதிக்கப்பட்டுள்ளனர். பலர் அங்கு முகாம்களில் பல மாதங்கள் தங்கியிருந்து மிக மோசமான கொடுமைகளை அனுபவித்துள்ளனர். அவர்கள் சொல்லும் கண்ணீர்க் கதைகளைக் கேட்டு மனம் உருகாதவர்கள் இருக்கவே முடியாது!'' என்று கூறினார்.

தொழில் கட்சியைச் சேர்ந்த பேரி கார்டினர், ''எனது தொகுதியைச் சேர்ந்த ஒருவர் இலங்கைக்குச் சென்றபோது கொழும்பு விமான நிலையத்திலேயே கைது செய்யப்பட்டார். நான் அந்த நாட்டின் வெளியுறவுச் செயலாளருக்கு கடிதம் எழுதி இந்த விஷயத்தில் தலையிடுமாறு வேண்டினேன். இதைப் பார்க்கும்போது, பல்வேறு நாடுகளில் தங்கியிருக்கும் இலங்கைப் பிரஜைகள் தங்களது நாட்டுக்குத் திரும்ப முடியாத நிலை உள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. தமிழர்களைத் தொடர்ந்து இலங்கை அரசு வேட்டையாடி வருகிறது என்பதற்கு இதுவும் ஒரு சான்றாக உள்ளது!'' என்று கூறியுள்ளார்.

கேரத் தோமஸ் என்ற உறுப்பினர் பேசும்போது, ''நமது நாடு, இந்தியா மற்றும் சீனாவுடன் எத்தகைய உறவை வைத்துள்ளது? இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்களைப்பற்றி விசாரிக்கும்போது, இந்த இரு நாடுகளும் என்ன மாதிரியான பங்கை ஆற்றப் போகின்றன என்பது முக்கியம். எனவே, இலங்கையின் அண்டை நாடுகளான சீனா மற்றும் இந்தியாவுடன் நம் உறவு எத்தகையது என்பதும் பரிசீலிக்கப் பட வேண்டும்!'' என்று வலியுறுத்தினார்.

சியோபன் மெக் டொனாக் குறுக்கிட்டுப் பேசுகையில், ''குழந்தைகள் அவர்களுடைய பெற்றோர்களிடம் இருந்து பிரிக் கப்பட்டுள்ளனர். மருத்துவமனைகள் மீது குண்டுகள் வீசப்பட்டும், கண் மூடித்தனமாகச் சுடப்பட்டும் ஏராளமான தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அண்மைக் காலமாக, இலங்கை அரசு மேலும் பைத்தியக்காரத்தனமாகச் செயல்பட்டு வருகிறது. அந்த நாட்டின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்ஷே, பி.பி.சி-க்கு அளித்த பேட்டியில்... 'இலங்கையின் முன்னாள் ராணுவத் தளபதி சரத் பொன்சேகாவைத் தூக்கிலிடுவோம்' என்று கூறியுள்ளார். அரசின் உயர் பதவிகளில் இருந்தவர் கள்தான் போர்க் குற்றங்களுக்கான ஆணை பிறப்பித்தார்கள் என்று பொன் சேகா கூறியதனால்தான் இப்படி மிரட்டி உள்ளனர். கடந்த அக்டோபர் மாதத்தில் ஐரோப்பிய யூனியன் வெளியிட்ட அறிக் கையும்கூட இலங்கையில் நடந்த போர்க் குற்றங்களை உறுதி செய்துள்ளது. எனவே, போர்க் குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும். ஐ.நா. தலைமையிலான சர்வதேச விசாரணைதான் பொருத்த மானதாக இருக்கும்!'' என்று ஆணித்தர மான வாதங்களை எடுத்து வைத்தார்.

இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பதில் அளித்துப் பேசிய அயல்நாட்டு உறவுகளுக்கான அமைச்சர் அலிஸ்டர் பர்ட், ''கடந்த 30 ஆண்டுகளாக இலங்கையில் பலவிதமான அநீதிகள் நடைபெற்று வருகின்றன. அதற்கு ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. அங்கு நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிப்பதற்காக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்று ஐ.நா. பொதுச் செயலாளரிடம் இலங்கை அதிபர் ராஜபக்ஷ வாக்குறுதி அளித்துள்ளார். அதற்காக கமிஷன் ஒன்றையும் நியமித்துள்ளார். இன்றுகூட இலங்கை வெளியுறவு அமைச்சர் பெரீஸிடம் நான் பேசினேன். அங்கு நடைபெற்ற தவறுகள் குறித்து முறையான விசாரணை மேற்கொள்ளப் பட வேண்டும் என்று வலியுறுத்தி னேன்!'' என்று தெரிவித்தார்.

அப்போது குறுக்கிட்டுப் பேசிய மெக் டொனாக், ''தற்போதைய இலங்கை அரசு நியாயமான விசாரணையை மேற் கொள்ளும் என்று இங்கிலாந்து அரசு உண்மையிலேயே நம்புகிறதா? உலகி லேயே பத்திரிகையாளர்களுக்கு மிகவும் ஆபத்தான நாடு இலங்கைதான் என்று கூறப்படுவதை நமது பிரிட்டிஷ் அரசு அறியாதா?'' என்று கேள்வி எழுப்பினார். அதற்குப் பதில் அளித்த அலிஸ்டர் பர்ட், ''இலங்கையில் நடைபெற்ற அத்து மீறல்கள் குறித்து விசாரிக்க வேண்டிய கடமை, முதன்மையாக அந்த நாட்டைத் தான் சார்ந்தது!'' என்று கூறினார்.

அந்தச் சமயத்தில் இடைமறித்துப் பேசிய உறுப்பினர் ஹெய்த் வாஸ், ''அடுத்த முறை நீங்கள் இலங்கை வெளியுறவு அமைச்சரிடம் பேசும்போது, அந்த நாடு சீனாவைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றோடு ஒப்பந்தம் ஒன்றை போட்டுள்ளதுபற்றி கேட்க வேண்டும். அந்த நிறுவனம் இலங்கைக்குச் சென்று அங்கு போர்க் குற்றங்கள் தொடர்பான ஆதாரங்கள் எல்லாவற்றையும் அழிப்பதற்காக ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளது. இது தொடர்பான செய்திகள் பத்திரிகைகளில் வெளியாகி உள்ளன. எந்த ஒரு நியாயமான விசாரணையையும் இத்தகைய செயல்கள் கடுமையாகப் பாதிக்கும் என்பது அவர்களுக்குத் தெரியாதா? இப்படி ஓர் ஒப்பந்தம் போடப் பட்டிருப்பது உண்மைதானா? சீன நிறுவனம், போர்க் குற்றங்கள் தொடர் பான ஆதாரங்களை அழிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறதா என்பதை நீங்கள் உடனடியாக இலங்கை வெளியுறவு அமைச்சரிடம் கேட்க வேண்டும்!'' என்று வலியுறுத்தினார். நிச்சயம் விசாரிக்கிறேன் என்று அலிஸ்டர் பர்ட் வாக்குறுதி அளித்தார்.

தென் ஆபிரிக்க அரசின் இனவெறிக் கொள்கையை எதிர்க்கும் விதமாக, அந்த நாட்டுப் பொருட்களைப் புறக்கணித்தது போல இலங்கையைச் சேர்ந்த பொருட் கள் அனைத்தையும் புறக்கணிக்க வேண்டும் என்றும் இந்த விவாதத்தில் உறுப்பினர்கள் பலர் வலியுறுத்தினர்.

ஐக்கிய நாடுகளின் அரசியல் விவகா ரங்களுக்கான துணைப் பொதுச் செயலா ளர் லின் பாஸ்கோ இலங்கைக்குப் பயணம் செய்து அங்கு தமிழ் மக்களை சந்தித்துக் கொண்டு இருக்கும் நேரத்தில், இங்கி லாந்து நாடாளுமன்றத்தில் நடந்துள்ள இந்த விவாதம் மேலும் முக்கியத்துவம் பெறுகிறது. இலங்கையில் நடைபெறு கின்ற மீள்குடியேற்றம், கண்ணிவெடி அகற்றும் பணிகள் ஆகியவற்றைப் பார்வையிட்ட லின் பாஸ்கோ, அங்கு நடைபெறும் புனரமைப்புப் பணிகள் தொடர்பாகவும் விசாரணை நடத்தினார். வற்றாப்பளை, குமாரபுரம் ஆகிய பகுதி களுக்குச் சென்று தமிழ் மக்களின் நிலை மைகளை நேரடியாக அவர் கேட்டறிந்தார். இதனிடையில், அமெரிக்க அதிபர் ஒபா மாவின் மூத்த ஆலோசகர்கள் இருவர் ஏற் கெனவே இலங்கைக்குச் சென்று ஆய்வு களில் ஈடுபட்டுள்ளனர். டேவிட் பரஸ்மன், சமந்தா பவர் ஆகிய இருவரும் இலங்கை யில் தங்கி பல்வேறு அதிகாரிகளையும் பொதுமக்களையும் சந்தித்து வருகின்றனர்.

இலங்கையை மிரட்டும் விதமாகப் பேசி வந்த அமெரிக்கா, கடந்த சில நாட்களாக இலங்கைக்கு ஆதரவாகப் பேச ஆரம்பித்துள்ளது. ''சர்வதேச விமர்சனங்களைப் பற்றி கவலைப்படாமல், இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள புதிய நல்லிணக்கக் குழு தனது பணியைச் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும்!'' என்று ஹிலாரி கிளின்டன் அண்மையில் பேசியது தமிழ் மக்களுக்கு அதிர்ச்சி அளிப்பதாக இருந்தது.

சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் அழுத்தம் காரணமாக ஏதாவது நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்ற நெருக்கடியில், தனது மூத்த அதிகாரியான லின் பாஸ்கோவை இலங்கைக்கு ஐ.நா சபை அனுப்பியுள்ள சூழலில், அமெரிக்க அதிபரின் மூத்த ஆலோசகர்கள் இலங்கைக்கு வந்திருப்பது சந்தேகம் ஏற்படுத்துவதாக உள்ளது. இலங்கை அரசாங்கத்தைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கையில் அமெரிக்கா இறங்கி இருக்கிறதோ என்ற ஐயம் இப்போது எழுந்துள்ளது!

*(நன்றி: இணையம்)*

# இந்தியாவில் ஓரினச்சேர்க்கைக்கு ஊக்குவிப்பா?

'சென்னையில், ஓரினச் சேர்க்கையாளர் பேரணி நடத்துவதற்கு அனுமதிக்க வேண்டும்' என்று தன்னார்வ அமைப்புகளும், 'அனுமதிக்கவே கூடாது' என்று இந்து மக்கள் கட்சியும் நேருக்கு நேராக முறைத்து நிற்க... முடிவெடுக்க முடியாமல், விழி பதுங்கி நிற்கிறது தமிழ்நாடு காவல்துறை!

ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு எதிரானசெயல்களைத் தடுத்து நிறுத்தவும், உலகம் முழுவதும் இதற்கு ஆதரவாக பிரசாரம் நடத்தவும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஒவ்வொரு ஜூன் மாதமும் நிகழ்ச்சிகள் நடத்தும். தமிழகத்திலும் வருகிற 27ஆம் திகதி சென்னை மெரினா கடற்கரையில் 'ஓரினச் சேர்க்கையாளர்கள் உரிமைப் பேரணி' நடக்க விருந்த நேரத்தில்தான்... இப்படி ஒரு களேபரம்!

பேரணி தொடர்பான பணிகளில் பரபரப்பாக இயங்கிவரும் லெஸ்பயன் பெண் ஒருவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

''நாங்களும் மனுஷிகள்தான். எங்களுடைய உணர்வுகளை மட்டும் ஏன் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள்? இயற்கைக்கு மாறான உறவு என்று இதை எப்படிச் சொல்கிறார்கள்? உடலளவில் பெண்ணாக இருந்தாலும், ஆணின் மீதான ஈர்ப்பே எனக்கு வரவில்லை.. இப்போதும், என் பார்ட்னருடன் இருக்கும்போது என்னை ஓர் ஆணாகத்தான் உணர்கிறேன். மற்றவர்களைப் படைத்த அதே இயற்கைதான் எங்களையும் படைத்து இப்படிப்பட்ட உணர்வுகளைக் கொடுத்திருக்கிறது.

எனது 13 வயதில், உடன் படித்த தோழியிடம்தான் எனக்கு ஈர்ப்பு ஏற்பட்டது. அவளுக்கும் அதே உணர்வு. எங்களுடைய துரதிர்ஷ்டம், எனது உணர்வுகளை என் பெற்றோர் புரிந்த அளவுக்கு, அவளது பெற்றோர் புரிந்து கொள்ளவில்லை. அதனால், வலுக்கட்டாயமாக எங்களைப் பிரித்து, அவளுக்கு மாப்பிள்ளை பார்த்துத் திருமணமும் செய்துவைத்துவிட்டனர். அந்தத் துக்கத்தில் தற்கொலை முயற்சியில் இறங்கிய என்னைக் காப்பாற்றியதே இந்தத் தொண்டு நிறுவனம்தான்!'' என்றார் உருக்கமாக!

'தொண்டு நிறுவனங்கள் ஓரினச் சேர்க்கையை உள்நோக்கத்தோடு ஊக்குவிக்கின்றனவா?' என்று 'இந்திய சமுதாய நலவாழ்வு நிறுவன' இயக்குநர் ஹரிஹரனிடம் செய்தியாளர்கள் கேட்டனர்.

''இந்தியாவில் மட்டும் சுமார் 50 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் ஹோமோ செக்ஸில் ஈடுபாடுடையவர்கள் என்று ஒரு கணக்கு உண்டு. இதில், 10 லட்சம் பேர், காலப்போக்கில் வழமைநிலைக்கு மாறிக்கொள்ளவும் செய்கிறார்கள். ஆனால், மீதம் உள்ள 40 லட்சம் ஓரினச் சேர்க்கையாளர்கள், மனதளவில் மட்டுமல்லாமல், உடலளவிலும் பெண்ணுக்கே உரிய வனப்பான உடல் உறுப்புகளுடன் இயற்கையாகவே வளர்ச்சி அடைந்திருப்பதை நாமே கண்கூடாகப் பார்க்க முடிகிறது. லெஸ்பியன்கள் பற்றிய சரியான புள்ளிவிவரங்கள் இல்லை. உண்மை இப்படி இருக்க, ஓரினச் சேர்க்கையை தன்னார்வ அமைப்புகள் ஊக்கப்படுத்துவதாகச் சொல்வது கொடுமையான கற்பனை!

பாலினரீதியில் ஒடுக்கப்பட்டவர்களின் நல்வாழ்வு நிதியாக ஒதுக்கப்படும் கோடிக்கணக்கான ரூபாய்களில் வெறும் ஐந்து சதவிகிதம் மட்டும்தான் தொண்டு நிறுவனங்களின் வழியாகச் செயல் படுத்தப்படுகிறது. ஓரினச் சேர்க்கையை குற்றமாகப் பார்க்கும் இ.ப.கோ. 377ஆவது பிரிவு என்பது பிரிட்டிஷ் பாதிப்பில் இயற்றப்பட்ட பழைய காலச் சட்டம். காலப்போக்கில் பிரிட்டிஷாரேகூட தவறை உணர்ந்து ஓரினச் சேர்க்கையை அங்கீகரித்து, சட்டத்தைத் திருத்திவிட்டார்கள். ஆனால், நாம்தான் இன்னமும் அந்தப் பழசான சட்டத்தையே பிடித்துக்கொண்டு தொங்குகிறோம்...'' என்றார் பதிலுக்குப் பொங்கியபடி!



த்ரிஷா கிட்டத்தட்ட சாக்லேட் அடிமை. எந்த அளவுக்குத் தெரியுமா? சமீபத்தில் ஒரு தெரு நாயைத் தத்தெடுத்தவர், அதற்கு 'கேட்பரி' என்று சாக்லேட் பெயரைச் சூட்டியிருக்கிறார்.

## த்ரிஷா சாக்லெட்



உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி ஆரம்பித்ததுமே, 'கால்பந்து வீரர்களின் மனைவி மற்றும் தோழிகளில் சிறந்த அழகி யார்?' என்ற போட்டியும் களைகட்டும். இம் முறை அப்போட்டியில் முதல் இடத்தைத் தட்டிச் சென்றிருப்பவர்... இங்கிலாந்து அணியின் உதவியாளர் டேவிட் பெக்காமின் மனைவி விக்டோரியா.

## விக்டோரியா !



டெப்ராலி லோரென்செனா என்கிற பெண்ணைச் சமீபத்தில் வேலையைவிட்டுத் நீக்கியது அமெரிக்க சிட்டி வங்கி. 'அவரது அழகைப் பிற ஊழியர்கள் ரசித்துக்கொண்டே இருப்பதால், அலுவலகத்தின் பணித் திறன் பாதிக்கப்படுகிறது' என்பதுதான் காரணம். 'மிக செக்ஸியாக இருக்கிறார்' என்பதற்காக அமெரிக்காவில் வேலையைவிட்டு நீக்கப்பட்ட முதல் பெண் டெப்ராலி. ஆனால், அம்மணி மீண்டும் போராடி அந்த வேலையைத் தக்கவைத்துக் கொண்டார்.

## அமெரிக்காவைக் கலக்கினார்

# அணு அணுவாக மரணம்



தண்டனைகள் பலவிதம்... ஒவ்வொன்றும் ஒருவிதம்! பழங்காலத்தில் தண்டனைகள் எல்லாமே குரூரமாக யோசித்துக் கொடுக்கப்பட்டன. அதில் ஒன்று, எதிரிகளின் தோலை உரிப்பது. 'தோலை அகற்றிவிட்டால், இறப்புக்குப் பிறகு மறுவாழ்வு குற்றவாளிக்குக் கிடைக்காது' என்ற மதம் சார்ந்த நம்பிக்கையும் காரணம். எதிரிகளுக்கு எச்சரிக்கை கொடுப்பதற்காக, உரிக்கப்பட்ட தோலைப் பொதுமக்கள் பார்வைக்கும் வைப்பார்கள். பார்க்கும் மக்களைப் பதறவைப்பதே தண்டனைகளின் நோக்கமாக இருந்தது. ஐரோப்பிய நாடுகளில் முன்பு ராஜ துரோகிகளை ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் தலையை வெட்டி, சரிவான தளங்களில் உருட்டிவிடுவார்கள். பார்ப்பவருக்குத் துரோகம் செய்ய மனசு வருமா?

பெற்றோர்களைக் கொல்வது போன்ற குற்றங்களுக்கு சீனாவில் கி.பி. 900 களிலிருந்து 1905 வரை உள்ள காலகட்டத்தில் வழங்கப்பட்ட தண்டனைதான் கொடூரமானது. குற்றவாளியைக் கட்டிவைத்து ஆங்காங்கே சதையை அறுப்பார்கள். இதற்கு சீன மொழியில் லிங்ச்சி என்று பெயர். குற்றவாளி சுயநினைவை இழந்தால், வலி தெரியாதே? நினைவை இழக்காமல் இருப்பதற்கு மருந்து கொடுப்பார்கள். முதலில் கண்கள், அப்புறம் காது, மூக்கு உதடு, நாக்கு, விரல்கள் என்று ஒவ்வோர் உறுப்பாக எடுப்பார்கள். குற்றவாளி உயிரைவிடுவதற்கு மூன்று நாட்கள் ஆகிவிடும். குற்றவாளியின் உறவினர்கள் லஞ்சம் கொடுத்தால், தொண்டையை அறுத்து உடனே உயிர் எடுக்கப்படும்!

# வீட்டின் உள்ளே இன்பம்

குமாரசாமி தன் வீட்டருகே வீதியில் குனிந்தபடி எதையோ தேடிக்கொண்டிருந்தார்.

அலுவலகம் முடிந்து வந்த அவரின் மகன் ராமு, ''என்னப்பா தேடுறீங்கள்?'' என்று கேட்டபடியே சைக்கிளை ஸ்டான்டில் விட்டான்.

''ஒரு ஊசி கீழே விழுந்துவிட்டது அதைத்தான் தேடுறேன்'' என்றார் குமாரசாமி.

''எங்கே போட்டீங்கள்?''

''வீட்டில்...''

''அட! என்னப்பா, இவ்வளவு வயதாகி இருந்தும் எங்கே தொலைத்தீங்களோ அங்கே போய்த் தேடாமல் தெருவில் வந்து தேடிக் கொண்டிருக்கிறீங்களே?'' என்று எரிச்சலோடு கேட்டான் ராமு.

''நீ செய்வது போலத்தான் நானும் செய்கிறேன் அமைதியும் சந்தோஷமும் வீட்டுக்குள்ளேயே இருக்கின்றன. ஆனால் நீ என்னவோ அதை வெளியில்தான் தேடிக்கொண்டிருக்கிறாய். அப்படித் தேடி காலம், திறமை அனைத்தையும் வீணடித்து வாழ்கிறாய்'' என்றார்.

ராமு புத்தி தெளிந்தவனாய் அன்று முதல் சந்தோஷத்தை மனைவி, பிள்ளைகள் முகங்களில் தேட முயற்சி செய்ய ஆரம்பித்தான்.

''ஏன் இந்த டாக்டர், எப்பவும் இரவில் ஆப்பிரேஷன் செய்கிறார்''

''அவருக்கு தூக்கத்திலே ஆப்பிரேஷன் செய்கிற பழக்கம் இருக்காம்''





இன்டைக்கு உயர்தர வகுப்பு பரீட்சை முடிவுகள் வெளியாவதால் ரவி காலையிலேயே கொம்மியுனிக்கேசனுக் குப் போய் விட்டான். படிப்பு என்றால் பாகற்காயாக நினைத்திருந்தவன், முதல் இரு தடவையும் பரீட்சையில் குண்டடித்தவன், இதோ இம்முறை

சிறுகதை

# இப்படியும் ஒரு காதல்

காலையிலேயே பரீட்சை முடிவைப் பார்ப்பதற்கு போயிருக்கிறான். அம்மாவுக்கு மகிழ்ச்சியாகவும், அதிசயமாகவும் இருந்தது.

''என்னங்க, ரவி இந்தமுறை பாஸ் பண்ணுவானா? இது தானே கடைசித் தடவை?'' அம்மா தனது அங்கலாய்ப் பையும், சந்தேகத்தையும் அப்பாவிடம் காட்டினா.

''பாஸ் பண்ணுவான்.... ஆனால்... மருத்துவ படிப்புக்கு தேர்வாகிறது சந்தேகம் தான்...''

[illegible] பார்த்தாலும் நீங்கள் [illegible] அவனைக் [illegible]டியபடி... பாமி[illegible]ட சேர்ந்து படிக்கத் தொடங்கிய பிறகு வலு முன்னேற்றம். நல்லமாதிரி பாஸ் பண்ணுவான் என்றுதான் பாமினியும் சொன்னவள்...''

''காவாலி, துருவாலியாக ஊர் சுத்திக் கொண்டிருந்த உன்ர பெடியனை ஓரளவுக் கெண்டாலும் நல்ல நிலமைக்குக் கொண்டு வந்தது அந்தப் பிள்ளைதான். அதனால தான் பாஸ் பண்ணுவான் என்று சொல்லுறன். ஆனால், மெடிசினுக்கு எடுபடுகிறதுக்கு மிக நல்ல பெறுபேறு வேணும் கண்டியோ?''

அப்பா தனது இளமைக் காலத்தில், எப்படியும் டாக்டராக வரவேணுமெண்டு மாஞ்சு, மாஞ்சு படிச்சவர்... கெட்டிக்காரன் எண்டு வகுப்பில பேரெடுத்தவர்... எண்டாலும் சறுக்கிப் போட்டுது. தான் ஏறமுடியாத குதிரையில் மகனை எண்டாலும் ஏத்த வேணுமென்று ஆசைப்பட்டவர். ஆனால் ரவிக்கு படிப்பில் அவ்வளவு ஆர்வம் இல்லை. இருந்த கொஞ்ச நஞ்ச ஆசையையும் அப்பாவின் திணிப்பு கரைய வைச்சிட்டுது. ஓ.எல். பரீட்சையில் தட்டுத் தடுமாறி இரண்டாவது தடவையில் தான் பாஸ் பண்ணினான், மட்டு மட்டான பெறுபேறோட. பிறகு ஒரு 'சீ' எடுத்துக் கொடுத்துத்தான் படிச்சவன். பொறுப்பாகப் படிக்க வேண்டிய வயதில் சினேகிதர்மாரோட சேர்ந்து கும்மாளமடிச்சுத் திரிஞ்சு, வீண் பொழுது போக்கினதால முதல் இரண்டு தடவைகளும் பரீட்சையில் நல்ல பெறுபேறு கிடைக்கவில்லை. மூன்றாவது தடவை சோதனை எடுக்கமாட்டன் என்று அடம் பிடிச்சுக் கொண்டிருந்த வேளையில் தான் பாமினி வந்து சேர்ந்தவள்.

பாமினியின் அப்பாவும், ரவியின் அப்பாவும் இளமைக் காலத்தில் கொழும்பில் ஒன்றாக வேலை செய்தவர்கள். ஒரே அறையில் தங்கியிருந்த நண்பர்கள். ஞாயிறு விடுமுறை அன்று காலிமுகத்திடலில் சோடியில்லாமல் போய், சோடியளைப் பார்த்து பெருமூச்சு விடுறவை. இப்பத்தையப் பொடியள் மாதிரி பெண்களை கண்டபடி நக்கல் அடிக்கிறதோ கிண்டலடிக்கிறதோ இல்லை. ரவியின் அப்பா யாழ்ப்பாணத் துக்கு மாற்றலாகி வர, பாமினியின் அப்பா வன்னிக்குச் சென்றார். என்றாலும் இடைக்கிடையில் இருவருக்கு மிடையில் கடிதத் தொடர்புகள் இருந்து வந்தன. வன்னியில் போர் உக்கிரமாகத் தொடங்கினதோட பாமினியின் குடும்பத்தினர் யாழ்ப்பாணத்திற்கு இடம்பெயர்ந்து வந்திட்டினம். ரவியின் அப்பா தான், வெளிநாட்டுக்குப் போய்விட்ட மகளின்ர வீட்டில பாமினியின் குடும்பத்தை இருந்தினவர். என்னென்றாலும் அந்த நாளைய சினேகிதம் அல்லவா?

பாமினியின் குடும்பத்தினர் அயல் வீட்டுக்கு வந்ததை அறிந்த ரவி, வன்னிக் காட்டிலிருந்து இப்படி ஒரு தேவதை வந்திருப்பாள் என கனவில் கூட நினைக்கவில்லை. அடுத்ததாக அவளைப் பற்றி அறிந்த செய்தி அவனை இன்னும் வியப்புக்கு உள்ளாக்கியது.

''அந்தப் பிள்ளைக்கு ஓ. எல். பரீட்சையில் எல்லாப் பாடங்களும் 'ஏ' யாம். இந்த ஆவணிக்கு ஏ.எல் எடுக்கப் போறாளாம்'' அம்மா சொன்ன செய்தி அவனுக்கு உவப்பாக இருக்கவில்லை, எல்லா இளைஞர்களையும் போலவே, அவள் தன்னை விட குறைவானவளாக இருக்க வேண்டுமென நினைச்சவனுக்கு இது ஏமாற்றம் தான்.

பாமினியின் அப்பா கந்தசாமி, ரவியின் அப்பா கனகேந்திரனிடம் தனது மகளின் கெட்டித்தனம் பற்றியும், யுத்தத்தினால் படிப்பு குழம்பிப் போயுள்ளதையும் சொல்லி கவலைப்பட்டார்.

''கடைசி இடப்பெயர்வில் பாடப் புத்தகங்கள் நோட்ஸ் எல்லாத்தையும் இழந்திட்டம். உயிர் தப்பினால் போதும் என்று வெறும் கையோட ஓடிவந்த னாங்கள். ஒரு மாதிரி சுண்டிக்குளப் பாதையால இங்க வந்து சேர்ந்திட்டம்... ம்... எத்தனை சனம் அநியாயமாய்ச் செத்துப் போச்சுது! அங்கவீனர்களாய்ப் போயிட்டுதுகள்! நாங்கள் எல்லாத்தையும் இழந்திட்டம். இனி இழக்கிறதுக்கு எங்களிட்ட ஒன்றுமே இல்லை'' கந்தசாமியின் குரல் தளதளத்தது. கனகேந்திரன் அவருக்கு ஆறுதல் சொன்னார்.

''கவலைப்படாதே கந்தா.... முப்பது வருசமாய் போராடியும் ஒரு விடிவையும் காணவில்லை. பாதுகாப்பாக இருந்த வேலியே பயிரை மேயுற மாதிரி நிலைமையாய்ப் போச்சு... பிள்ளையின்ர படிப்பைப் பற்றி கவலைப்படாதே... பள்ளிக்கூடத்தில் சேர்த்து, ரியூசனுக்கும் அனுப்புவம்... மகன்ர நோட்ஸ் இருக்கு சேர்ந்து படிக்கலாம். இவன் கொஞ்சமும் படிப்பில அக்கறையில்லை. பாமினி கெட்டிக்காரியாக தெரியுது. சேர்ந்து படிக்கட்டும்... அவளின்ர முயற்சியைப் பார்த்தாவது இவனுக்கு அக்கறை வருகுதோ என்று பார்ப்போம்''

''இந்த வயசில பொடியள் அப்படி இப்படித்தான்... அதிலையும் இப்ப எங்கட பொடியளுக்கு படிக்க முடியாமல் பல நெருக்கடி.. ஆமிக்காரனுக்கு பயந்து பயந்து சீவிக்க வேண்டியிருக்கு... எங்கட சமூகத்துக்கு கல்வி தான் பெருஞ் செல்லவம்... நீ சொன்ன மாதிரி சேர்ந்து படிக்கட்டும்...'' பாமினியின் அப்பாவும் பச்சைக் கொடி காட்டினார்.

ரவியின் மனதில அவனை அறியாமல் ஒரு வித குதூகலம். அதே வேளை சிறிது குரோதம். அவள் படிப்பாள் என்பதால்...

ரவியும், பாமினியும் சேர்ந்து படிப்ப தற்கென இடமும் ஒதுக்கப்பட்டது. பாமினி படிப்பதற்கு முதல் நாள் வந்தபோது ரவி முகத்தை 'உர்' என்று வைத்திருந்தான்.



பாமினியோ வெகு இயல்பாக உரையாடினாள். அவனுடைய 'நோட்ஸ்' கொப்பிகளை உரிமையோடு எடுத்துப் பார்த்தாள். அவன் பறித்தும் பொருட்படுத்தாமல் பார்த்தாள்.

''என்ன உங்கட எழுத்து ஒரே கிறுக்கலாக இருக்கு. ஒன்றும் தெளிவில்லை...'' அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''டாக்டராக வரவேணுமென்டா கிறுக்கித்தான் எழுத வேணும்...'' விதண்டாவாதமாகப் பதிலளித்த அவனைப் பார்த்துச் சிரித்தாள் பாமினி.

''உங்களுக்கு உங்களைப் பற்றியே ஒரு வித தாழ்வுச் சிக்கல்... உண்மையில நீங்கள் சரியான கெட்டிக்காரன் என்பதை இந்த சில நாட்களில் தெரிந்து கொண்டேன். ஆனால் படிக்கிறது தான் காணாது. எங்கட கல்வி அமைப்பில் ஏ.எல். என்கிறது தான் முக்கியமான தடை தாண்டல். ஒரு புள்ளியே தலைவிதியை மாற்றக் கூடியது...''

ச. முருகானந்தன்

''இப்ப உம்முடைய புத்திமதியை கேட்டனானா? எப்படிப் படிக்கிறதென்று எனக்குத் தெரியும்...'' அவள் மீது எரிந்து விழுந்தான் ரவி. பாமினியின் கண்கள் கலங்கின. அவள் அதற்குப் பின்னர் எதுவுமே பேசவில்லை.

''ஏன் இப்ப மூஞ்சியைச் சோகமாக வைத்திருக்கிறீர்? படியுமேன்...'' அவளது மனசைக் கஷ்டப்படும் படி ஏசிவிட்டேனோ என தவிர்த்தபடி அவளை நோக்கினான். அவள் இன்னமும் வாடிய முகத்துடன் இருந்தாள். கண்களில் திரண்ட நீர் கன்னத்தில் வடிந்தோடியது.

''கண்ணீரைத் துடையும்... அம்மா அப்பாவை பார்த்தா என்னைத் தான் தப்பாக நினைப்பினம். நான் பேசயில்லை. வேற என்ன சொல்ல வேணும். சொல்லும்'' அவன் அவளைப் பார்த்துச் சிரித்தபடி சொன்னான். அவள் வெளிப்படையாகச் சிரிக்கா விட்டாலும், உள்ளெழுந்த சிரிப்பால் கன்னங்கள் குழி விழுந்தன. அவனுக்கு அவளைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போலிருந்தது. அவனது பார்வையின் கூர்மையை சந்திக்க முடியாமல் தலை தாழ்த்தினாள்.

''சரி படிப்பம்...'' அவள் புத்தகத்தை விரித்தாள். ''பௌதீகவியல் தான் போன முறை சறுக்கிப் போட்டுதாம். என்ன?''

''உமக்கு எப்படித் தெரியும்?'' அவள் பதிலின்றிச் சிரித்தாள்.

''பௌதீகவியல் சுகமான பாடம்... அப்படியொண்டும் கஷ்டமில்லை....''

''அது... உமக்கு...''

''அக்கறையாகப் படிச்சால் உங்களுக்கும் தான். மின் காந்த இயலைப் படிப்பம்...''

''வடமுனையும் தென்முனையும் ஒன்டையொன்று ஏன் கவருது?'' குறும்பாக அவளை நோக்கினான்.

''...........''

''பெரிய கெட்டிக்காரி என்று சொல் லிச்சினம். பதிலையே காணாம்...''

''...........''

''நீர், என்னைக் கவருற மாதிரித்தான்''

''ரவி... உந்த வீண் கதை எல்லாம் வேண்டாம். இது படிக்கிற நேரம்... படிக்கிற வயது.... இந்த ஒரு வருஷம் கஷ்டப்பட்டுப் படிச்சால் பிறகு தடையே இல்லை...''

''படிக்கலாம் தான்... ஆனால நீர் பக்கத்தில் இருக்கிறபோது கரண்ட் அடிக்குதே...!''

''ரவி.. இப்படியென்றால் நான் இனி படிக்க வரமாட்டேன்.... பீ சீரியஸ்...''

''சரி.. சரி.. படிக்கிறேன். சொல்லித் தாரும்''

''நான் சொல்லித் தர வரவில்லை... சேர்ந்து படிக்கத்தான் வந்திருக்கிறேன்.. சரி காந்த முனைகளிலிருந்து புறப்படுகின்ற மின் அலைகள்...'' அவள் சொல்லச் சொல்ல, அவனுக்குப் புரிவது போல இருந்தது. இவ்வளவு இலகுவா என தோன்றியது.

அன்று தொடங்கிய ஆர்வமும், வேகமும் அவனை புது மனிதனாக்கியது. தொடர்ந்து படிப்பில் ஆர்வமாக செயற்பட்டான்.

தனியார் கல்வி நிலையத்திற்கு போகும்போது அவனுடன் சேர்ந்து அவளும் போவாள். நண்பர்கள் பகிடி பண்ணுவார்கள்'' அது ஒரு சிடு மூஞ்சி மச்சான்'' என்று கூறுவான்.

ரவி ஒரு நாள் வகுப்பைக் 'கட்' பண்ணி நண்பர்களோடு படத்திற்குப் போயிருந்தான். இரவு படிக்க வந்த போது பாமினிக்கு அவன் மீது சரியான கோபம். கதைக்காமல் இருந்தாள்.

''என்ன பாமினி, விஜயின்ர படம்... பார்க்காட்டி தலையே வெடிச்சிடும்...''

''விஜயோ உங்களுக்கு சாப்பாடு தாறது? அவன் உங்களுக்கு என்ன தாறான்? இந்த வருஷப் படம் பார்க்கிறதையே நிற்பாட்டுங்கோ...''

''நீர் சொல்லுறபடி தான் நான் நடக்க வேணுமோ?''

''ஓம்...''

''அப்படியெண்டா நான் கேட்கிறதுக்கு நீர் ஓம் என்று பதில் சொல்ல வேணும்....''

''என்ன...?''

''ஐ லவ் யூடி...''


''சீ.... போடா.... முதல்ல படி, பிறகு உனக்குப் பிடிச்சவளாகப் பார்...'' அவளது இந்த பதிலில் அவன் முகத்தை உர் என்று வைத்துக் கொண்டான்.

(19 ஆம் பக்கம் பார்க்க)

# தீய பழக்கங்களை விட்டொழித்தாலே உடல் நலம் பெறும்!

**கேள்வி:** பெண். வயது 38. எனக்கு இரண்டு கைகளிலும் விரல்கள் விறைக்கின்றன. படுத்திருக்கும்போது விரல்களிலும், உள்ளங்கைகளிலும் விறைப்பும் வலியும் ஏற்படுகின்றது. துணிகளைத் துவைத்து பிழியவோ, தையல் வேலை செய்யவோ முடியாமல் தொடர்ந்து வலிக்கிறது. பரிகாரம் கூறவும்.

**பதில்:** உங்களுக்கு ஏற்பட்டிருப்பது அநேகமாக Carpal Tunnel Syndrome




என்கின்ற கோளாறாக இருக்கலாம். உள்ளங்கைக்கும் விரல்களுக்கும் செல்லுகின்ற தசைநார்கள், இரத்தக் குழாய்கள், நரம்புகள் என்பவற்றை மணிக்கட்டு அளவில் Band பட்டி ஒன்று ஒருங்கிணைத்துள்ளது. ஏதோ ஒரு காரணத்தால் இந்தப் பட்டி இறுகும்போது இடையில் அகப்பட்ட நரம்புகள் அழுத்தப்படும். இதன்


> **இலவச மருத்துவ ஆலோசனைகளை**
> 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
> **டாக்டர்**
> **எஸ். அருள்ராமலிங்கம்**
> நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
> **இலவச மருத்துவ ஆலோசனை**
> **'சுடர் ஒளி'**
> 85, ஜயந்த மல்லிமாராய்ச்சி மாவதத்தை, கொழும்பு - 14.

காரணமாக உள்ளங்கை விரல்களில் திமிர்ப்பு, உணர்வு குறைதல், வலி, விறைப்பு ஏற்படலாம். என்றாலும் இந்த மாதிரி பிரச்சினைகள் கழுத்தெலும்பு இறுக்கத்தாலும் ஏற்படலாம். இதனை Cervical SpondyLosis என்பார்கள். எக்ஸ்றே, இரத்தப் பரிசோதனை தவிர - Nerve Conduction Study எனப்படும் நரம்பு கடத்தல் திறனை அளக்கும் பரிசோதனை மூலம் சரியாக நோயை நிதானிக்கலாம். Capal Tunnel Syndrome தான் உங்கள் பிரச்சினைக்கு காரணம் என்று தெரிந்தால் சாதாரண சத்திர சிகிச்சை முறையில் பட்டியைப் பிளந்து இறுக்கத்தை நீக்கலாம். நீங்கள் நரம்பியல் நிபுணர் அல்லது எலும்பு முறிவு சிகிச்சை நிபுணர் ஒருவரின் ஆலோசனையைப் பெறுவது நல்லது.


**கேள்வி:** ஆண். வயது 32. கடந்த பத்து வருடங்களாக தினமும் 10 சிகரெட்டுகள் புகை பிடிக்கின்றேன். அதுபோல் கடந்த ஐந்து வருடங்களாக தினமும் அரை கிளாஸ் மது அருந்துகிறேன். அதுபோல் கடந்த ஒரு வருடமாக COREX என்கின்ற இருமல் பாணி மருந்தை தினமும் ஒரு போத்தல் (சிறியது) போதை மருந்தாக அருந்தி இன்பம் காண்கின்றேன். இப்பொழுது இரவில் தூங்கும் போது சுவாசிக்கும் வேளை வித்தியாசமான ஒலி ஏற்படுவதாக வீட்டில் உள்ளவர்கள் கூறுகின்றார்கள். இது தவிர எனக்கு உடல் தசைகள் எல்லாம் வலிக்கின்றன. வயிற்றில் உணவு எதுவும் இல்லாத போது அடிவயிறு வலிக்கின்றது. அடிக்கடி சிறுநீர் கழிகிறது. சில வேளைகளில் ஈரல், சிறுநீரக பக்கங்களில் சிறிய வேதனை ஏற்படுகிறது. சமீபத்தில் தொடர்ந்து மூன்று நாள் உணவு எதுவும் எடுக்காமல் மது அருந்தி - நாளாவது நாள் மது அருந்துவதை நிறுத்தினேன். அன்று எனக்கு நல்ல பசிவந்து - நிறைய உணவு சாப்பிடக் கூடியதாக இருந்தது. ஆனால் வயிற்றோட்டம், வயிற்று பிரட்டல் மற்றும் துர்மணத் துடன் கூடிய சிறுநீர் - மலம் கழித்தல் என்பன ஏற்பட்டன. இதற்கு - இளநீர் மற்றும் மோர் எடுத்தபோது இரண்டு நாட்களில் நல்ல சுகம் கண்டேன். இப்படி கடந்த வருடம் மூன்று தடவை ஏற்பட்டது. COREX அருந்தும் போது மலச்சிக்கல் ஏற்படும். சிறுநீர் துர்நாற்றம் வீசும். இப்பொழுது இந்த கெட்டபழக்கங்களை கைவிட தீர்மானித்துள்ளேன். தயவு செய்து எனக்கு உதவவும்.

**பதில்:** அரிது அரிது மானிடராக பிறத்தல் அரிது என்றார் ஔவையார். பரமன் நடமாடும் கோயில் - சுடுவது அபராதம் என்று மரணித்த பின் இறைவனின் கோயிலான தேகத்தை சுடலையில் சுடுவது தவறு என்று பாடிச்சென்றார் விடலூர் வள்ளலாம். இப்படி எமக்கு கிடைத்த மனிதப் பிறவிக்கும் - தேகத்திற்கும் - எத்தனை வகையாக தீங்கு இழைக்க முடியுமோ - அத்தனை வகைகளில் கொடுமைப்படுத்தியுள்ளீர்கள். அதுவும் பத்துவருடக்கால எல்லையில். உங்களுக்கு இவ்வாறு உடலுக்கு தீங்கிழைக்கும் பழக்கவழக்கங்கள் ஏற்படுவதற்கு காரணம் என்ன என்பதை நீங்கள் புரிந்து கொண்டாலொழிய - இந்த கொடிய தீயபழக்கங்களை உங்களால் விடுவதற்கு முடியாது. இதற்கு ஒரு மனோநல வைத்தியர் உளவள ஆலோசகர் என்போரின் ஆலோசனையும் அனுசரனையும் கட்டாயம் தேவை.

இவர்களின் உதவியோடு - ''இவற்றை நான் நிறுத்த வேண்டும். இவற்றால் தினமும் நான் மெல்ல மெல்ல இறந்து கொண்டுபோகின்றேன்' என்ற எண்ணம் உங்கள் மனதில் உருவாகி - நீங்களாகவே இந்த பழக்கவழக்கங்களை கைவிட முடிவெடுத்தாலொழிய எவரும் உங்களுக்கு உதவமுடியாது. மருந்தும் சிகிச்சை முறைகளும் - இந்த பழக்கங்களை மறக்க, கைவிட உதவி செய்யும். ஆனால் ஒரு தடவை - ஆசையை அடக்க முடியாமல், ஒரு தரம் தானே கொஞ்சம் குடித்துப் பார்ப்போம் அல்லது இன்றைக்கு மட்டும் குடிப்போம் என்று இடம் கொடுத்தீர்களானால் விக்கிரமாதித்தனின் வேதாளம் போல் பழையபடி இந்த பழக்கங்கள் முருங்கை மரத்தில் ஏறிக்கொள்ளும். பின்னர் பழைய கதைதான். மேலும் இப்பழக்கவழக்கங்களைக் கைவிட செய்யப்படும் ஆரம்ப சிகிச்சையின் போது - உடலும் உள்ளமும் - ஒத்துழைக்காமல் - உடல்வலி, தூக்கமின்மை, மனக்குழப்பம், தலைவலி போன்ற குணங்கள் ஏற்பட்டு திரும்பவும் உங்கள் தீயபழக்கங்களை நாடச்செய்யும். இந்த கோளாறை WITH DRAWL SYMPTOMS - என்று குறிப்பிடுவார்கள். இத்தனை வேதனை, வலி, குழப்பங்களை தாங்கிக் கொள்ளும் மனஉறுதி உங்களுக்கு வேண்டும். நீங்கள் இப்பொழுதே உங்கள் ஆயுளின் பாதிக்கு மேற்பட்ட காலத்தை - தீய பழக்கங்களால் - செலவழித்து விட்டீர்கள். எனவே உங்கள் பாதையை மாற்றாவிடில் - உங்கள் எதிர்கால வாழ்க்கை நோய், நொடி, வைத்தியம், ஆஸ்பத்திரி என்று கழியப் போகிறது. மரணம் கூட உங்களைக் கண்டு தீராத நீண்டகால நோய்களுக்கு கையளித்து விட்டு தூர ஓடிவிடும். இப்படி நோய்களில் வருந்துகின்றோமே சாவே வரமாட்டாயா என்று வருந்தும் நிலை ஏற்படும். எனவே உடனடியாக தீர்மானம் எடுங்கள்.



COREX மருந்து பாவனை பற்றி இங்கு சிறிது கூறவேண்டியுள்ளது. இந்த மருந்தில் CODEINE என்கின்ற




சுபினிவர்க்க போதைப் பொருள் உள்ளது. இது மூளையில் MEDULLA [illegible]கின்ற முக்கியமான பகுதியில் [illegible]க்கத்தை ஏற்படுத்துவதால் - [illegible]மலை தூண்டும் உணர்வை [illegible]ங்கச்செய்து - இருமலை [illegible]றைக்கின்றது. ஆனால் அதே [illegible]ளையில் இது போதைப் [illegible]க்கத்தை ஏற்படுத்து கிறது. இரவில் [illegible]டும் வித்தியாசமான ஒலி -- இந்த [illegible]ந்து BREATHING CENTRE - [illegible]கின்ற சுவாசத்திற்குரிய பகுதியை [illegible]ங்கச்செய்து - மூளைக்கு [illegible] ஒட்சிசனை தடைசெய் [illegible]ல் ஏற்படுகிறது. இது தவிர வயிற்றுப் பிரட்டல், தசைவலி, மலச்சிக்கல் என்பன - இந்த CODEINE போதைப் பழக்கத்தின் காரணத்தால் ஏற்படுகின்றன. CODEINEக்கு பழகியவர்கள் - அதை கைவிடும் போதும் இதே கோ[illegible]றுகள் WITH DRAWL குறிக[illegible]ஏற்பட்டு, போதைப்பழக்கத்தை [illegible]வதை கடினமாக்கிறது. உங்கள் ஈரல், சிறுநீர் என்பவை மது பழக்கத்தால் பாதிக்கப் படுவதால் - ஈரல் வலி - சிறுநீரக வலி ஏற்படுகிறது. பித்தப்பை சரியாக இயங்காமல் -- உணவில் கொழுப்புச் சத்து சமிபாடடையாமல் மலம் துர்மணம் தருகிறது. எனவே உங்களுக்கு கிடைத்திருக்கும் இறுதி சந்தர்ப்பம் இது. தவறவிட்டு விடாதீர்கள். ✱


## மணமகன் தேவை

இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த மணமுறிவு பெற்ற எமது மகளை மறுமணம் செய்யவிரும்பும் வரனைத் தேடுகின்றோம்.

1978ஆம் ஆண்டு பிறந்த இவர் கொழும்பில் அரச அலுவலகத்தில் பணிபுரிகின்றார்.

தொடர்புகளுக்கு
சுடர் ஒளி சுவிஸ் 0041618131552

# நேர்மையாக உழைப்பவர் எந்தத் தொழிலைச் செய்தாலும் கண்ணியமானவரே!



தூய்மையான, நேர்மையான ஒரு தொழிலாளியின் கண்ணியத்தை அவர் செய்யும் தொழிலைக் காரணம் காட்டிப் பறித்திட முடியாது. செய்யும் தொழிலைக் காரணம் காட்டி உயர்ந்தவர்- தாழ்ந்தவர், என்ற ஏற்றத் தாழ்வுகளையும் ஏற்படுத்திட எவரும் முனையக்கூடாது. அது மனிதாபிமானமுமல்ல, மனித உரிமைகளை மதிக்கும் செயலுமல்ல.

உழைப்பவர் தான் செய்யும் தொழிலில் நேர்மையாக இருந்திடும்வரை, அவர் எந்தத் தொழிலைச் செய்தாலும் கண்ணியமானவரே! உழைக்கும் மனிதர்கள் உயரும் அளவிற்கு அல்லது உயரவேண்டிய அளவிற்கு எல்லையே இல்லை. அவர்கள் உடல், உள ஆற்றல் இருக்கும் வரை உழைத்து முன்னேறிக் கொள்ளலாம். வாய்ப்புக்கள் அனைத்தும் எல்லோருக்கும் உரிமையானதே. அனுமதிக்கப்பட்ட தொழிலில் ஈடுபடுவதற்கு எல்லோருக்கும் உரிமை உண்டு.

தனியொருவர் தன் முயற்சியின் மூலம் திரட்டும் பொருள்கள் அனைத்தும் அவருக்கே சொந்தம். இந்த உரிமைக்குப் பதிலாக அவர் சமுதாயத்திற்கென சில கடமைகளை நிறைவேற்றிட வேண்டும். அதுபோல், அரசுக்கும் சில வரிகளைக் கொடுத்திட வேண்டும். இவைகளைச் செய்து விட்டால் அவரது சொத்துக்களைப் பாதுகாத்திட வேண்டியது அரசின் கடமையாகும். அவ்வாறு பாதுகாக்க வேண்டும் எனக்கோரும் உரிமையை அவர் பெறுகின்றார். அத்துடன் அனுமதிக்கப்பட்ட எல்லாத் தொழில்களிலும் ஈடுபடும் உரிமையும் பாதுகாக்கப்படுகின்றது.




உங்களது
அந்தரங்க பிரச்சினைகள் மற்றும்
குடும்பப் பிரச்சினைகள், சந்தேகங்கள்
தொடர்பான கேள்விகளுக்குப்
பதிலளிக்கிறார் உளநல ஆலோசகர்
ஏ.எச்.ஏ.ஹுஸைன்.
கேள்விகள் வந்துசேரவேண்டிய முகவரி:
A.H.A. HUSSEIN
KAYAR ROAD,
ERAVUR.
ஈமெயில் :

## நல்லோரினதும் தீயோரினதும் இலட்சணங்கள்



**கேள்வி:** நல்லோரினதும் தீயோரினதும் இலட்சணங்கள் என்ன?

**பதில்:** பொய் பேசாதிருப்பது, பொறுமையைக் கடைப்பிடிப்பது, அவசியமற்ற பேச்சுக்களைத் தவிர்த்துக் கொள்வது, வாக்கு மாறாமலும் நம்பிக்கைத் துரோகம் செய்யாமலும் இருப்பது, நல்லவற்றையே சிந்திப்பதும் நல்லவற்றையே செயற்படுத்துவது, நல்லவற்றையே உபதேசிப்பது, சிருஷ்டிகளிடம் அன்பும் இரக்கமும் உடையோராய் இருப்பது, மக்களுக்கு ஊழியராகவும் உபகாரியாகவும் இருப்பது, எவரிடமும் இனிமையாகவும் இணக்கமாகவும் நடந்து கொள்வது, தீங்கு செய்தோருக்கும் நன்மையே செய்வது, பிறரின் குற்றங்களை மன்னிப்பது, பிரிந்து செல்லும் பந்துக்களை இணைத்து வாழ்வது, பெரியோர்களைக் கண்ணியப்படுத்துவது, சிறியோர் மீது இரக்கம் காட்டுவது,மலர்ந்த முகமுடையோராய் இருப்பது, தர்ம சிந்தனை உடையோராய் இருப்பது, நல்லோருடன் அமர்ந்திருப்பது, எல்லாவற்றுக்கும் மேலாக, பயபக்தியுடன் எந்நேரமும் மரணத்தை நினைத்திருப்பது இப்படி அடுக்கி கொண்டே போகலாம் நல்லோரின் இலட்சணங்களை. இதற்கு எதிரானவை எல்லாவற்றையும் தீயோரின் இலட்சணங்களாகக் கொள்ளலாம்.

**கேள்வி:** எனக்கு இப்பொழுது இருபது வயது. ஆறு வயதில் ஒரு மகன் இருக்கிறான். நான் படித்துக் கொண்டிருந்த போது 14 வயதில் எனக்குத் திருமணம் முடித்துத்தந்து விட்டார்கள். என்னை வேறு பிரச்சினையிலிருந்து தப்ப வைப்பதற்காகவே இப்படிப் பலாத்கார திருமணத்தைச் செய்ய வைத்தார்கள். எனது கணவரையும் அந்தப் பிடியிலிருந்து விடுவிப்பதற்காகவே அவருக்கும் எனக்கும் திருமணம் நடந்தது. அதன் பின்னர் அவர் மத்திய கிழக்கு நாட்டுக்குத் தொழிலுக்காகச் சென்றார். உண்மையில், நாட்டு நிலைமையில் உயிரைக் காப்பதற்காகவே அவரை வெளி[illegible]டுக்கு அனுப்பினோம். பெருந்தொகைப் பணத்தை வட்டிக்குக் கடன் வாங்கித்தான் வெளிநாடு அனுப்பினோம். நம் தலைவிதி என்னவோ, அங்கும் போய் அவர் சிறையிலிருக்க வேண்டியேற்பட்டு விட்டது. இப்பொழுது மீண்டும் இங்கு கடன் பட்டு அவருக்கு அனுப்ப வேண்டியிருக்கிறது. நாட்டு நிலைமை காரணமாக என்படிப்பும் பாழாய்ப் போய், ஒரு குழந்தைக்கும் தாயாகி, கணவனும் வெளிநாட்டுச் சிறையில் வாட, நான் இப்போது நடுத்தெருவில் நிற்கிறேன். என் எதிர் காலம் இப்படியே பாழாய்ப் போகுமா?

**பதில்:** நாட்டில் கொஞ்சக்காலம் இடம்பெற்ற கொடூரமான அனுபவங்களுக்குள் மாட்டிக்கொண்ட பல நூற்றுக் கணக்கானோரில் நீங்களும் ஒருவர். உங்களைப் போன்று சம அளவான பாதிப்பு இல்லாவிட்டாலும், வேறு வகையில் கூடிக்குறைந்து இழப்புக்களையும் ஏமாற்றங்களையும் சந்தித்திருக்கிறார்கள். நடந்து முடிந்த ஆயுத வன்முறைகளின் விளைவாக கல்வி, பொருளாதாரம், சமூக, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் என்று எல்லாமே சீர்குலைந்து போயுள்ளன.

நீங்கள் மனம் சோர்ந்து விட வேண்டாம். ஏனென்றால் உங்களுக்கு ஆறு வயதில் ஒரு மகன் இருக்கிறான். அவரை நீங்கள் எப்படியாவது ஒரு சிறந்த சமுதாயத்திற்கு வேண்டிய ஒரு பிரஜையாக உருவாக்க வேண்டும். அந்தப் பாரிய பொறுப்பு உங்கள் கையில் உள்ளது. ஆயுத மோதல்களின் விளைவாக நாம் கல்வி எனும் சொத்தை இழந்து விட்டோம். உங்களைப் போன்ற வயதையொத்த இளம் பிராயத்தினரில் பெரும்பாலானோரின் கல்வி பலாத்காரமாகப் பறித்தெடுக்கப்பட்டு விட்டது.

எனவே கல்வியைக் கொடுத்து உங்கள் பிள்ளையின் எதிர்காலக் கனவுகளை நனவாக்க நீங்கள் பாடுபட வேண்டும்.

எப்படியோ உங்கள் கணவர் அந்த நாட்டின் சட்டதிட்டங்களுக்கமைய நீதி விசாரணைகளை எதிர்கொண்டு, உங்கள் குடும்பத்தோடு வந்து சேருவார். நம்பிக்கையோடு இருங்கள்!

**கேள்வி:** நான் ஒரு பெண். ஓர் அலுவலகத்தில் பணியாற்றுகிறேன். நான் பாடசாலையில் படிக்கும்போது எதிர்கொண்ட அதே அனுபவத்தைத்தான் இப்பொழுதும் எதிர்கொள் கிறேன்: அதாவது நான குறைந்த சாதி அமைப்பு என்று அவர்கள் கருதும் ஒரு பிரிவைச் சார்ந்தவள் என்கின்ற படியால், எல்லா விடயங்களிலும் என்னைப் போன்றவர்கள் ஒதுக்கப்பட்டு அலலது பாரபட்சங்களுக்குள்ளாகி வருகிறோம். இது மிகுந்த மன வேதனையை அளிக்கின்றது. உலகம் எங்கோ முன்னேறிக் கொண்டிருக்க, நம்மில் ஒரு சிலர் மட்டும் இன்னமும் பிற்போக்குத் தனத்தில் ஏன் சிந்தித்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்?

**பதில்:** "சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால் நீதி வழுவா நெறிமுறை யில் இட்டார் பெரியார் இடாதார் இழி குலத்தோர் பட்டாங்கில் உள்ளபடி" என்று ஒரு நீதி வாக்கியம் கூறுகிறது.

அதாவது உலகில் தர்மம் செய்வோரும், தர்மம் செய்யாத கஞ்சர்களும் என இரு சாராருமே உண்டென்கிறது. இந் நன்னெறி. இதனை விட, சமூகத்தில் வேறு சாதிகள் உண்டென்று குறிப்பிடப்படவில்லை. அதேபோல, ஆணும்-பெண்ணும் என்ற இருவகைப் பட்ட சாராரே மனித குலத்தில் காணப்படுகின்றனர். இந்த இரு சாராரிலும் நன்மக்கள்- தீயவர்கள் என இரு சாரார் உண்டு. இதைத் தவிர வேறு சாதிகள் இருக்கிறது என்று சொல்லி மனிதர்களைப் புறக்கணித்தால் அது அறிவுடைமையாகாது. அப்படிச் செய்தால் அது மனித உரிமை மீறலும் கூட. அனைத்துலக மனித உரிமைகள் பிரகடன உறுப்புரை ஒன்று, மனிதப் பிறவியினர் அனைவரையும் சமமானவர்கள் என்று மதிப்பிடுவதோடு, அவர்கள் சகோதர வாஞ்சையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றது. அதனோடு உறுப்புரை இரண்டு, இனம் மொழி, நிறம்,பால், மதம், அரசியல் அலலது வேறு எதையும் காரணம் காட்டி எவரும் பாரபட்சங்களுக்கும், ஓரங்கட்டப்படுத்தலுக்கும் உள்ளாக்கப்படக்கூடாது என்று வலியுறுத்துகிறது.

எது எப்படியிருந்தாலும், இழிகுணம் கொண்டவர்களை உங்களைப் போன்ற பெருந்தன்மையாளர்கள் தான் மாற்றவேண்டும்.

"ஷெல்" வீச்சுக்களும் துப்பாக்கி ரவைகளும், கண்ணிவெடிகளும் குண்டு வெடிப்புக்களும் குலம், கோத்திரம், சாதி சமயம் பார்த்து தாக்கவில்லை.

ஆனாலும் தப்பியோடி அகதி முகாமில் தஞ்சமடைந்த அகதிகளில் ஒரு சிலர் தாம் உயர் சாதியினர் என்பதால் தமக்குச் சமைத்துச் சாப்பிட வேறு பாத்திரங்கள் தருமாறு வேண்டுகோள் விடுத்த கேவலத்தை வெறுப்போடு கேட்டுக் கொண்டிருக்க வேண்டியேற்பட்டுவிட்டது.

**கேள்வி:** குறையுள்ள ஆளுமைகள் எவை?

**பதில்:** சந்தேக ஆளுமை, உணர்ச்சி மாறுபாட்டு ஆளுமை, நிறைந்த மன ஆளுமை, ஆட்டிப் படைக்கும் ஆளுமை, கட்டுப் பாடிழப்பு ஆளுமை, சமூக விரோத ஆளுமை, என்பன உள்ளடங்கும்.

**கேள்வி:** நான் ஒரு மாணவன், என்னால் இப்பொழுது என் மனதை ஒரு நிலைப்படுத்தி பாடங்களைப் படிக்க முடியாதுள்ளது. காரணம் எனது சகோதரிக்கு விரைவில் திருமணம் நடக்கவிருக்கிறது. என் சகோதரி என் சிறந்த ஒரு வழிகாட்டியாகவும், நண்பியாகவும் இருந்த படியால், அவள் என்னைவிட்டுப் போய் விடுவாளே என்ற அச்சத்தினால் என் மனம் கலங்கிப்போய் இருக்கிறது. ஒரு வழியில் தெளிவுபடுத்துங்கள்.

**பதில்:** என்றைக்காகிலும் உங்கள் சகோதரி திருமணம் முடித்து, தனிக்குடித்தனம் போக வேண்டியவர் தானே என்பதை நீங்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அடுத்தபடியாக, அவர் திருமணம் முடித்து எங்கு சென்றாலும் உங்களுக்கு ஒரு உற்ற நண்பியாகவும், வழிகாட்டியாகவும் இருப்பதில் எதுவிதமான தடங்கல்களும் இருக்கப் போவதில்லை. இன்னொரு வகையில் பார்த்தால், உங்கள் சகோதரியுடன் சேர்த்து உங்களுக்கு மேலும் ஒரு நண்பரும், வழிகாட்டியுமாக உங்கள் சகோதரியின் கணவர் வரப்போகிறார் என்று சந்தோஷப்படுங்கள். வீணாக மனதைப் போட்டு அலட்டிக்கொள்ள வேண்டாம். எல்லாம் நல்லபடி நடக்கும். படிப்பில் கவனம் செலுத்துங்கள். *

**பலரின் வேண்டுகோளுக் கிணங்கி இப்பகுதியில் பிரசுரிக்கப்படும் வாசகர்களால் அனுப்பப்படும் உளவியல் சார்ந்த கேள்விகளுக்கு அவர்களின் பெயர், இடம் என்பவை குறிப்பிடப்படவில்லை.**

# காதலனைத் தெரிவு செய்யும் போது...



காதல் ஜோடியைத் தேர்ந்தெடுப்பதில் கவனமாக இருங்கள். நீங்கள் மணமாகாத இளம் பெண் என்றால் உங்களைப் பல இளைஞர்கள் காதலிக்கக் கூடும். காதல் என்பது திருமணம் என்ற புனிதமான ஒரு நிலையை நோக்கி உங்களைக் கொண்டு செலுத்தும் ஒரு சக்தி. அதனால், காதல் விடயத்தில் எச்சரிக்கை மனப்பான்மை வேண்டும்.

உங்களை, காதலிப்பதாகக் கூறும் இளைஞன் உங்கள் அழகை மட்டுமே வர்ணிப்பவனாக இருந்தால் அவனை நம்பாதீர்கள். ஏனென்றால், உங்கள் அழகு எந்தச் சமயத்திலும் பின்னாளில் குறையக்கூடும். திருமணமான பிறகு அழகு குறைந்தபோது உங்களிடம் கவர்ச்சியை எதிர்பார்த்த இளைஞனாக இருந்தால், ஏமாற்றமுற்று, தடம் மாறக்கூடும்.

அழகாக, கவர்ச்சியாக இருக்கிறான் என்பதற்காக எந்த ஓர் இளைஞனையும் பெண்கள் காதலிக்கக் கூடாது. அழகு என்பது இனிப்புப் பலகாரங்களுக்கு போடப்படும் வண்ணம் போன்றது. வண்ணம்தான் பண்டத்திற்குக் கவர்ச்சியைக் கொடுக்கக்கூடும். ஆனால் வண்ணம் இல்லாததினாலேயே உணவுப் பண்டத்தின் சுவை கெட்டுவிடப் போவதில்லை.உணவுப் பண்டத்தில் கலந்துள்ள இனிப்பு போன்றது ஓர் இளைஞனின் குண நலன்கள். இனிப்பு இல்லாவிட்டால் தின்பண்டமே இல்லை என்பது போல, வாழ்க்கைக்கு எழில் சேர்ப்பது கணவராக வருபவரின் குணநலன்தான்.

ஆகவே, தங்கள் காதல் ஜோடியைத் தேர்ந்தெடுப்பதில் பெண்கள் கவனமாக இருங்கள்.

# முகப் பொலிவுக்கு தேன்



முகம் பளபளப்பாக தேன் டோனர்
வெள்ளரிக்காய் ஜூஸ் 2 தேக்கரண்டி
தேன் 1 தேக்கரண்டி

இரண்டையும் நன்றாகக் கலந்து முகத்தில் தடவி 15 நிமிடம் ஊறவைத்துக் கழுவவும்.இப்படி வாரம் இரண்டு முறை செய்து வந்தால் முகம் நல்ல மெதுவாக இருக்கும்.

ஸ்கரப்
தேன் 2 தேக்கரண்டி
பாதாம் பவுடர் 1 தேக்கரண்டி
தயிர் 2 தேக்கரண்டி

மூன்றையும் நன்றாகக் கலந்து முகத்தில் தடவி 10 நிமிடத்திற்கு வட்ட வடிவமாக தேய்க்கவும். பிறகு 10 நிமிடம் ஊறவைத்து கழுவவ்ும். இப்படி இரண்டு வாரத்திற்கு ஒரு முறை செய்து வந்தால் முகத்தில் இருக்கும் தேவை இல்லாத, இறந்த கலன்கள் எல்லாம் போய் முகம் பளபளப்பாக இருக்கும்.



ப்ளீச்
தேன் 2 தேக்கரண்டி
எலுமிச்சை சாறு 2 தேக்கரண்டி

இரண்டையும் நன்றாகக் கலந்து முகத்தில் தடவி 15 நிமிடம் ஊறவைத்து விட்டுக் கழுவவும்.இப்படி 2 வாரத்துக்கு ஒரு முறை செய்து வந்தால் முகத்தில் இருக்கும் தேவை இல்லாத தழும்புகள் எல்லாம் போய் முகம் சிவந்து தெரியும் .

க்லின்சர்
1/4 தேக்கரண்டி தேன்
கிளசரீன் 1 தேக்கரண்டி

இரண்டையும் நன்றாகக் கலந்து முகத்தில் தடவி 15 நிமிடம் ஊறவைத்து கழுவவும்.இப்படி 2 வாரம் ஒரு முறை செய்து வந்தால் முகத்தில் இருக்கும் தேவை இல்லாத கரும் புள்ளிகள், முகப்பரு எல்லாம் போய் முகம் பளபளப்பாக இருக்கும் .

## பெண்

தொகுப்பு:சாந்தி

# கர்ப்பிணிகள் பப்பாளி சாப்பிடலாமா?

கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைக்கான வாய்ப்பை எதிர்நோக்கும் பெண்கள் தவிர மற்ற எல்லோரும் விரும்பிச் சாப்பிடும் பப்பாளிப் பழம் நிறைய சத்துக்கள், மருத்துவ குணங்கள் கொண்ட பழமாகும். இதில் விட்டமின்கள் ஏ, சி, ஈ மற்றும் நார்ச்சத்து நிறைய உள்ளது. பெரும்பாலும் கோடைகாலம் தான் இந்த பழத்திற்கான காலம்.

இந்த பழத்தில் இருந்து நமக்கு கிடைக்கும் சில பயன்கள்:

* பப்பாளியில் உள்ள பேராக்ஸ்நேஸ் என்ற தாதுப்பொருள் கொழுப்பைக் குறைக்க உதவுகிறது. பப்பாளிப் பழத்தில் காணப்படும் விட்டமின் 'ஈ' குடல் பகுதியில் கேன்சர் வராமல் தடுக்கிறது.



* சிறுநீரகத்தில் கல் இருப்பவர்கள் பப்பாளிப் பழத்தைத் தினமும் இரண்டு வேளை சாப்பிட்டு வந்தால் விரைவில் குணம் அடையலாம். அல்சர் தொல்லை உள்ளவர்கள் இந்தப் பழத்தை தினமும் சாப்பிட்டு வந்தால் விரைவில் குணம் பெறலாம்.

* சிலருக்கு அதிக புரோட்டின் நிறைந்த உணவு சாப்பிட்டால் செரிக்காமல் வயிற்றுக் கோளாறு ஏற்படும். அப்படி உள்ளவர்கள் உணவுக்குப்பின் இந்தப் பழத்தைச் சாப்பிட்டால் உணவை விரைவில் செரிக்க வைக்கும்.


* மலச்சிக்கல் உள்ளவர்களுக்கு மருந்துகளைவிட, பப்பாளிப் பழம் ஓர் அருமையான மருந்து. இதைத் தவறாமல் தினமும் காலையில் சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் வரவே வராது.

* பப்பாளிப் பழத்தைக் கூழாக்கி வாரம் இரண்டு முறை முகத்தில் தடவி மசாஜ் செய்து வந்தால் முகத்தில் இருக்கும் கரும் புள்ளிகள், சொரசொரப்புத் தன்மை மாறி, முகம் பளப்பளப்பாக மாறிவிடும்.

* பப்பாளிப்பழத்தைக் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைப் பாக்கியத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கும் பெண்கள் சாப்பிடக்கூடாது என்ற கருத்து உள்ளது. இவர்கள், பப்பாளிப் பழத்தை அளவுக்கு அதிகமாகச் சாப்பிட்டால், உடல் வெப்பநிலை அதிகரித்து, ஆரம்ப நிலையில் உள்ள கரு கலைந்துவிடும் அல்லது கரு உருவாகுதல் தள்ளிப்போகும் என்பதால், அப்படிச் சொல்கிறார்கள். அதே நேரம், மேற்படி பெண்கள் இந்தப் பழத்தில் ஒன்று அல்லது இரண்டு துண்டுகள் சாப்பிடுவதில் தவறே இல்லை. ஒருவேளை, அளவுக்கு அதிகமாகப் பப்பாளிப் பழத்தை அவர்கள் எடுத்துக்கொண்டால், அந்தப் பழத்தை சாப்பிட்டு முடித்தவுடன் ஒரு டம்ளர் பால் குடிப்பது உடல் வெப்பநிலை அதிகரிப்பதைத் தடுத்து நிறுத்திவிடும்.

# மரக்கறி புலாவ்

தேவையான பொருட்கள் ;
சீரக சம்பா அல்லது பாசுமதி அரிசி - அரைகிலோ
எண்ணெய் - 50- மில்லி
நெய் - 50 மில்லி
இஞ்சிப் பூண்டு பேஸ்ட் - 2 தேக்கரண்டி
ஏலம் - 2
கிராம்பு - 2
பட்டை - 2 சிறியதுண்டு
பிரியாணி இலை அல்லது ரம்பை இலை - சிறிது
புளிக்காத மோர் - ஒரு கப்
வெங்காயம் - 1
தக்காளி - சிறியது-1
மிளகாய் -2
கரட், உருளை, பீன்ஸ், பச்சைப் பட்டாணி - சேர்ந்து கால் கிலோ
மல்லி புதினா - சிறிது
உப்பு - தேவைக்கு



விரும்பனால் தேங்காய்ப்பால் சேர்க்கலாம்.காய்கறிகளை நறுக்கி வைக்கவும், அரிசியை அலசி, குறைந்தது அரைமணி நேரம் ஊறவைக்கவும்.

முதலில் புலாவ் செய்யும் பாத்திரத்தில் நெய் காயவிட்டு ஏலம், பட்டை, கிராம்பு, பிரியாணி இலை சேர்க்கவும்.வெங்காயம் சிவக்காமல் நன்கு வதக்கி, இஞ்சி பூண்டு தக்காளி, மிளகாய், சிறிது மல்லி, புதினா வதக்கவும். அடுப்பைச் சிறிதாக எரிய விடவேண்டும்.

நறுக்கிய காய்கறிகள் சேர்த்து வதக்கி மூடி வைத்து வேகவிடவும். தண்ணீர் சேர்க்கக் கூடாது, எண்ணெயில் விரைவில் வதங்கி வெந்து விடும். மோர் ஒரு கப் சேர்க்கவும், விரும்பினால் தேங்காய்ப்பால் ஒரு கப் சேர்க்கலாம், அரிசியின் அளவிற்கு ஒன்றுக்கு ஒன்றே முக்கால் தண்ணீர் வைக்கவும். சமமான அளவில் அடுப்பில் தீயை வைத்து மூடி வைக்கவும்.புலாவ் வெந்து மேல் வரும்.புலாவை பிரட்டி அடுப்பை சிம்மில் வைக்கவும். மூடி பத்து நிமிடம் சிம்மில் வைக்கவும்.

புலாவ் பாத்திரத்தைத் திறந்து ஒரு முறை பிரட்டி விடவும், ஏலம் பட்டை கிராம்பு கண்ணில் பட்டால் எடுத்து விடவும். மோர் சேர்ப்பதால் வெள்ளையாகவும் மென்மையாகவும் உதிரியாகவும் வரும்.

மோர் இல்லையெனில் தயிர் சிறிது சேர்க்கவும்.

சுவையான சிம்பள் மரக்கறி புலாவ் தயார்.

இதனை ஆட்டிறைச்சி, கோழி இறைச்சியுடன் அல்லது பச்சடி, ப்ரை இஸ்வீட் ஆகியவற்றுடன் பரிமாறலாம். மரக்கறிப் பிரியர்கள் சாம்பார், குருமா, புதினா துவையல், வெஜ் கட்லெட், சிப்ஸ், காலிபிளவர் பிரை உடன் செய்தும் அசத்தலாம். நிஜமாகவே சாம்பாருக்கு இந்த புலாவ் அருமையாக இருக்கும்.

குறிப்பு : இஞ்சி, பூண்டை சிவக்காமல் வதக்கவேண்டும், கரம்மசாலா தூள் சேர்க்காமல் தனித்தனியாகப் போடுவதால் புலாவ் பார்க்க வெள்ளையாக அழகாக, தெவிட்டாத ருசியுடன் இருக்கும்.

**சகோதரிகளே!**

பெண் பகுதியில் பிரசுரமாகும் சகோதரிகளின் பார்வைக்கு நீங்களும் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பலாம்.
இச்சமூகத்தில் சகோதரிகள் மட்டத்தில் நீங்கள் காணும் குறைநிறைகளை எம்மோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.
நீங்கள் பகிர்ந்துகொள்ளும் விடயங்கள் ஒவ்வொன்றும் ஆக்கபூர்வமானவையாகவும் இருக்க வேண்டும்.

**வந்து சேர வேண்டிய எமது முகவரி:**
சகோதரிகளின் பார்வைக்கு
சுடர் ஒளி வாரமலர்,
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு 14.



படம்-மாசி



படம்-காதல் சொல்ல வந்தேன்



படம்-கனிமொழி

## வேலாயுதத்தில் நிருபராக ஜெனிலியா

'வேலாயுதம்' படத்தில் பத்திரிகை நிருபராக நடிக்கிறார் ஜெனிலியா. இது தெலுங்கில் சௌந்தர்யா நடித்த வேடம் என்பது குறிப்பிடத்தக்கது.

தெலுங்கில் நாகார்ஜுன், சௌந்தர்யா, ஷில்பா ஷெட்டி நடித்த 'ஆஸாத்' படத்தைத்தான் தமிழுக்கேற்ப மாற்றி வேலாயுதமாக எடுக்கின்றனர். இதில் நாகர்ஜுன் வேடத்தில் விஜய்யும், சௌந்தர்யா நடித்த வேடத்தில் ஜெனிலியாவும் நடிக்கின்றனர்.

சௌந்தர்யா 'ஆஸாத்'தில் பத்திரிகை நிருபராக நடித்திருந்தார். ஷில்பா ஷெட்டி நடித்த வேடத்தை தமிழில் செய்பவர் ஹன்சிகா மோத்வானி.

இவர்கள் தவிர சரண்யா மோகனும் வேலாயுதத்தில் நடிக்கிறார். இவர் விஜயின் தங்கையாக நடிக்கிறார். பிரியன் படத்துக்கு ஒளிப்பதிவு செய்கிறார். இவர் ஒளிப்பதிவு செய்யும் முதலாவது விஜய் படம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஓபராயால் சூரியாவுக்குச் சிக்கல்.........?

ராம்கோபால் வர்மாவின் 'ரத்த சரித்திர'த்தில் சூர்யா, பிரியாமணி நடித்துள்ளனர். தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காத விவேக் ஓபராயும் இந்தப் படத்தில் நடித்துள்ளார்.

இந்தக் கறுப்பு ஆடு காரணமாக 'ரத்த சரித்திர'த்தைத் தமிழகம் மட்டுமின்றி மேலும் நான்கு இந்திய மாநிலங்களில் வெளியிட இயலுமா என்ற சந்தேகம் வலுத்துள்ளது. சூர்யாவுக்காக, விவேக் ஓபராய் இடம்பெற்ற ஒரு படத்தைத் திரையிட அனுமதிக்க முடியாது என்று சங்கங்கள் திட்டவட்டமாக கூறிவிட்டன.

இந்நிலையில் படத்தின் சில காட்சிகளை 'ரீ ஷூட்' செய்யத் தீர்மானித்துள்ளார் வர்மா. இதற்காக 15 நாட்கள் கூடுதல் கால்ஷீட் கொடுத்துள்ளார் சூர்யா.என்ன கொடுத்தாலும் படம் பார்வையாளர்களின் பார்வைக்கு வருமா

## திரை விமர்சனம்




மேகமலை என்னும் பகுதியில் வாழும் மக்களின் தலைவனாகக் கொண்டாடப்படுபவர் வீரா. மக்கள் இவரை நல்லவன் என்று சொன்னாலும், பொலிஸாருக்கு இவர் என்னவோ கெட்டவர்தான்.

அப்புறம் பொலிஸ் எப்படி சும்மா இருக்கும்? வீராவைப் போட்டுத் தள்ளும் பொறுப்பு, என்கவுன்டர் ஸ்பெஷலிஸ்டான தேவ் என்பவர் கையில்,ஒப்படைக்கப்படுகிறது. வீராவைக் குறி வைக்கும் பொலிஸ் கையில் சிக்குவது அவர் தங்கை வெண்ணிலா. பொலிஸ் நிலையத்தில் சில காவலர்கள் அவளை சின்னாபின்னமாக்கிவிட, தற்கொலை செய்து கொள்கிறாள் வெண்ணிலா. அதற்குப் பழி தீர்க்கும் விதமாக தேவின் மனைவி ராகினியைக் கடத்துகிறார் வீரா. மனைவியை

மீட்பதற்காக வீராவைத் தேடிப் போகிறார் தேவ். கடைசியில் மனைவியை மீட்டாரா இல்லையா என்பது கதை.

வீரா என்கிற வீரய்யாவாக விக்ரம். விக்ரமின் நடிப்பாற்றலுக்குத் தீனி போடுகிற மாதிரியான கேரக்டர். விக்ரம் பேசும் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடுகிறோம்... மேல்தட்டு மக்கள்... கீழ்த்தட்டு மக்கள்... எனும் வசனங்கள் பழங்குடி மக்களையும் நக்சலைட்டுகளையும் நினைவுபடுத்திப்போகின்றன. தேவ்வாகப் பிரித்விராஜ். சில காட்சிகளி மௌனமாகவே இருக்கும் இவர் கண்களில், தன் மனைவியைக் க வீராவைக் கொல்ல வேண்டும் என்று புறப்பட்டதும் கோபமும் கு குடிகொண்டு விடுகின்றன. ராகினியாக ஐஸ்வர்யாராய். சொந்தக் கு யிருக்கிறார். பாராட்டப்பட வேண்டிய விடயம்தான். இவரது எக்ஸ்பிரசன்ஸ்களை வெளிப்படுத்துவதற்கு ஏற்றமாதிரி ஏகப்பட்ட காட்சிகள்.

பாஸ்டராக வரும் கார்த்திக், குரங்கு சேஷ்டை பண்ணுவதில் ஆரம்பித்து வீராவுக்கும் அதிரடிப்படையினருக்கும் சமாதானம் பேசுவது வரை வந்து போகிறார். வீராவின் அண்ணனாகப் பிரபு. நம் மனதில் அழுத்தமாக ஒட்டிக் கொள்ளும்படியான கதாபாத்திரம்தான (வெண்ணிலா) பிரியாமணி. ஒரு சில காட்சிகளில் வந்து போகிறார் நித்யானந்தா புகழ் ரஞ்சிதா. அரவாணி வேடத்தில் வையாபுரியும் நடித்திருக்கிறார்.படத்தின் உண்மையான ஹீரோ மணிரத்னம்தான். படம் முழுக்க அவருடைய உழைப்புத் தெரிகிறது. பார்த்துப் பார்த்துக் காட்சிகளை உருவாக்கியிருக்கிறார் மனிதர். அதற்காக ஒட்டு மொத்தக் குழுவும் நன்றாகவே உழைத்திருக்கிறது. அருவி, மலை சம்பந்தப்பட்ட காட்சி களில் ஒவ்வொரு காட்சியும் அவ்வளவு அழகு. இயற்கையை ஒட்டு மொத்த குத்தகைக்கு எடுத்திருக்கிறார்கள். காடுகளும் மலைகளும் அருவியும் மட்டுமே படம் முழுக்க ஆக்ரமித்திருப்பதால் ஏதோ பழங்குடி மக்களுடன் வாழ்கின்ற ஓர் உணர்வை ஏற்படுத்துகிறது. ஒளிப்பதிவு சந்தோஷ் சிவன், வி. மணிகண்டன்.

மர பாலத்தில் நடக்கும் சண்டைக்காட்சிகள், ஐஸ்வர்யாராய் மலையிலிருந்து குதிக்கும் காட்சிகள் எனப் பிரமிக்க வைக்கின்ற காட்சி களுக்குப் பஞ்சமில்லை. வசனம் சுஹாசினி மணிரத்னம். அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களில் ஒருவராக விக்ரம் பேசும் வசனங்களுக்கு மட்டுமின்றி கதாபாத்திரங்கள் ஒவ்வொருவரும் பேசும் வசனங்களுக்காக சபாஷ் போடலாம். இசை ஏ.ஆர். ரஹ்மான். 'உசுரே போகுதே' கேட்கவும் ரசிக்கவும் வைக்கிறது. காட்சிகளோடு இணைந்து பின்னணி இசையும் பேசுகிறது.

எல்லாவற்றுக்கும் சேர்த்து இயக்குநர் மணிரத்னத்திற்குத்தான் பெரிய சபாஷ் போட வேண்டும். இந்தப் படத்தில் பணியாற்றியவர்கள் எல்லோருமே திரைத்துறையின் பெரிய தலைகள். அவர்களை எல்லாம் வைத்துக்கொண்டு இப்படி ஒரு படத்தை இயக்குவது - தயாரிப்பது என்பதே சவாலான விடயம்தான். இயக்குநர் மணிரத்னம் அதில் வெற்றிபெற்றிருக்கிறார் என்றே சொல்லவேண்டும்.



ரசிகர்களின் மனசுக்குள் ஐஸ் துகள்களைத் தூவியுள்ளது அனுஷ்காவின் அழகு. உயரம், உடற்கட்டு, நிறம் என அனுஷ்காவின் அழகில் திரி ரோஸஸ் கலவை. உங்கள் அழகின் இரகசியம் என்ன? நடிகைகளிடம் வழக்கம்போலவே கேட்கும் கேள்வியை அனுஷ்காவிடம் இறக்கி வைத்தபோது இப்படிச் சொல்கிறார்.....

என்னோட உயரம் பற்றிச் சொல்லாதவர்களே இல்லை. அதுதான் என் ப்ளஸ் ஆக இருந்தாலும், சில நேரங்களில் குட்டையாக இருந்திருக்கலாமோ என்ற எண்ணமும் வரும். தினமும் 40 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்கிறேன். யோகாவும் உண்டு. 8 மணிக்கு மேல் சாப்பிடமாட்டேன்.எப்போதாவதுதான் அசைவ உணவுகள் சாப்பிடுவேன். சைவ உணவுகளையே விரும்பிச் சாப்பிடுவேன். வெஜிடேபிள்ஸ்தான் ஸ்கின்னுக்கு நல்லது. கண்ணில வெள்ளரிக்காய்த் துண்டுகளெல்லாம் வைக்கிறதைவிட தியானம் செய்வதுதான் நல்லது. இதையெல்லாம் நான் பின்பற்றுறதுகூட எனது அழகுக்குக் காரணமாக இருக்கலாம் என்ற அனுஷ்கா, எல்லாவற்றையும்விட ரொம்ப முக்கியம் எங்க அப்பா அம்மாதான் என கலாய்க்கிறார் .

## உங்கள் அழகின் இரகசியம் என்ன?





படம்-சாந்தி



படம்-அசுர குலம்

# திரிஷாவின் காட்டா மிட்டா

திரிஷா நடித்திருக்கும் முதல் ஹிந்திப் படமான 'கட்டா மிட்டா' வெளி[illegible] [illegible]டிருக்கிறது. [illegible]வ சினிமாவில் அறிமுகப்படுத்திய ப்ரியதர்ஷனே அவரை ஹிந்தியிலும் அறிமுகப் படுத்தியுள்ளார்.

'கட்டா மிட்டா' பல வருடங்களுக்கு முன் பிரியதர்ஷன் மலையாளத்தில் இயக்கிய 'வெள்ளானைகளுடே நாடு' படத்தின் தழுவல். இந்தப் படத்தில் மோகன்லால், சீனிவாசன், ஷோபனா ஆகியோர் [illegible]த்திருந்தனர். [illegible]லாலுக்கு இதில் 'ரோட்' கான்ட்ராக்டர் வேடம். 'கட்டா மிட்டா'வில் அஜய்குமார், மோகன்லால் வேடத்தில் நடித்துள்ளார். ஷோபனாவுக்குப் பதில் திரிஷா.

# ரஜினி புகழ் பாடும் சங்கர்

திரையுலகில் ரஜினியை வீழ்த்த வேறு ஆளே இல்லை. அவரேதான் மாஸ்... அவரேதான் பாஸ், என்கிறார் இயக்குநர் ஷங்கர். இயக்குநர் ஷங்கர் அளித்துள்ள பேட்டியின் ஒரு பகுதி இங்கே தரப்படுகிறது:-

கே-எந்திரன் 3 டி படமா?

ப-'அப்படியா பேசிக்கிறாங்க... குட்!

'டெர்மினேட்டர்', 'அவதார்' படங்களில் வேலை பார்த்தவர்கள் 'எந்திரன்' படத்துக்கு வேலை பார்த்திருக்காங்க. அவ்வளவுதான் சொல்ல முடியும்.

இவ்வளவு நாளாகுதேன்னு சில பேர் கேட்கலாம். அவ்வளவு காரணங்கள் இருக்கு. நிறைய மெனக்கெடல் இருக்கு. ஒரு ரோபோ திடீர்னு மனிதனாக உருமாறி வெளியே மனிதக் கூட்டத்தில் திரிகிற விடயம். ஏகப்பட்ட டெக்னாலஜி கலந்திருக்கு.

இந்த அளவுக்குத்தான் ஒரு படம் இருக்கும் என்று நினைச்சு வந்தால், அதுக்குப் பல படிகள் மேலே போயிருக்கோம். இதுவரைக்கும் நீங்க பார்க்காத புதுசு. எங்க எல்லோருக்குமே, நான் படத்தின் டைரக்டராகவே இருந்தாலும்... இவ்வளவுதான் அனுமதி!''

கே-எப்படி இருக்கார் ரஜினி?

ப-''ரஜினி ரொம்ப அபூர்வம். புகழ், பணம், அந்தஸ்து அதெல்லாம் இல்லை விஷயம். எப்பவுமே அவர்கிட்ட ஒரு நிதானத்தை, அமைதியைப் பார்த்துட்டே வர்றேன். அதுதான் நான் தேடுறதும்!

நீங்க உங்களுக்கு நேர்மையாக இருக்கிறதுதான் பெரிய சவால். ரஜினி அந்தச் சவாலில் ஜெயிச்சவர். அவர்கிட்டே மாறாத விஷயம், நடிப்பு மேல் இருக்கிற துடிப்பு. கமல், விக்ரம்தான் இப்படிக் கெட்டப் மாற்றம்னு முன்னணியில் நிற்பாங்க. அது அவங்களுக்குக் கைவந்தது. இதில் ரஜினியும் அப்படி மாறிட்டார். நாலு மணி நேரமா, ஆறு மணி நேரமா அசையாமல் உட்கார்ந்து மேக்கப் போட்டாலும் செய்றார். டப்பிங் பேசிட்டுக் கிளம்பினதும் போன்ல, 'ஷங்கர்... அருமை அருமை'ன்னு சொல்வார். மாலையில் இன்னொரு போனில் 'மணிமணியா இருக்கு'ன்னு ஆசையாச் சொல்வார். அவரை வீழ்த்த வேறு ஆளே இல்லை. அவரேதான் மாஸ்... அவரேதான் பாஸ்!''

''கமல் 2000இல் இந்தப் படத்தில் நடிக்கிற மாதிரி இருந்தது. அவருக்கு ஏற்ற மாதிரி கதையில் அவசியமான எல்லா விஷயங்களும் செய்தும், அது நடைமுறைக்கு வரலை. அடுத்து, ஷாரூக். அதுவும் ஏனோ முடியலை. ஆனால், எல்லாம் நல்லதுக்குத்தான். 'எந்திரன்' ரொம்ப நல்லா வரணும்னு என்னைவிட அக்கறைப்படுபவர் ஒருத்தர் இருக்கார். அவர்தான் ரஜினி!''

கே- ''ஏன் இன்னும் விஜய், சூர்யான்னு ரெண்டு பேரும் உங்க கண்ணிலேயே படலை?''

ப- ''நான் கதையை வைச்சுக்கிட்டு ஹீரோவைத் தேடுகிற ஆளு. எடுக்கப்போற கதைக்கு அவங்க ரெண்டு பேரும் பொருத்தம்னா, அவங்ககிட்ட கேட்பதில் எனக்கு எந்தத் தயக்கமும் கிடையாது. நிச்சயம் அவங்க ரெண்டு பேரும் என் படங்களில் நடிக்கிற காலங்கள் இருக்கு!''

# ஒரு பாடலுக்கு ஆடுகிறார் சூர்யா

ஆறு மாதத்தில் படத்தை முடிப்பேன் என்று சொல்லிதான் 'அவன் இவன்' படத்தை ஆரம்பித்தார் பாலா. ஆனால், ஆறே நாளில் அது சாத்தியமில்லை என்பது அனைவருக்கும் தெரிந்துவிட்டது. படப்பிடிப்புக்குப் போவதும் பாதியில் பக்கப் சொல்லி திரும்புவதுமாக உள்ளே வெளியே ஆடிக்கொண்டிருக்கிறது 'அவன் இவன்' குழு.

இந்தப் படத்தில் நடிகர் சூர்யா கெஸ்ட் ரோலில் நடிக்கிறார் என்பது பழைய செய்தி. படத்தில் அவர் நடிகர் சூர்யாவாகவே வருகிறார் என கசிந்திருக்கிறது ஒரு புதுத் தகவல்.

'பிதாமகன்' படத்தில் சிம்ரன், நடிகை சிம்ரனாகவே ஒரு பாடலுக்கு ஆடினார் அல்லவா? அதுபோல் சூர்யாவும் அவன் இவனில் ஒரு பாடலுக்கு ஆடியிருக்கிறாராம். அப்போ கலெக்சன் உறுதி.



ஷம்மு

# விஜயின் புதிய ரசிகர்

தமிழ்ப் படத்தில் மொத்தத் தமிழ்ப் பட ஹீரோக்களையும் கிழித்துத் தொங்கப் போட்டாலும் விஜயைக் கொஞ்சம் ஸ்பெஷலாகவே கிண்டலடித்தார்கள். அதற்குப் பிராயச்சித்தமோ என்னவோ தெரியவில்லை. தனது புதிய படத்தில் விஜய் ரசிகராக நடிக்கிறார் மிர்ச்சி சிவா. தமிழ்ப் படத்துக்குப் பிறகு சிவா, புஷ்கர் - காயத்ரி இயக்கும் படத்தில் நடித்து வருகிறார் லேகா வாஷிங்டன் ஹீரோயின். இந்தப் படத்துக்கு 'குவாட்டர் கட்டிங்' என்று பெயர் வைத்திருந்தனர். தமிழில் பெயர் வைத்தால் மட்டுமே வ்ரிச்சலுகை என்பதால் படப் பெயரை மாற்ற இருக்கிறார்கள். இந்தப் படத்தில் சிவா, விஜய் ரசிகராக நடிக்கிறார் புஷ்கர்-காயத்ரியின் முதல் படம் 'ஓரம்போ'. வழக்கமான தமிழ்ச் சினிமாவிலிருந்து மாறுபட்ட படம் என்பதால் சிவா நடிக்கும் புதிய படத்தையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறது கோடம்பாக்கம்.

# கவிதைப்புனல்

## சொந்த நாடு

சொந்தமண்ணை விட்டகன்ற போதும்-அதன்
சொப்பனங்கள் எம்நினைவில் வாழும்
எந்தநிலை வந்தணைந்த போதும்-தமிழ்
எம்மனதில் நின்றுதுணி வூட்டும்!

எங்களது முந்தையரின் நாடு-அவர்
இனிமைவேர் விட்டுயர்ந்த வீடு
மங்களத்தின் சீர்பிசகாப் பாட்டு-அதன்
மாண்புகளே எம்இருப்பின் ஊற்று!

பச்சைவயல் எம்பிச்சைச் சாய்க்க-சிந்து
பாடும்கடல் மீன்முத்தைை நீட்ட
முச்சையைத் திருத்தித்தமிழ்க் காக்க-ஆண்டார்
முன்னோரும் விண்வியந்து பார்க்க!

பாயும்நதி இலையென்ற சாபம்-ஞானம்
பரப்புகோவில் கங்கைகளால் தீரும்
நாதசுரம் தவில்,கவிதை கேட்டாம்-முன்பு
இங்கிருந்த மலைகரைந்து போச்சாம்!

பால்உணவு உண்டெழுந்த போதும்-பின்
பல்முளைத்துக் காதலித்த போதும்
நோய்நொடியில் வாயரற்றும் போதும்-தமிழ்
நூதனமே....எம்முயிர்க்கு நாதம்!

-அருணன்-

## அறியாமை

எந்தன் இனசனத்துள் அறிவு
எள்ளளவும் இல்லை யில்லை
விந்தைமிகு செய்தி தானிது
வியப்பதிலே யொன்று மில்லை

குந்திய வீட்டுக் குள்ளே
குழந்தைகள் பலவாய்ப் பெற்று
சந்ததி வளர்ப்பது தானிவர்க்கு
சரித்திரமாய்ப் போச்சுது காண்

பணம்பண்ட மிருந்தால் போதும்
படிப்பே நமக்குத் தேவையில்லை
குணம்நமக் கேது வேண்டாம்
குப்பையிலே போடு அதை!

நல்லது கெட்டது நடக்கும் நாளில்
நாலுபேர்கள் ஒன்றாய்க் கூடி
இல்லிடத்தின் பின்னால் மறைந்து
எடுத்தடிப்பர் போதைப் பொருள்!

மெல்ல ஏறும் சுதியில் இரத்தம்
மேனியெங்கும் பரவி வேகம்
சொல்லும் வார்த்தை சுரணை யற்று
சோரம்போம் வாழ்க்கை மானம்!

அலெக்ஸ் பரந்தாமன், புதுக்குடியிருப்பு

## குறிஞ்சிக் கோவில்கள்

### இராகலை
### ஸ்ரீ கதிரேசப் பெருமான்

திரிகிரிகள் எரித்து அமரர்குலம் புரந்த
பிறைசூடி மைந்தன் கோயில்
விரிகதிரைப் பாய்ச்சி எழுமருக்கன் காலை
தரிசிக்கும் சிற்ப வாயில்!
அரியென்னுந் திருமால் திருமருகன் முருகன்
அருட்கோயில் பொலிவில் மாட்சி
தரிசிக்கும் கோயில் இடக்கோடி முகப்பில்
யானைமுகன் தரித்துக் காட்சி!

கூர்பார்வை ஈர்க்கும் நிமிர்மேரு அடுக்கம்
குன்றுகுலம் சூழ்ந்து இலங்கும்
ஆர்க்குங்கார் கடலின் வரைதரையாய் நீல
வானோடு நோக்கின் துலங்கும்
கீர்த்தியுள சீரூர் இராகலைப்பேர் நகரில்
சிறப்பெய்தும் கந்த கோட்டம்
தேர்வூரும் தெருக்கள் முச்சந்தி மத்தி
திருக்குன்றில் சக்தி வேலோன்!

அணிகூட்டுங் கோயில் குன்றத்தில் தோன்றி
மணியோசை பரப்பும் நகரம்
வணிகர்குழு அன்று நிருவாகி கண்டு
கைக்கொண்ட குன்றச் சிகரம்
பிணிதொல்லை நீக்கி துணிவுள்ளம் நல்கி
பரிந்தென்றும் புரக்குங் கோயில்
பணிவார்கள் நண்ணி நினைப்பார்கள் இல்லில்
பறந்தேகும் அன்னார் வாட்டம்!

சங்கத்தமிழ்ப் பத்துப் பாட்டுத்தரும் முத்து
முதற்பாட்டுப் போற்றும் வீரன்
அங்கத்தில் சேரும் பரிபாடல் ஏத்தும்
அடியாரைப் புரக்குந் தீரன்
கங்கையனின் நெற்றிக் கண்வீச்சில் தோன்றி
கஞ்சமலர் மஞ்சம் வளர்ந்தோன்
செங்கரத்தில் தங்க வேலேந்தி அன்று
சூரனைப் பிளந்து நின்றோன்!

(தொடரும்)

-கவிஞர் ஸி.எஸ்.காந்தி-





## வழிகாட்டி அருளம்மா!

கொலையும் கொள்ளையும் மலிந்ததம்மா-அவை
கொடிகட்டி இங்கே பறக்குதம்மா
கலையும் கல்வியும் விலைபேசி-இங்கு
கொட்டிலில் கூவி விற்குதம்மா!

அலையும் மலையும் கலையதுவும்-மூகிழ்ந்து
அவனியைக் காக்கப் பிறந்தவளே
நிலையும் சாய்ந்து தவிக்குமெமை-அம்மை
நீள்விழி காட்டி அருளாயோ?

வீரத்தை விளைத்திடும் சத்தியம்மா-இங்கு
வீணரை அழித்திடு முத்தியம்மா
பாரத்தைச் சுமந்திடும் மாட்டினைப்போல்-நாங்கள்
பாரினில் வீழ்ந்து பதரானோம்!

ஊரதைக் காத்திடப் பிறந்தவளே-எங்கள்
உள்ளத்தின் அழுகுரல் கேட்காதோ?
சீரதை வேண்டித் தவிக்குமெமை-நீயும்
திருவிழி காட்டி அருளாயோ?

-எஸ்.சேகர்-

## மையவட்டம்

கோயிலைச் சுற்றினான் பக்தன்-பல
கோதையர் சுற்றினான் பித்தன்-துயிற்
பாயினைச் சுற்றினான் முத்தன்-தென்னம்
பாலையைச் சுற்றினான் அப்பன்!

படியடா படியடா என்று-தாய்
பதைக்கிறா உதைக்கிறா இன்று
பிடியடா அடியடா என்று-பெடி
பிரழூறான் தெருவிலே நின்று!

காதலா காதலா என்று-அவள்
காயுறாள் சாயுறாள் இன்று
மோதலும் சேதமும் நின்று-அந்த
மோகமும் தீருமா வென்று?

முட்டையில் பிடுங்குவன் மயிரே-என
முயல்வது வீண் இளம் பயிரே-ஒரு
வட்டமாய் வாழ்வது என்றால்-ஒன்றை
மையமாய் சுற்றிவா, வென்றாய்!

-கி.குருபரன்-

## பாட்டை ரசிக்கப் பகர்



காதடைக்கும் காட்டுக் கதறலோடு வாத்தியத்தின்
பேதமற்ற பின்னணிகள் பீறிடுதே-கீத
அழகுத் தமிழ்ப்பாட்டில் ஆங்கிலமே மிஞ்சும்
பழனிசேர் பாரதியின் பாழ்!

பூக்கள் அவளைவிடப் பூக்காத தன்மையால்
நாக்காலே கேட்கா நளினமாய்-ஏக்கமொடு
'ஆட்டோ கிராப்' கேட்ட தற்புதந்தான்; பாமரனும்
பாட்டை ரசிக்கப் பகர்!

தூங்காதே தம்பிநீயும் தூங்காதே என்றானே
பாங்கான பாவலனாம் பட்டு(க்)கோட்டை-மாங்காய்
மடையனே! பாட்டாளி மக்களின் வேர்வை
துடைக்கவே பாட்டெனத்தேர்!

பொன்மாலை போன்ற பொழுதொன்றில் வைரமுத்து
கண்மாலை போடக் கவிசொன்னான்-இன்றோ
பூச்சூடும் பின்னல் புதுக்கவிதைப் பெண்ணுக்கா
சீச்சீயிப் பல்லில்லாச் சீப்பு?

சட்டி சுடுகின்ற தத்துவம்சொல் கண்ணதாசன்
சிட்டுத் தமிழ்நடந்த சிங்கார-மெட்டினிலே
கன்னித் தமிழ்மகளை கற்பழிப்பார் பாரதியா
பின்பேன் பிணத்திற்குப் பேர்!

-சு.முரளீதரன்-



# மரபும் நவீனமும்

நாவலர் காலம் முதல் போற்றப்பட்டு வந்த ஒரு சமூக மரபை பின் வந்தவர்களும் கடைப்பிடித்து வந்துள்ளனர். முன்னோர் சென்ற மரபைப் போற்றிப் பேணவேண்டும் என்பதில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, இரசிகமணி கனக. செந்தில்நாதன், பண்டிதர் சைவப்புலவர் இ. வடிவேல் ஆகியோர் அக்கறை கொண்டிருந்தனர். பண்டிதமணியிடம் கல்வி பயின்ற மாணாக்கர்களும் பின்வந்த ஒரு சில பண்டிதர்களும் மரபுவழி கவிதைகளை ஆக்கிவந்துள்ளனர்.

இலக்கிய உலகில் அன்று பேசப்பட்ட இரசிகமணி கனக. செந்தில்நாதன் ஈழத்து இலக்கிய மரபின் ஒரு பிரதான செல்நெறியினை ( நாவலர் மரபினை) கைக்கொண்டிருந்தார். இக்கட்டத்தில் ஒரு நுண்ணிய வேறுபாட்டை விளங்கிக் கொள்ளல் வேண்டும். ஒன்று இலக்கியப் பெறுமானங்கள் பற்றியது. மற்றது அந்தப் பெறுமானங்கள் உண்டா? இல்லையா? என்று விமர்சிப்பது பற்றியது. 'பெறுமானத்தைப் பொறுத்தவரையில் கனக. செந்தில்நாதன் நாவலர் பெறுமானத்தையே மேற்கொள்ளுகிறார். அது அவரது சமூகத்தளத்தின் அடியாக வருவது. அதாவது எழுதப்படுவதன் புலமைத்தளம் அதுதான். ஆனால் விமர்சித்த முறையில் நாவலர் முறைமை இருக்கவில்லை. நாவலர் முறைவிமர்சனம் சற்றுக் காரசாரமானது. பிய்த்துப் பிய்த்துப் போடுவது. எந்த ஒரு சூழலிலும் தன்னோடு போலிகளை இணைய விடாதது. அந்த நிர்த்தாட்சண்ணியப் போக்கு கனக. செந்தில்நாதன் விமர்சனத்தில் இருக்கவில்லை' என்று பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி கூறியுள்ளார்.

பழைமைபேண் வாதிகள் நவீனத்தை எதிர்கொண்டபோது, நமது பாரம்பரியத்தில் நவீனத்துக்கு முன் இருந்தவற்றை அவர்கள் சிலாகித்தே பேசி வந்தனர். அவ்வாறு சிலாகித்துப் பேசும் பொழுது நவீனத்தன்மைக்கு உரியதான நவீனத்துவத்தை நாசூக்காகக் கண்டித்தனர். இந்தப் போக்கின் மிகச் சிறந்த உதாரணமாக விளங்கியவர் டி.கே.சி. அந்தவகையில் இலங்கையில் கனக. செந்தில்நாதனைக் குறிப்பிடலாம்.

1956 ஆம் ஆண்டுக்குப் பின் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் இலங்கையின் இலக்கியத் துறையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்ற அமைப்பு உருவாவதற்கு அடித்தளம் அமைக்கப்பட்டது. கே. கணேஷ், சில்லையூர் செல்வராசன், இளங்கீரன், செ. கணேசலிங்கன் ஆகியோர் முன்னின்று உழைத்தனர். கே. டானியல், டொமினிக் ஜீவா, நீர்வை பொன்னையன், பேராசிரியர் கா. சிவத்தம்பி, அ. முகம்மது சமீம், பிரேம்ஜீ போன்ற பலர் இவ்வமைப்பில் இணைந்து கொண்டு நவீனத்துவத்தை முன்னெடுத்துச் சென்றனர். ஈழத்து இலக்கியம் புதிய பரப்பில் தன்னை இணைத்துக் கொண்டது.

முற்போக்கு எழுத்தாளர்கள் மார்க்சியக் கோட்பாடுகளை முன்னிறுத்தி தமது படைப்புகளை வெளிக்கொணர்ந்தனர். தேசிய இலக்கியம் முன்வைக்கப்பட்டது. தேசிய இலக்கியத்தை முன்நிறுத்தி பேராசிரியர் க. கைலாசபதி கட்டுரைகளை எழுதினார். இளங்கீரனின் 'மரகதம்' சஞ்சிகை தேசியத்தை வலியுறுத்தி கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்டு வந்தது. இலங்கையின் இலக்கிய வரலாற்றில் இக்காலம் பொற்காலம் எனக்கொள்ளப்பட்டுள்ளது.




நவீன வளர்ச்சிக்கு முற்போக்கு எழுத்தாளர்களின் பங்களிப்பு முக்கியமானதாக சிறுகதை, நாவல், கவிதை, விமர்சனம் ஆகியவற்றில் புதிய உலகை நோக்கிய பார்வையை முற்போக்கு எழுத்தாளர்கள் கொண்டிருந்தனர்.

செ. கணேசலிங்கன், இளங்கீரன், கே. டானியல், ஆகியோர் நாவல் துறையில் முற்போக்கு எண்ணங்களை முன்னிறுத்தி மக்கள் இலக்கியம் படைத்தார்கள். சிறுகதையைப் பொறுத்தளவில் டொமினிக் ஜீவா, நீர்வை பொன்னையன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். கவிதைத்துறையில் சில்லையூர் செல்வராசன், இ. முருகையன் முற்போக்குக் கவிஞர்களாக முகிழ்ந்து நின்றனர். விமர்சனத்துறைப் பேராசிரியர் க. கைலாசபதியால் முன்னெடுக்கப்பட்ட போது, அது தனக்கான தனித்துவத்தை பெற்று நின்றது. மார்க்சியக் கண்ணோட்டத்தில் அவர் ஏற்படுத்திய மாற்றம் இன்றுவரை பல அறிஞர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கான மதிப்பைப் பெற்று நிற்கின்றது. பேராசிரியர் க. கைலாசபதியால் முன்னெடுக்கப்பட்ட விமர்சனப் போக்கை தமிழகத்தில் பேராசிரியர் வானமாமலை முன்நிறுத்தி, முன்னெடுத்துச் சென்றார்.

தமிழில் நவீனத்துவம் சார்ந்த ஒரு படைப்புச் சூழல், அதன் தீவிரத் தன்மையுடன் இயங்கிய ஒரு காலகட்டத்தின் பல்வேறு பொறிகளை எம்மால் காணமுடிகிறது. நவீனத்தின் தீவிரமான பொறிகளும் படைப்புணர்வும் செயற்படும் ஒரு காலகட்டத்தை புதிய உயிரோட்டத்துடன் காண்கின்றோம். மேலும் தமிழில் நவீனத்துவம் சார்ந்த ஒரு காலகட்ட மனநிலை வளர்ச்சியின் பல்வேறு கூறுகளையும் அவதானிக்க முடிகிறது.

முக்கியமாக, தமிழில் புதுக்கவிதை சார்ந்து உருவான ஒரு புத்திலக்கிய எழுச்சி, கவிதை குறித்தும் விமர்சன அணுகுமுறை குறித்தும், புனைவு இலக்கியம் குறித்தும் மரபு கடந்த புத்துணர்வுகளை கிளர்ந்தெழச் செய்ததையும் சி.சு. செல்லப்பாதம்முடைய 'எழுத்து'ப் பத்திரிகையின் மூலம் அவ்வுணர்வுகளுக்கு ஒரு வடிகாலாக அமைந்துள்ளதையும் காணலாம். 1960 களில் சி.சு. செல்லப்பாவின் 'எழுத்து' சஞ்சிகையின் மூலம் தமிழில் புதுக்கவிதை சார்ந்து உருவான மன எழுச்சியின் பின்புலத்திலேயே இலக்கிய விமர்சனம், சிறுகதை, நாடகம், ஓவியம் ஆகிய பல்வேறு வடிவங்கள் விரிவு பெற்றுள்ளன. அந்தந்தக் காலகட்ட உணர்வுகளின் ஆழ்ந்த மனநிலை வெளிப்பாடுகளாகவும் உள்ளன.

காவியக் குணங்களும், நுண்ணிய அசைவுகளும், இசைக் கூறுகளும் கொண்ட கூத்துப் போன்ற மரபுக்கலைகள் மேடையேற்றத்துக்காக நவீனப்படுத்தப்பட்டுள்ளன. பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் சி. மௌனகுரு ஆகியோரின் பங்களிப்புகள் கூத்தின் நவீனத்திற்கு உதவியாக அமைந்தமை கண்கூடு.

நாடகத்துறையில் புதிய உத்திகளைக் கையாண்டு நவீன நாடகமரபை ஏற்படுத்தியவர்களாக தாசீசியஸ், சுந்தரலிங்கம், இ.சிவானந்தன் ஆகியோர் முன்நிற்கின்றார்கள். சுந்தரலிங்கம், சிவானந்தன், ஆகியோரின் நாடகங்கள் பேராசிரியர் க. கைலாசபதியின் விமர்சனங்களைப் பெற்றிருந்தன.

சிறுகதை, குறுநாவல் என்ற இலக்கிய வடிவங்களை பின்வந்த முற்போக்கு அணியைச சேர்ந்த செ. கதிர்காமநாதன், செ.யோகநாதன், முன்னிலைப்படுத்தினர். 'வசந்தம்' என்ற இலக்கியச் சஞ்சிகையும் நவீன இலக்கியத்துறைக்குத் தனது பங்களிப்பை வழங்கியுள்ளது.

பிறமொழி இலக்கியங்கள் தமிழுக்கு வரும்போது, அந்தப்படைப்பை வாசிக்கும்போது புதிய தரவுகளை, கோட்பாடுகளை உருவாக்கும் பாடுபொருள் மேற்கிளம்புவதைக் காணமுடியும். அந்த வகையில் உண்மையான படைப்பாளி வாசிப்பு, எழுத்து, இலக்கியத்தேடல் என்பவற்றை வாழ் நாள் முழுவதும் மேற்கொண்டு நவீன இலக்கியத் துறைக்கு தமது பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

****

## சங்கீதப் பழக்கப்போன கழுதையின் கதை

பாரதியார் கதை
(சென்றவாரத் தொடர்ச்சி)

## கர்த்தய ஸ்வாமியைப் பாம்புப் பெண் வசப்படுத்தியது

தென்னாட்டிலே சாலிவாடிபுரத்தில் கர்த்தப ஸ்வாமி மடங்கட்டித் தனது சீடர்களுடன் வாழ்ந்துகொண்டிருக்கையில் அங்கே ரோஜா என்ற பாம்புப் பெண் வந்தாள். எலுமிச்சம் பழத்தைப் போல நிறம்; மானைப் போலே விழி; பூர்ண சந்திரன் போலே முகம்; உடம்பிலே லாவகமும், கட்டும், பெண் புலியைப் போலே.

ஒரு நாள் மாலை நேரம்; சாமியார் பகற்சோறு தின்று, அந்த சிரமத்தினால் நாலைந்து மணிநேரம் தூங்கி விழித்த பிறகு, அந்த ஆயாஸம் தீரும் பொருட்டு நாலைந்து தோசைகளைத் தின்று, அரைப்படி பாலைக் குடித்துவிட்டு, வாயிலே வாஸனைப் பாக்குப் போட்டு மென்றுகொண்டு, இரண்டு சீடர்களிடம் பிரசங்கம் செய்து கொண்டிருக்கிறார்.

சாமியார் சொல்லுகிறார் -
''கேளீர், சீடரே,
''ஜன்மநா ஜாயதே சூத்ர:
கர்மணா ஜாயதே த்விஜ:''

பிறக்கும் போது சூத்திரன்; பூணூல் போட்ட பிறகுதான் பிராமணன். இந்த விதிக்கு விலக்கே கிடையாது. உபநயனம் செய்த பிறகுதான் பிராமணப் பிள்ளைக்கு பிராமணத்துவம் உண்டாகிறது. இதில் சந்தேகமில்லை உபநயனம் செய்யும்வரை அவனுக்கு எச்சில், தீண்டல் ஒன்றுமேயில்லை. சண்டாளனைப் போல் வளருகிறான். அப்படிப்பட்ட குழந்தையை அவனுடைய தாயார் தீண்டிவிட்டுப் பிறகு ஸ்நானம் செய்யாமல், மடைப்பள்ளியைத் தொட்டுச் சமையல் செய்தால், அந்த அன்னம் ஸ்வாமி நைவேத்தியத்துக்கு உதவாது அவ்விதமான அன்னத்தை ஸ்வாமிக்கு நைவேத்தியம் செய்வோர் குளிக்கப் போய்ச் சேறு பூசிக் கொள்வது போலே, பூஜை பண்ணப் போய் பாவத்தைத் தேடிக்கொள்ளுகிறார்கள்''.

என்றிவ்வாறு, பல நியாயங்களைக் காட்டிச் சாமியார் தான் எடுத்த கக்ஷியை ஸ்தாபனம் செய்து கொண்டிருந்தான். சீடர்கள் மிகவும் பக்தி சிரத்தையுடன் தலையை அசைத்தசைத்துக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இந்தத் தருணத்திலே பாம்புப் பெண் வந்து சாமியாருக்கு நமஸ்காரம் பண்ணினாள்.

''உட்காரம்மா'' என்று சாமியார் மெதுவான குரலில் சொன்னார். உட்கார்ந்தாள். ''நீ யார்?'' என்று சாமியார் கேட்டான். பாம்புப் பெண் சொல்லுகிறாள்-

''தாமரைப் பூ சேற்றிலே பிறக்கிறது. வண்டு காட்டிலே பிறக்கிறது. தாமரையைத் தேடி வண்டு வருகிறது. நான் சிங்கள தேசத்து ராஜன் மகள். பரதகண்டத்திலே, பற்பல இடங்களில் யாத்திரை செய்துகொண்டு, இந்த நகருக்கு வந்து சேர்ந்தேன். அம்மன் சன்னிதித் தெருவிலே இறங்கியிருக்கிறேன். இந்த ஊரில் தாங்கள் பெரிய பக்திமானென்றும், யோகியென்றும், ஞானியென்றும் கேள்விப்பட்டேன். தங்களிடம் வந்து ஆத்மா கடைதேறும் படியான மந்திரோபதேசம் பெற்றுக் கொண்டு போகலாமென்ற கருத்துடன் வந்தேன்'' என்றாள். சாமியாருக்கு உச்சந்தலையிலே பூமாரி பொழிந்தது போல், உடம்பெல்லாம் புளகமாய் விட்டது. சிங்கள தேசத்து ராஜன் மகள் சீடப்பெண்ணாக வந்தால் யாருக்குத் தான் ஆனந்தமேற்படாது?

''இப்போதே மந்திரோபதேசம் பண்ணட்டுமா?'' என்று சாமியார் கேட்டார். அவசரம் வாரிக்கொண்டு போகிறது. அவனுக்கு!

அதற்கு ரோஜா சொல்லுகிறாள் -

''நல்ல நாள், நல்ல லக்னம் பாரத்துச் செய்ய வேண்டும். மேலும், குருவுக்கு பாதகாணிக்கை வைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்; நாள் பார்த்துச் சொல்லுங்கள்'' என்றாள்.

சாமியாருடைய சந்தோஷம் கரை கடந்து விட்டது. சாமியார் சோதிடம் பார்க்கிறார் -

''இன்றைக்கு என்ன கிழமை? ஞாயிற்றுக்கிழமை நாளைக்குத் திங்கட்கிழமை. ஸோமவாரம், நல்ல நாள் கலையில் ஏழரை மணிமுதல் ஒன்பது மணி வரைக்கும் ராகுகாலம்; அது முடிந்தவுடனே நல்ல லக்னம் வருகிறது. செவ்வாய் மிதுன ராசியிலே பிரவேசிக்கிறான். அவனைக் குரு பார்க்கிறான். அப்போது மந்திரம் கூறுவதற்குப் பொருத்தமான வேளை. 'சுபயோக- சுபகரண- ஏவங்குண- விசேஷண- விசிஷ்டாயாம்' என்று சாஸ்திரம் முறையிடுகிறது. நம்முடைய மந்திரமோ வைரவ மந்திரம். எல்லாவிதமான தேவ நாமங்களும் வைரவ நாமத்துக்குள் அடங்குமென்பதற்குச் சூடாமணி நிகண்டிலே தக்க ஆதாரமிருக்கிறது. 'முத்தனே, குமாரன், பிள்ளை' என்று நிகண்டுக்காரர் சொல்லுகிறார். இந்த மந்திரோபதேசம் பெற்றவருக்கு இந்த ஜன்மத்திலே முத்தி' என்று சாமியார் சொல்லி நிறுத்தினார். ரோஜா ஒரு புன்சிரிப்புக் காட்டினாள். சாமியாருடைய ஆனந்தம் ஏறக்குறைய ஜன்னி நிலையிலே வந்து நின்றது. சாமியார் பின்னும் சொல்லுகிறான்.

''கேளாய், சிங்களதேசத்து ராஜகுமாரியே! உன் பெயரென்ன? ரோஜாவா? ஆ ஹா ஹா! குலத்துக்கும் ரூபத்துக்கும் பொருத்தமான பெயர். கேளாய், ரோஜாவே, ஜன்மங்கள் கோடானுகோடி என்று திருவாசகம் சொல்லுகிறது''.

அப்பாட்டைச் சாமியார் தனது பெயருக்கும் இயல்புக்கும் பொருந்திய குரலிலே பாடிக் காட்டினார். இந்தப் பாட்டிலே ''பாம்பு'' என்ற சொல் வந்தது. இருந்தாலும் ரோஜாவுக்குப் பயமுண்டாகவில்லை. இவன் முழு மூடனென்பது அவளுக்கு ஆரம்ப முதலாகவே தெரிந்து விட்டது. 'என்றாலும் குற்றமில்லை இவனை விடக்கூடாது. இதுவரை எத்தனையோ மனிதர் கை தவறிப் போய்விட்டார்கள்; இந்த மடத்தை நாம் இஷ்டப்படி ஆளலாம். இது தான் சாரியான புள்ளி' என்று பாம்புப் பெண் உறுதிசெய்து கொண்டாள்.

சாமியார் சொல்லுகின்றான் -

''கேளாய், ரோஜாப் பெண்ணே! சிங்கள ராஜன் கண்ணே! ஜன்மங்கள் எண்ணத் தொலையாது- ஆற்று மணலைப் போலே; வானத்து நாட்த்திரங்களைப் போலே; 'புனரபி ஜனனம், புனரபி மரணம்' என்று சங்கராசாரியர் சொல்கிறார். இந்த ஜன்மங்களிலே மனித ஜன்மம் சிறந்தது. கடல் சூழ்ந்த இந்த நிலவுலகத்திலே இத்தனை மேலான நர ஜன்மத்தை எடுத்து தக்க குருவைத் தேடியடைந்து மோட்ஷத்துக்குப் போகும் உபயத்தைத் தெரிந்துகொள்ளாதவர்கள் மறுபடி தாய் வயிற்றிலே பிறந்து பத்து மாதமிருந்து துயரப்பட்டு, மண்ணிலே பிறந்து பலவகைத் துன்பங்களை அனுபவிக்கிறார்கள். உனக்குத் தெரியாத விடயமொன்றுமில்லை. நம்முடைய வைரவ மந்திரம் உனக்குக்கிடைக்கப் போகிறது. நீ பெரிய பாக்கியசாலி'' என்றார்.

(தொடரும்)

இலவசம்

SUZUKI Way of Life!

SUZUKI MARUTI

Count on us

# யாழ் மண்ணில் உங்களுக்காக

## சுசூக்கி மற்றும் சுசூக்கி மாரூதி சேவை நிலையம்

## 26 மற்றும் 27ம் திகதிகளில் இலவச சேவை செயற்றிட்டம்

றோயல் லுப்ரிகேஷன் சேவை நிலையம்

K.K.S. வீதி சுன்னாகம், யாழ்ப்பாணம்

இலவச பரிசோதனை

பதிவுகளுக்கு இன்றே அழையுங்கள்

முரளி 0212 241090, 0213 217771, 0776 013568

**உடனடி தொடர்பு - விராஜ் 0772 245719**

AMW

அசோசியேட்டட் மோட்டர்வேய்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்

Web : www.amwltd.lk

E mail : maruti@amwltd.com

For Trade-in offer login to : www.amwtradein.com

# உள்ளக் கமலமடி...




பஞ்சம் பக்குவமாக ஒவ்வொரு பூவாக எடுத்துத் தொடுத்து மாலை கட்டிக்கொண்டிருந்தாள். பஞ்சவர்ணம் என்ற அவளது அழகிய பெயர் எல்லார் வாயிலும் பஞ்சம் என்று சுருங்கிய தாலோ என்னவோ அவளது வாழ்வில் பஞ்சம் தீர்ந்தபாடாக இல்லை.

குடிகாரக் கணவன், பொறுப்பற்ற மகன், முற்றிய குமரான மகள் என அவள் வாழ்க்கை மெள்ள நகர்ந்து கொண்டிருந் தது. தொழிலாளர் குடியிருப்பில் வாழும் அவள், கணவன் மனமிரங்கிக் கொடுக்கும் பணத்தோடு தானும் சில வீடுகளில் பாத்திரம் தேய்த்தும், அகப்பட்ட வேறு வேலைகளைச் செய்தும் உழைத்த பணத்தைக் கொண்டு ஒருவாறு மகளைப் படிக்கவைத்துவிட்டாள்.

அவர்களது சூழலைப் பொறுத்த வரை அவள் மகளின் படிப்பு உயர்வான தாகத் தோன்றினாலும் வசதிபடைத் தோரின் படிப்பை எட்டிப்பிடிக்க முடியாததால் அவளது மனதுக்குப் பிடித்த வேலை என்பது எட்டாக் கனியாக இருந்தது. சரி கல்யாணத்தையாவது செய்து வைக்கலாமென்றால் தனது படிப்புக்கேற்ற தொழில் செய்யும் வரன் வேண்டுமென்று மகள் பிடிவாதமாக இருக்கிறாள். அவளது உறவுகளிடையே அத்தகைய மணமகன் கிடைப்பதும் குதிரைக்கொம்புதான்.

பஞ்சத்தைப் பொறுத்தவரை அவளது ஒரேயொரு துணை அருகிலிருக்கும் கோவிலில் குடிகொண்ட ஆண்டவன் மட்டுந்தான். அவனோடு அவள் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டாள்: ''நான் உனக்கு மாலை சாத்துறன். நீ என் பொண்ணுக்கு வழிகாட்டு'' வேண்டுதல் என்னவோ சுலபமாகத்தான் இருந்தது. பூவுக்கு எங்கே போவது? வளவில் கால் வைக்கவே இடமில்லை. பூ மரம் நடு வது எப்படி? அதற்கும் வழி பிறந்தது. மரம் வைத்தவன் கவலையின் றித் தூங்கும்போது அவளுக்கென்ன கவலை? பூத்தொடுத்தவாறு இருந்த பஞ்சத்தின் மனதில் அன்று அதிகாலை நடந்த சம்பவங்கள் 'பிளாஷ்பாக்' ஆக ஓடின. பூ திருடுவது என்பது சாமான்ய விடயமா, என்ன? பூமரச் சொந்தக்காரர் திருப்பள்ளி எழுச்சி நடைபெறுவதற்கு முன்பதாகவே பூவில் கைவைக்க வேண்டும். வீதி யோரம் பூக்கள் பூத்துக் குலுங்கவேண்டும். வீட்டுக்காரருக்கு நாய் 'அலேர்ஜி' ஆக இருப்பதும் விரும்பத்தக்கது.

அன்று அவளது கெட்ட காலம் என்றைக்கும் அதிகாலையில் எழும்பாத ஒரு வீட்டுக்காரர் ஒரு துர்க்கனவு கண்டு விழித்துவிட்டார். அவள் பறித்த பூக்களை அவளிடமிருந்து பறித்த அவர் அவற்றை அருகிலிருந்த கானுள் கொட்டினார். ''இனி இந்தப் பக்கம் வந்தா என்ன நடக் கும் தெரியுந்தானே?'' என்று அவர் கேட்டபோது தெரு விளக்கின் சித்து விளையாட்டுக் காரணமாக அவர் சிரித்த தாற் போலிருந்தது. அவளும் பதிலுக்குச் சிரிக்கவே அவர் புறமுதுகு காட்டினார்.

இன்னொரு பெண்மணி, ''ஏன் பூ வேணுமெண்டா மரம் வைக்கியதுதானே? சரி, சரி ஆய்ஞ்ச பூவைக் கொண்டு போ. எங்களுக்கும் பூவேனும். இனி வராதை'' என்று கொஞ்சம் கருணை கலந்த எச்சரிக்கை விடுத்தாள். இப்படி யாக, அவளுக்குத் தேவையான பூ எப்போதும் கிடைத்தே வந்தது. ஆண்டவன் தன் பக்கம் என்று அவள் பெருமிதம் கொள்வாள்.

ஒருவாறு பூத்தொடுத்து முடிந்தது. கோவிலை நோக்கி நடந்தாள் பஞ்சம். பிந்தினால் ஐயர் திட்டுவாரே என்று காலை எட்டி வைக்க முயன்றாள். உடல் அசதியாக இருந்தது. அவளது துரதிர்ஷ் டம் அவள் கோவிலை அடைந்தபோது ஐயர் பூசையை முடித்திருந்தார். ''சாமி, இந்த மாலையைக் கொஞ்சம் சாத்திடு வீங்களா?'' கெஞ்சினாள் பஞ்சம். ''போ,போ நீ நினைச்ச நேரத்துக்கு வந்தா எனக்கு வேறை வேலை இல்லையே? சீறினார் ஐயர். அவள் மேலும் கெஞ்ச அதிக சீற்றமுற்ற அவர் மாலையைப் பிடுங்கி வீசினார். பஞ்சம் பரிதாபத்துடன் ஐயரை நோக்கினாள். அவளுக்கு அழுகை வெடித்துவிடும் போல இருந்தது. கோவில் வீதியைப் பெருக்குவதனால் அவளுக்குச் சிறிய வருமானம் கிடைத்துவந்தது. அதைப் பாழாக்கவிரும்பாது அழுகையை அடக் கிக் கொண்டாள். அந்த வேளையில் கோவிலுக்குள் கம்பீரமாக நுழைந்த ஒரு பெண்மணி, ''ஐயர், இங்கை வாங்கோ. இந்த மாலையைச் சாத்திவிடுங்கோ'' என்று உரிமையும் கண்டிப்பும் கலந்த குரலில் கூறி மாலையை நீட்டினாள். ஐயர் மறுவார்த்தையின்றி மாலையைப் பெற்றுக்கொண்டார்.

பஞ்சம் வாயில் என்றைக்கும் வார்த் தைகளுக்குப் பஞ்சம் இருந்ததில்லை. ஆயினும் அப்போது வார்த்தை வராது திகைத்து நின்ற அவளுக்கு யாரிடமா வது தனது மனப் பாரத்தை இறக்க வேண்டும் போலிருந்தது. அருகில் பஞ்சம் 'பார்ட் டைம்' வேலை பார்க்கும் வீட்டு ஆசிரியை நிற்பது தெரிந்தது. அவள் பஞ்சத்துக்கு அவ்வப்போது பணஉதவி செய்பவள்; ஆறுதல் சொல்பவள்.

''இந்த ஐயா செஞ்ச வேலையைப் பாத்தீங்களா, அம்மா?'' என ஆசிரியை யிடம் புகார் தொடுத்தாள் பஞ்சம்.

ஆசிரியை சிரித்தாள். ''அது அப்பிடித் தான், பஞ்சம் அந்தப் பொம்பிளை ஆர் தெரியுமே கோயில் பரிபாலன சபை அங்கத்தவர். நீ ஒண்டுக்கும் கவலைப் படாதை. வெள்ளை நிறப் பூவுமில்லை வேறெந்த மலருமில்லை... உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.'' என்று கூறியபடி கர்ப்பக்கிருகத்தை நோக்கிக் கைத்தொழுதாள்.

விசுக் என்று வீட்டுக்குப் புறப்பட்ட பஞ்சம், ''இந்த அம்மா என்ன பெனாத் துறாங்க. பக்கத்தூட்டம்மா இவங்க கிறுக்குப் புடிச்சவங்க என்று சொன்னது சரிதான்.'' என்று தனக்குள்ளே பொருமினாள். ★

## இப்படியும் ஒரு...

(10ஆம் பக்க தொடர்ச்சி)

''உங்களுக்குத் தானே பகிடி விட எத்தனையோ பெட்டையள் இருக்கினம். பிறகேன் என்னட்டை கேட்கிறியள்?''

''என்ன பாமினி...?''

''ஏன் வழி தெருவில அடிக்கிற லூட்டி எனக்குத் தெரியாதோ...?''

''ம்... ஆர் சொன்னது? யசோவா? ம்.... அவள் சரியான கோள் மூட்டி... நான் பகிடி விடவில்லை. அது பிரபா தான்...''

''இனிமேல் நீங்கள் பெட்டையளுக் குப் பின்னால திரியிறதெண்டு காதில விழுந்தால், படிக்க வரமாட்டேன்...''

''ஐயோ... பாமினி.. ப்ளீஸ்.... வராம விட்டுடாத அப்புறம் நான் எப்படி பாஸ் பண்ணுறது? ம்... நான் பாஸ் பண்ணாட்டிலும் நீ பாஸாகி பல்கலைக்கழகம் போயிடுவ.... பிறகு என்ர பக்கம், திரும்பியும் பார்க்க மாட்டே...''

''இப்ப விளங்குது தானே, கவன மாகப் படிச்சு பாஸ் பண்ணுங்கோ...''

''படிச்சாலும் எனக்கு மெடிசின் கிடைக்குமா பாமினி...''

''கட்டாயம் கிடைக்கும். உங்களை பிசிக்ஸ் ஏ எடுக்க வைக்கிறன்... மற்றப் பாடங்கள் நீங்கள் செய்வியள்..... விடாமல் படியுங்கோ. நோ சினிமா.. நோ லவ்... நோ பிரண்ட்ஸ்.... எல்லாம் பரீட்சை எழுதிய பிறகுதான்.''

பாமினி அவனைச் செதுக்கி எடுத்து விட்டாள். ரியூட்ஸ் எல்லாம் நல்ல மார்க்ஸ் எடுத்தான் ரவி. பாமினியும் பூப்படைந்தாள்.

பரீட்சையும் வந்தது. நன்றாகச் செய் திருந்தான். எனினும் 'பிசிக்ஸ்'க்கு பயந்தான்.

இதோ நாட்கள் நகர்ந்து பரீட்சை முடிவும் வந்து விட்டது. பாமினி முடிவுகளை அறியப் பாடசாலைக்குப் போக, ரவி கொமினிக்கேசனுக்குச் சென்றான். பரீட்சை முடிவுகளைப் பார்த் ததும் ரவி ஆனந்த வெள்ளத்தில் மிதந் தான். அவனது பெறுபேறு மருத்துவ பீடத்துக்குக் போதுமானதாக இருந்தது.

இந்த மகிழ்ச்சியான செய்தியை பாமினியிடம் கூற விரைந்து வந்தான். அவனுக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது. பாமினியின் பெறுபேறு மருத்துவ பீடத்துக்கு போதாததாக இருந்தது.

''என்ன பாமினி இது.... நம்ப முடியவில்லையே....'' ரவியின் குரல் தளதளத்தது.

''நீ எடுபட்டுவிட்டாய்.. அது போதும் எனக்கு. நான் அடுத்த முறை கட்டாயம் எடுபட்டு வருவேன்'' அவள் எதுவித கவலையுமில்லாமல் கூறியதைப் பார்க்க அவனுக்கு வியப்பாக இருந்தது. எனினும் அவன் கவலைப்பட்டான்.

ரவி வீட்டை அடைந்தபோது அவனது முகம் வாடியிருப்பதைக் கண்ட அம்மா, அப்பா இருவரும் அவனுக்கு ஆறுதல் சொல்லத் தயாராகி னர். அவன் எதுவுமே சொல்லாமல் கட்டிலில் போய் விழுந்தான்.

''என்ன ரவி, மெடிசின் கிடைக்கேலயா? பரவாயில்லை... பி.எஸ்.சியாவது கிடைக்குமோ?''

அவன் பதிலின்றி மௌனம் காத்தான்.

''ஏன் கவலைப்படுகிறாய்? பாமினிக் கு மெடிசின் கிடைச்சிட்டுதெண்டா...?''

இப்போது அப்பாவும் அவனருகில் வந்துவிட்டார். இனியும் பேசாமல் இருப் பது முறையில்லை என அவனுக்குப் பட்டது. ''அப்பா... பாமினிக்கு மெடிசின் கிடைக்காது... பி.எஸ்.சி. தான் கிடைக்கும்...''

''உனக்கு...?'' அதுவுமில்லையோ என்பது போல் சந்தேகமாக அப்பா பார்த்தார்.

''எனக்கு எல்லாம் 'ஏ' மெடிசின் கிடைக்கும்... மாவட்டத்திலேயே பதினைஞ்சாவது....''

அப்பாவும் அம்மாவும் நம்பமுடியா மல் அவனைப் பார்த்தனர். பாமினி வீட்டில் அவளது அம்மா திட்டிக் கொண்டிருப்பது கேட்டது.

தான் ரவியை விட கூடிய பெறுபேறு எடுக்கக் கூடாது என வேண்மென்றே குறைவாக எழுதிய அவளது காதல் உள்ளத்தை யாரும் அறிந்திருக்கவில்லை.

## போபால் விஷவாயு....

(06ஆம் பக்க தொடர்ச்சி)

நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அவ்வகையில் தற்போது எடுத்துள்ள வெகுஜன அபிப்பிராயம் பத்திரிகை தகவல்கள் என்பன இந்திய நீதிமன்றங்களை திகைக்க வைத்துள்ளன. எதிர்காலத்தில் இந்திய நீதிமன்றங்கள் இவ்வாறான வழக்குகளில் சட்டப் புத்தகங்களில் கூறப்பட்டவாறு அன்றி வெகுஜன அபிப்பிராயத்தை நாடிபிடித்தறிந்து தீர்ப்பளிக்கும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகி இருக்கின்றன. 26 வருடங்களின் பின்னராவது நீதி கிடைக்கும் தோற்றப்பாடு தானும் ஏற்பட்டது ''நீதி தாமதிக்கப்படலாம் ஆனால், மறுக்கப்படமுடியாது'' (DELAYED JUSTICE IS DENIED JUSTICE) என்ற முதுமொழியை நினைவூட்டுவதாகும். மறுதலையாக தாமதமாக கிடைக்கும் நீதி நீதியல்ல என்று பார்த்தால் குற்றவாளிகளின் பலர் இறந்து விட்டநிலையில் பாதிக்கப்பட்ட தரப்புக்கு எப்படி நீதி கிடைக்குமென்ற கேள்வி எழவே செய்கிறது. இருந்தபோதும் இந்தியாவில் நீதி கிடையாது என்ற உலகின் அவப்பெயரை துடைக்க இந்தியா தேசத்திற்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்துள்ளது எனலாம்.

இந்தப்படு பாதகத்தினை செய்ய உடந்தையாக இருந்தவர்களை காலம் தாமதித்தாயினும் தெய்வம் தண்டித்துள்ளதை காணமுடியும். ராஜீவ்காந்தி எதிர்பாராதவிதமாக 47 வயதில் கொல்லப்பட இந்தப்பழி பாவமும் காரணமாயிருக்கலாம். அதைவிட பெரும் தண்டனை பெற்றவர் அர்ஜுன்சிங் ஆவார். மத்தியபிரதேச மாநிலத்தின் அசைக்கமுடியாத முதலமைச்சராக விளங்கிய அவர் அந்தப் பதவியை மீண்டும் ஒருமுறை பெறவே முடியவில்லை. எங்கு சென்றாலும் அவரை ''போபால் பாவி'' என எதிர்க்கட்சிகள் பட்டம் சூட்டின. இதனால் அரசியலில் தலைதூக்கவே முடியாது தவித்த அவர் பலதடவைகள் தனது சொந்தத் தொகுதியில் கூடவெல்ல முடியவில்லை. அதன்பின் 1991இல் மட்டும் ஒருமறை வெற்றிபெற்ற அவர் பிரதமர் பதவிக்கு நரசிம்மராவுடன் போட்டியிட்டார். கடைசியாக அவரை தேர்தலில் நிற்க வேண்டாமென கேட்டுக்கொண்ட சோனியா, ராஜ்யசபா மூலம் எம்பியாக்கி கல்வி அமைச்சராக்கினார். ஆனால், அதுவும் போதாதென்று ஜனாதிபதி பதவிக்கு அர்ஜுன் சிங் அவாக்கொண்டபோதும் சோனியா காந்தி அவரை அறிந்து கொண்டதால் அவருக்கு இடம் கொடுக்கவில்லை. அவரது மகனுக்கும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு மறுக்கப்பட்டது. கோபமடைந்த அர்ஜுன்சிங் சோனியா காந்தியை சில காலம் வசைபாடித் திரிந்ததும் குறிப்பிடத்தக்கது. அர்ஜுன் சிங்கின் கதி இதுவெனில் காங்கிரஸின் கதியும் குறைந்ததல்ல. போபால் நகரில் அதன் பிறகு நடந்த எந்தத் தேர்தலிலும் காங்கிரஸ் கட்சி வெல்லவே முடியவில்லை. எதிர்க்கட்சிகளின் தாக்குதலில் நிலை குலைந்துபோன பிரதமர் மன்மோகன் இந்த விடத்து குறித்து விரிவாக ஆராய அமைச்சர்கள் குழு ஒன்றை நியமித்துள்ளார். இதன் அறிக்கையை 10 நாட்களுக்கு முன் தனக்கு தரும்படி அவர் உத்தரவிட்டுள் ளதாகவும் தெரிகிறது. அன்டர்சனை இந்தியாவில் விசாரிக்க நாடுகடத்தித் தரும்படி உத்தியோகபூர்வ ராஜதந்திர கோரிக்கை அமெரிக்காவிடம் விடப்படலாம் எனவும் கூறப்படுகிறது. பொதுநலன் அக்கறை வழக்கு என்ற விஷேட சட்டத்துறை அம்சம் இலங்கையில் இல்லை எனினும் இந்தியாவில் மிகச்சிறப்பாக இது விருத்தியடைந்துள்ளது. எனவே, போபாலில் பாதிக்கப்பட்ட ஏழைகள் வழக்கு நடத்த பொருளாதார ரீதியில் இயலாதவர்கள் என்றாலும் சூழல் பாதுகாப்பு ஆர்வலர்கள் தொண்டு நிறுவனம் என்பவை அவர்கள் சார்பில் வழக்காட முடியும். அதாவது குறித்த சம்பவத்தால் நேரடியாக பாதிக்கப் படாதவர் கூட அச்சம்பவம் பொது நலனுக்கு குந்தகமாயுள்ளது எனக்கூறி வழக்கிடமுடியும். அந்தவகையில் பல அமைப்புகள் போபாலில் பாதிக்கப்பட்ட வர் சார்பில் குரலெழுப்பத் தொடங்கி யுள்ளன. இவர்கள் ஒருபுறம், எதிர்கட்சிகள் ஒருபுறம், பத்திரிகைகள் ஒருபுறம் என மும்முனைத் தாக்குதலுக்கு மத்திய அரசு பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. கல்வியறிவு அதிகரிப்பு, ஊடகங்களின் நடுநிலை மை, தகவல் தொடர்பு விருத்தி, சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு என்ற இந்த 4 சம்வங்களும் சேர்ந்து பெரும் பணமுதலைகளான தொழிலதிபர்களின் இத்தகைய அட்டூழியங்களை தடுப்பதான போராட்டத்தில் போபால் ஒரு மைல்கல்லே எனலாம். இனிமேல் இப்படி ஒன்று நடக்கமுடியாது என்பதை ஏனைய அன்டர்சன்கள் தெளிவாக உணர்ந்திருப்பார்கள். ★

# முட்டாள் மரம்

புத்தாக்கம்: கே.கான்



# சதுரங்க ஆட்டக்காரன்

8

மேலும் சில நாட்கள் கழிய, வீட்டு வேலைகள் பெருமளவுக்கு முடிந்துகொண்டு வந்தன. கூரை போடும் வேலை மட்டுமே பாக்கியாக இருந்தது. வீட்டவர்களுக்கோ மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. புதிய வீட்டுக்குக் குடிபுகும் நாளை அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்தவர்களாக இருந்தனர்.

ஒரு நாள் அவன் வேலையில் மும்முரமாக இருந்தபோது, அவனுடைய பேத்திகள் இருவர் அவனிடம் வந்து, "மாமா, மாமா, எங்கள் நகருக்கு அடுத்த நகரில் களியாட்ட விழா நடப்பதாக ஆசிரியர் கூறினார். அதைப் போய்ப் பார்க்கும் படி சொன்னார்கள். எங்களைக் கூட்டிப் போங்கள் மாமா" எனக் கூறினார்கள். இதைக் கேட்டதும் அவனுக்கும் அதைப் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருந்தது.

"எத்தனை நாட்களுக்கு அது இருக்கும்?" என்று அவன் கேட்டான்.

"பதினைந்து நாட்கள் வரை அது இருக்குமாம்" என்று பிள்ளைகள் சொன்னார்கள்.

"இன்னும் நான்கைந்து நாட்கள் கழித்து எல்லோரையும் அழைத்துச் செல்கிறேன்; அதற்குள் கூரையடிக்கும் வேலைகளும் முடிந்திருக்கும்" என்று பகீரதன் தெரிவித்தான்.

மறுபடியும் ஒரு தடவை அவன் வைத்தியசாலைக்குச் சென்ற போது, விசாலாட்சியின் ஒரு கண்ணுக்குக் கட்டுப் போடப்பட்டிருந்தது. சில நாட்களுக்குப் பிறகு கட்டு அவிழ்க்கப்படும் என்று டாக்டர் கூறினார். பகீரதனுக்கு ஒரு புறம் மகிழ்ச்சியாகவும் மறுபுறம் அதிர்ச்சியைக் கொடுப்பதாகவும் இருந்தது அந்தச் செய்தி. 'என்னை அவள் நேருக்கு நேராகக் கண்டால்............கடவுளே! அதை நான் எப்படித் தாங்கிக்கொள்ளப் போகிறேன்? அவள் என்னை அடையாளம் கண்டுகொண்டால்......' நினைக்கவே பயமாக இருந்தது அவனுக்கு. விரைவில் இதற்கு ஒரு முடிவு காண வேண்டும் என்று அவன் தீர்மானித்துக் கொண்டான்.


ஒரு நல்ல நாளில் இரு குடும்பங்களும் புதிய வீட்டில் குடிபுகுந்தன. பழைய குடிசை வீடு உடைக்கப்பட்டது.

இரண்டு நாட்கள் கழித்து முழுக்குடும்பமும் களியாட்ட விழா பார்க்கச் சென்றது. வான் ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு அவர்கள் சென்றார்கள். அந்த இடம் அவர்களது வீட்டிலிருந்து சுமார் இருபது மைல் தூரத்தில் இருந்தது. பகீரதன் வைத்த கண் வாங்காமல் வெளிப்புறக் காட்சிகளை ரசித்தபடியே சென்றான். சிறு குழந்தை போன்று அவன் குதூகலமாகக் காணப்பட்டான்.

களியாட்ட விழா மைதானத்தில் காணப்பட்ட மின்விளக்கு அலங்காரங்களைக் கண்டு அவன் மலைத்துப் போனான். மெரிகோரவுண்டில் சிறு குழந்தை போன்று உல்லாசப் பயணம் செய்தான். குடைராட்டினத்தில் பவனி வந்தான். பாதாளக் கிணற்றில் மோட்டார் சைக்கிள் ஓட்டத்தைக் கண்டு களித்தான். சர்க்கஸ் காட்சிகளைக் கண்டு அவன் திகைத்தே போனான். ஒலிபெருக்கிகளின் அலறல்கள், அறிவிப்புகள் எல்லாம் அவனுக்குப் புதுமையாகவே இருந்தன. அவனைப் பொறுத்தவரை இவை எல்லாம் அவன் வாழ்விலே என்றுமே கண்டிராத அதிசயங்கள்.

கடைகளில் இருந்து அவன் எல்லோருக்கும் பொருள்களை வாங்கிக் கொடுத்தான். ஐஸ்கிறீம், பிஸ்கட், கடலை, மென்பானங்கள் என்று அவர்களின் வயிறுகளை நிறைத்தான். முழுக்குடும்பமும் மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்தது.

அவர்கள் களியாட்ட விழா மைதானத்தைச் சுற்றி வந்துகொண்டிருக்கும் போது ஒலிபெருக்கியிலே இவ்வாறான ஓர் அறிவித்தல் விடுக்கப்பட்டது:



-ஸீயெம்மே அமீன்

"பெரியோர்களே, சகோதரர்களே, இதோ இங்கே வருகைதந்திருக்கும் திரு சுதர்ஷன் சதுரங்க விளையாட்டிலே உலக சம்பியன் பட்டத்தைச் சுவீகரித்துக் கொண்டவர். உலகப் புகழ் பெற்றவர். இவரோடு விளையாடி வென்றவர்கள் இதுவரை யாருமில்லை. உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் தரப் போகிறார். விருப்பமானவர்கள் வந்து இவரோடு சதுரங்கம் விளையாடலாம். அவரைத் தோற்கடிப்பவருக்கு ஐந்து லட்சம் ரூபாவை பரிசளிக்கப்படும். அத்தோடு சம்பியன் பட்டத்தையும் சுவீகரித்துக் கொள்ளலாம். விளையாட்டைக் கண்காணிக்க மத்தியஸ்தர்கள் இங்கே இருக்கிறார்கள். தைரியசாலிகளே, மேடைக்கு வாருங்கள். துணிச்சலோடு வந்து விளையாடுங்கள். ஆனால், ஒரு நிபந்தனை. விளையாடித் தோற்பவரின் தலை இங்கேயே மொட்டையடிக்கப்படும். துணிவிருந்தால், தைரியமிருந்தால் முன்வாருங்கள்! சம்பியன் பட்டத்தை வென்றுகொள்ளுங்கள்! இவருடைய சவாலை முறியடிக்க யாரேனும் இருக்கிறார்களா?"

இதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த பகீரதனின் இரத்தம் கொதித்தது.

மீண்டும் மீண்டும் அந்த அறிவித்தல் முழங்கிற்று.

சனக் கூட்டத்துக்குள்ளிருந்து யாருமே முன்வருவதைக் காணோம். பகீரதனுடைய கால்கள் மேடையை நோக்கிப் பாயத் துடித்துக் கொண்டிருந்தன.

சத்திய சீலனைப் பார்த்து, "நான் சென்று ஒரு கை பார்க்கட்டுமா?" என்று பகீரதன் கேட்டான்.

"உங்களுக்கு சதுரங்கம் விளையாடத் தெரியுமா? இவரோ உலக சம்பியன். வேண்டாம். வேண்டாம்" என்று சொன்னான்.

"எனக்கும் கொஞ்சம் விளையாடத் தெரியும்."

"தம்பி, உங்களுடைய தலை மொட்டையடிக்கப்படுவதை எங்களால் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்க முடியாது" என்று இளைய மகன் நவநீதன் சொன்னான்.

"இவரோடு விளையாட இங்கு யாருமே இல்லையா? கடந்த பத்து நாட்களாக இந்தச் சவாலை ஏற்க யாருமே முன்வரவில்லை. இன்று கூட உங்கள் மத்தியிலே திறமைசாலிகள் யாருமே இல்லையா?" என்று ஒலிபெருக்கி மீண்டும் அலறியது.

அவ்வளவு தான். பகீரதன் மேடையை நோக்கிப் பாய்ந்து சென்றான். எவராலுமே அவனைத் தடுக்க முடியவில்லை.

சத்தியசீலனும் நவநீதனும் தலையில் கைவைத்துக் கொண்டார்கள். மேடைக்குச் சென்றவரை இழுத்துவர அவர்களால் முடியுமா?

இதைக் கண்டு பெண்களும், பிள்ளைகளும் பெரிதும் கவலைப்பட்டார்கள்.

அங்கே திரண்டிருந்த மக்கள் கூட்டம் விசிலடித்தும் கைதட்டியும் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தது. அனைவரது பார்வைகளும் மேடையை நோக்கிக் குவிந்திருந்தன.

(தொடரும்)

# முயலுவீர்!

யுத்தம் ஒன்று வந்தது
உலகம் கண்டு பயந்தது!
எத்தனை உயிர்கள் மாண்டன
எண்ணும் போதே நடுங்குது!

அறிவு இயலின் சாதனை
அமைதி மறைந்து வேதனை!
இறந்த உயிர்கள் எத்தனை?
இழப்பு சேதம் எத்தனை?

ஏவு கணைகள் குண்டுகள்
எல்லாம் அங்கே விழுந்தன
ஈவு இரக்கம் இன்றியே
எல்லாம் எரிந்து போயின!


அமைதி சாந்தி ஓங்கவே
அறிவு இயல் உதவுமோ?
போரை ஒழித்து உயிர்களைப்
பாதுகாக்க முடியுமே!

இயற்கைச் சீற்றம் நோய்நொடி
இதனைத் தீர்க்க வழிமுறை,
தயக்கம் இன்றிக் கண்டிட
தயவு செய்து முயலுவீர்!

கி. பப்பி,
மானிப்பாய்.




# நிழலின் அருமை



-திஹாரிய முப்லி

ஒருவன் நடந்துசென்று கொண்டிருக்கும்போது, அவனது நிழலும் அவனைப் பின்தொடர்ந்து செல்லலாயிற்று. சிறிது நேரத்தில் அவனது நிழல் அவனுக்கு முன்னால் தோன்றியது. இன்னும் கொஞ்ச நேரத்தில் பக்கவாட்டில் தோன்றியது. மேலும் சிறிது நேரத்தில் பின்பக்கமாகத் தோன்றியது. திரும்பிப் பார்த்தபோது, நிழல் அவனைத் தொடர்ந்து வந்துகொண்டிருப்பதைக் கண்டான். நிழல் தன் பின்னால் துரத்தி வருகிறது என்று நினைத்து முன்னால் பாய்ந்தான் பின்னால் பாய்ந்தான். பக்க வாட்டில் பாய்ந்தான். நிழலில் இருந்து விடுபட எவ்வளவோ முயன்று பார்த்தான். ஆனால், நிழல் அவனை விட்டால் தானே!

நிழல் மீது கோபம் கொண்ட அந்த மனிதன், 'ஏய், நிழலே, ஏன் என்னைத் துரத்தி வருகிறாய்? உனக்கு வேறு வேலை இல்லையா?' இதனால் உனக்கு என்ன பயன்?" என்று கேட்டான்.

நிழல் சற்றும் கோபம் கொள்ளாமல், 'மனிதா, உனக்கு நான் தொல்லை கொடுத்தேனா? நீ என்னைச் சுமந்து கொண்டா செல்கிறாய்? நீ என்னுடைய இயல்பைப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறாய். எவருக்கும் என்னை ஒழித்துக் கட்ட முடியாது. என்னால் யாருக்கும் எந்தத் தொல்லையும் இல்லை. இறைவனால் படைக்கப்பட்ட அத்தனை படைப்பினங்களுக்கும் நிழல் உண்டு. நீ அணிந்திருக்கின்ற ஆடை, அதன் நிழல் உனக்குக் கிடைக்காவிட்டால் உன்னால் வெளியே செல்ல முடியாது. நீ அணிந்திருக்கின்ற தொப்பியின் நிழல் உனக்குக் கிடைக்காவிட்டால், சூரியனின் வெப்பத்தை உன்னால் தாங்கிக் கொள்ள முடியுமா? நீ வீடு ஒன்றைக் கட்டியிருக்கிறாய் என்று வைத்துக்கொள். அந்த வீட்டுக் கூரையின் நிழல் இல்லையென்றால் அந்த வீட்டில் உன்னால் வாழ முடியுமா என்று யோசித்துப் பார். நீண்ட தூரம் நடந்துசெல்லும் ஒருவன் களைப்பின் காரணமாக மரநிழலில் அமர்ந்து ஓய்வெடுக்கின்றான். அந்த மரத்தின் நிழல் அவனுக்குக் கிடைக்கவில்லை என்றால், அவனுடைய நிலை என்ன? நீ வெயிலில் நின்றுகொண்டிருக்கும் போது, உன்னுடைய நிழலில் எத்தனை உயிரினங்கள் வெயிலின் கொடூரத்திலிருந்து பாதுகாக்கப்படுகின்றன என்பதை நீ அறிவாயா? எல்லாம் அறிந்து தான் இறைவன் இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளான். மனிதனே, அதனைப் புரிந்துகொள்ளாமல் பிழையான திசையில் சென்றுகொண்டிருக்கிறான். இறைவனுடைய ஏற்பாடுகள் அனைத்தும் மனிதனுடைய நன்மைக்கேயன்றி, தீங்குக்கல்ல. மறு உலகில் கூட இறைவனின் நிழலை மனிதன் எதிர்பார்த்தவனாக இருக்கின்றான்" என்று சொன்னது.

உண்மையை உணர்ந்துகொண்ட மனிதன் கப்சிப் என அடங்கிவிட்டான்.

# அச்சுறுத்தும் மெக்சிக்கோ வளைகுடா



அமெரிக்கா, மெக்சிக்கோ, கியூபா ஆகிய நாடுகளால் சூழப்பட்ட கடல் பகுதிதான், அழகான மெக்சிக்கோ வளைகுடா. ஆர்ப்பரிக்கும் கடல் அலைகள், அதிலிருந்து பொங்கும் நுரைகள், உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் இயற்கை அழகு, மீன்வளம் ஆகியவை நிறைந்த பகுதி இது.

இயற்கை அழகு மட்டுமல்ல, இயற்கை வளங்களும் இங்கு கொட்டிக் கிடக்கின்றன. இந்தக் கடல் பகுதியில், மிசிசிபி ஆற்றுப் படுகையின் அருகில் இயற்கை எரிவாயு நிறைந்திருக்கிறது. இதிலிருந்து மசகு எண்ணெய் எடுப்பதற்காக இந்தக் கடல் பகுதியை சர்வதேச எண்ணெய் நிறுவனங்கள் குறி வைத்துள்ளன.

பிரிட்டனைச் சேர்ந்த பிரிட்டிஷ் பெற்றோலிய நிறுவனமும் கச்சா எண்ணெய் எடுக்கும் பணியில் இங்கு ஈடுபட்டுள்ளது. பிரிட்டிஷ் பெற்றோலிய நிறுவனத்துக்காக டிரான்சொசஸன் என்ற நிறுவனம் ஒப்பந்த அடிப்படையில் மசகு எண்ணெய் எடுத்து வருகிறது.

எண்ணெயைத் தோண்டி எடுப்பதற்காக, 8 ஆயிரம் அடி ஆழம் கொண்ட கடல் பகுதியில் இயந்திர மேடை அமைக்கப்பட்டு, பணிகள் நடந்தன. நவீன இயந்திரங்கள் மூலமாக, கடலுக்கடியில் துளையிட்டு, அவற்றில் குழாய்களைச் செலுத்தி, மசகு எண்ணெய் எடுக்கப்பட்டு வருகிறது. இந்த இயந்திரம் மூலம், கடலின் அடி மட்டத்தில் இருந்து பூமிக்குள் 30 ஆயிரம் அடிவரை துளையிட்டு, மசகு எண்ணெய் எடுக்க முடியும்.

கடந்த ஏப்ரல் 20ஆம் திகதி, மெக்சிக்கோ வளைகுடா பகுதியில், மசகு எண்ணெய் எடுக்கும் பணி வழக்கம்போல் நடந்துகொண்டிருந்தது. அப்போதுதான், யாவரும் எதிர்பார்க்காத அந்த விபரீதம் நடந்தது.

எண்ணெய்க் கிணற்றிலிருந்து மசகு எண்ணெயை வெளியில் எடுக்கப் பயன்படுத்தப்படும் மிகப் பெரிய இரும்புக் குழாய் திடீரென பெரிய சத்தத்துடன் வெடித்தது. குழாயின் ஒரு பகுதியில் வெடிப்பு ஏற்பட்டது. கடலுக்குள் 5 ஆயிரம் அடி ஆழத்தில், இந்த வெடிப்பு ஏற்பட்டது.

இந்த வெடிப்பு மூலமாக பெருமளவு மசகு எண்ணெய் பீய்ச்சி அடித்துக்கொண்டு, வேகமாக வெளியேறி கடலில் கலந்தது. எண்ணெய்க் கசிவு காரணமாக, கடலின் மேல் பரப்பில் சில இடங்கள் தீப்பற்றி எரிந்தன. 11 பேர் பலியாயினர். இதன் காரணமாக, அங்கு அமைக்கப்பட்டிருந்த இயந்திர மேடையும், வெடித்துச் சிதறி கடலுக்குள் மூழ்கியது. எண்ணெய் எடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் செய்வதறியாது திகைத்தனர். என்ன நடந்தது என யூகிப்பதற்கு முன்பே, மசகு எண்ணெய் பெருமளவில் வெளியேறியது. முன்னெச்சரிக்கையாக நிறுத்தப்பட்டிருந்த உயிர் காக்கும் படகுகள் மூலம் சிலர் உயிர் தப்பினர். மற்றவர்கள் ஹெலிக்கொப்டர்கள் மூலமாக மீட்கப்பட்டனர். ஆனால், பணியில் ஈடுபட்டிருந்தவர்களின் எண்ணிக்கையை சரி பார்த்த போது, 11 பேரைக் காணவில்லை எனத் தெரியவந்தது. மூன்று நாட்கள் தொடர்ந்து நடந்த தேடுதல் வேட்டைக்கு பின்னர் 11 பேரின் சடலங்களும் மீட்கப்பட்டன.

இத்தனை பெரிய விபரீதம் நடந்தும், பிரிட்டிஷ் பெற்றோலியம் இதுகுறித்து மூச்சு விடவில்லை. இதன்பின், இயற்கை ஆர்வலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்புகளைச் சேர்ந்தோர் ஆகியோர் மெக்சிக்கோ வளைகுடாவில் நடக்கும் பேரவலத்தைக் கடுமையாக விமர்சித்தனர்.

விபரீதத்தை உணர்ந்து பிரிட்டிஷ் பெற்றோலியம் நிறுவனம், அமெரிக்காவை உதவிக்கு அழைத்தது. அமெரிக்காவும் தனது கடற்கரைப் பகுதிக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதை உணர்ந்து ஆடிப் போனது. இருந்தாலும் பிரிட்டன் நட்பு நாடு என்பதால், அமெரிக்கா இந்த விடயத்தில் சற்று அடக்கி வாசித்தது. பிரிட்டிஷ் பெற்றோலிய நிறுவனத்தின் பொறியியலாளர்கள் எண்ணெய்க் கசிவைத் தடுக்கும் பணியில் ஈடுபட்டனர்.

குழாயில் வெடிப்பு ஏற்பட்ட பகுதியைச் சரி செய்வதற்காக, ரிமோட் மூலம் இயக்கப்படும் சிறிய அளவிலான நீர்மூழ்கி வாகனங்களில் கடலுக்கடியில் சென்றனர். கடந்த மே 2ஆம் திகதி மட்டும், ஆறு தடவைகள் கடலுக்குள் சென்று, எண்ணெய்க் கசிவைத் தடுத்து நிறுத்த முயற்சி செய்தனர். அவர்களின் முயற்சி பலன் அளிக்கவில்லை.

குழாயில் மூன்றுக்கும் மேற்பட்ட இடங்களிலிருந்து எண்ணெய் கசிந்ததால், அவர்களின் முயற்சி தோல்வி அடைந்தது. பிரிட்டிஷ் பெற்றோலிய நிறுவனம், மூன்று இடங்களில் எண்ணெய்க் கசிவு ஏற்பட்டுள்ளமையை அதிகாரபூர்வமாக ஒப்புக்கொண்டது.

தற்காலிக முயற்சியாக, குழாயில் வெடிப்பு ஏற்பட்ட பகுதியில் பெரிய தடுப்பு அமைக்கப்பட்டது. ஆனால், இந்த முயற்சியும் வெற்றிபெறவில்லை. எண்ணெய்க் கசிவின் வேகத்துக்கு, அந்தத் தடுப்பு ஈடுகொடுக்கவில்லை. இதன்பின், வெடிப்பு ஏற்பட்ட குழாய்க்குள், வேறு ஒரு சிறிய குழாயைச் செலுத்தி மேற்கொள்ளப்பட்ட எண்ணெய்க் கசிவைத் தடுக்கும் முயற்சி தோல்வி அடைந்தது.

கடந்த இரண்டு மாதங்களாகத் தொடர்ந்து மசகு எண்ணெய் வெளியேறிக்கொண்டுதான் இருக்கிறது. இதைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட எந்த முயற்சியும் இதுவரை வெற்றிபெறவில்லை. வெளியேறும் எண்ணெய் அளவு குறித்து, பிரிட்டிஷ் பெற்றோலிய நிறுவனம் முதலில் உண்மையான தகவல்களைக் கூறவில்லை.

"நாள் ஒன்றுக்கு 5 ஆயிரம் பீப்பாய்கள் எண்ணெய்தான் வெளியேறி கடலில் கலக்கிறது" என அந்நிறுவனம் தெரிவித்தது. சுற்றுச்சூழல் ஆர்வலர்களும், விஞ்ஞானிகளும் இதைக் கடுமையாக மறுத்தனர். அமெரிக்காவைச் சேர்ந்த புவியியல் நிபுணரும், எண்ணெய் துரப்பன துறை ஆலோசகருமான ஜோன் ஆமோஸ் குறிப்பிடுகையில், "எனது மதிப்பீட்டின்படி, மெக்சிக்கோ வளைகுடாவில் தினமும் 20 ஆயிரம் பீப்பாய்கள் மசகு எண்ணெய் கலக்கிறது" என்றார்.

கடலியல் ஆராய்ச்சித்துறை நிபுணர் இயன் மெக்டொனால்ட் குறிப்பிடுகையில், "நாள் ஒன்றுக்கு 25 ஆயிரம் பீப்பாய்கள் எண்ணெய் கடலில் கலக்கிறது" என்றார். ஆனால், தினமும் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட பீப்பாய்கள் வரையிலான மசகு எண்ணெய் கடலில் கலக்கிறது எனத் தெரியவந்துள்ளது.


இதுகுறித்து கருத்துத் தெரிவித்த பிரிட்டிஷ் பெற்றோலிய நிறுவனம், "வெடிப்பிலிருந்து எவ்வளவு மசகு எண்ணெய் வெளியேறுகிறது என்பதை அளவிடுவது மிகவும் கடினம். வெளியேறும் எண்ணெய் அளவை கணக்கிடுவதற்காக, கடலுக்கடியில் கருவிகள் எதுவும் பொருத்தப்படவில்லை" என்றது.

வெளியேறும் எண்ணெய் அளவைக் கணக்கிடுவதற்கு, நடுநிலையான விஞ்ஞானிகளை அந்தப் பகுதிக்கு அனுப்புவதற்கும் பிரிட்டிஷ் நிறுவனம் அனுமதிக்கவில்லை. இதனால், எண்ணெய்க் கசிவைத் தடுத்து நிறுத்தும் பணிக்கு இடையூறு ஏற்படும் எனக் காரணம் கூறி வருகிறது.

இதற்கிடையே, கடலில் ஏற்கனவே கலந்துவிட்ட மசகு எண்ணெயை சுத்திகரிக்கும் பணியில் பிரிட்டிஷ் பெற்றோலிய நிறுவனத்தின் கப்பல்கள் ஈடுபட்டுள்ளன. இருந்தாலும், வெளியேறிய எண்ணெயில், இதுவரை 40 சதவீதம்தான் சேகரிக்கப்பட்டுள்ளது என்றும், இன்னும் 60 சதவீத எண்ணெய் கடலின் மேல் பரப்பில் தேங்கியுள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மெக்சிக்கோ வளைகுடாவில், இதுவரை 2 ஆயிரத்து 500இலிருந்து, 9 ஆயிரத்து 100 ச.கி.மீ.வரை மசகு எண்ணெய் திட்டு பரவியுள்ளமை தெரியவந்துள்ளது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை, கடல் பகுதி கறுப்பாகக் காட்சி அளிக்கிறது. கடலின் மேல் பரப்பு முழுவதும் களிமண் குழம்புபோல் மாறிவிட்டது. கடல்நீருக்கான அறிகுறியே அங்கு தென்படவில்லை.

தற்போது எண்ணெய்க் கசிவு ஏற்பட்ட பகுதிக்கு மிக அருகில்தான், டெல்டா தேசிய வனவிலங்கு சரணாலயம், பிரெட்டன் தேசிய வனவிலங்கு சரணாலயம் ஆகியவை உள்ளன. இங்கு ஆயிரக்கணக்கான விலங்குகளும், பறவைகளும் உள்ளன. வெகுவிரைவில் இந்தப் பகுதிக்கும் மசகு எண்ணெய்த் திட்டு பரவிவிடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.



அப்படி பரவிவிட்டால், இங்குள்ள விலங்குகள் அனைத்தும் பலியாகிவிடும் விபரீதமும் ஏற்படும். அமெரிக்காவின் லூசியானா மாகாண கடற்பகுதி முழுவதும் எண்ணெய்ப் பிரதேசமாக மாறிவிட்டது. மெக்சிக்கோவின் மெரிடா, டாம்பிகோ, மடாமொராஸ், அமெரிக்காவின் பீட்டர்ஸ்பர்க் உள்ளிட்ட கடற்கரைப் பகுதிகளுக்கும் வேகமாக எண்ணெய் பரவி வருகிறது.

இதன் காரணமாக, இந்தக் கடல் பகுதியில் வசிக்கும் மீன்கள், கடல் ஆமைகள், திமிங்கிலங்கள், கடல் பறவைகள் ஆகியவை தினமும் ஆயிரக் கணக்கில் செத்து, கரை ஒதுங்கிக்கொண்டே இருக்கின்றன. இந்தப் பகுதியில் வசிக்கும் மீனவர்களின் வாழ்வாதாரமும் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.

இரண்டு மாதங்களாக மீனவர்களால் மீன்பிடிக்க முடியவில்லை. ஒருவேளை எண்ணெய்க் கசிவு நிறுத்தப்பட்டாலும், ஏற்கனவே கடலில் கலந்துள்ள மசகு எண்ணெயை முழுமையாக நீக்குவது என்பது, நீண்டகால முயற்சியாகவே இருக்கும். இதனால், மீனவர்கள் மீண்டும் கடலுக்கு செல்வது என்பது, தற்போது நடக்கக்கூடிய விடயம் அல்ல என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் எச்சரித்துள்ளனர்.

தற்போது கடலில் பரவியுள்ள மசகு எண்ணெய், விரைவில் அகற்றப்படாவிட்டால், சுற்றுச்சூழலுக்கு பெரும் கேடு ஏற்படும் என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழலை பெரிய அளவில் பாதிக்கும் இந்த எண்ணெய்க் கசிவு விவகாரம், சர்வதேச நாடுகளுக்குக் கடும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

(26ஆம் பக்கம் பார்க்க)

# பண்பட்ட உயரிய நடிப்பால் உயர்ந்த உன்னத நடிகர் எஸ்.வி. ரங்காராவ்!




தென்னக தமிழ்த் திரையுலகில் கொடிகட்டிப் பறந்த நட்சத்திர அந்தஸ்துள்ள கதாநாயக நடிகர்களுக்கு இணையாக சில குணச்சித்திர நடிகர்களும் இருந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் தான் மறைந்த எஸ்.வி. ரங்காராவ். 03.07.1918 இல் பிறந்த ரங்காராவ் 1974 ஆம் ஆண்டு ஜீலை 18 இல் மறைந்தார். அவர் ஆந்திராவில் பிறந்திருந்தாலும் கூட ஆறு வயதிலேயே தனது சகோதர, சகோதரிகளுடன் சென்னைக்கு வந்து விட்டார். இவர் பிறப்பால் தெலுங்கராக இருந்தாலும், வளர்ப்பில் தமிழர். பி.எஸ்,ஸி. பட்டதாரியான இவர், படிக்கும் காலத்திலேயே நாடகங்களில் நடித்திருக்கிறார். சில நாடகங்களுக்கு கதைவசனம் எழுதி நடித்துமிருக்கிறார்.

இவர் தனது 27 ஆவது வயதில் அதாவது 1945 இல் இவர் மாமனார் ராமானந்தம் தயாரித்த 'வழுதினி' என்ற புராணப்படத்தில் முதன் முதலாகத் தோன்றி நடித்தார். ஆனால் அந்தப் படம் பெரும் தோல்வியடையவே மனமுடைந்து போன இவர், சிலகாலம் சினிமாவையே விட்டு ஒதுங்கி ஒரு நிறுவனத்தில் வேலைக்குப் போனார்.

1947 இல் அவரின் முப்பதாவது வயதில் மறுபடியும் நான்கைந்து நண்பர்களுடன் ஒரு ஹோட்டலில் தங்கியவாறு மறுபடியும் வாய்ப்புத் தேடியழைத்தார்.

அப்போது 'சௌகார்' என்றொரு படம் உருவாகி வந்தது. அதில் ரவுடி வேடத்துக்கு ரங்காராவ் தேர்ந்தெடுக்கப்பட்டார். ரவுடி வேடத்தை ரங்கராவ் மிகவும் சிறப்பாகச் செய்திருந்தார். சௌகார் படத்தின் வெற்றியானது ரங்காராவை முழு நேர நடிகராக்கியது. இவர் நடித்த பல திரைப்படங்கள் இவரின் நடிப்புக்காகவே வெற்றி நடைபோட்டது. 'நானும் ஒரு பெண்', 'கற்பகம்', 'படிக்காத மேதை', 'எங்க வீட்டுப் பிள்ளை', 'பாதாள பைரவி', 'பக்த பிரகலாதன்', 'நம்நாடு', 'ராஜா' என்று இவர் நடித்த அனைத்துப் படங்களுமே மிக பெரியளவில் வெற்றி பெற்றன. இவர் நடிகர் திலகம் சிவாஜி கணேஷனுடன் இணைந்து நடித்த பல திரைப் படங்கள் இன்றும் பேசப்படுகின்றன.


இவர் எம்.ஜி.ஆருடன் 'நீதிக்குப் பின் பாசம்', 'பெரிய இடத்துப் பெண்', 'எங்க வீட்டுப் பிள்ளை', 'நம் நாடு' படத்தில் இவர் பிரதான வில்லனாக மிகச் சிறப்பாக நடித்திருந்தார். சிவாஜி கணேஷனுடன் 'அன்னை இல்லம்', 'படிக்காத மேதை', 'ராஜா' உட்பட பல படங்களில் தோன்றி நடித்துள்ள ரங்காராவ், 'ராஜா' படத்தில் வில்லனாகத் தோன்றி அசத்தினர்.



அதேபோல ஜெமினியுடன் 'மாயா பஜார்', 'வாழ்க்கைப் படகு', 'கற்பகம்', 'ஹலோ மிஸ்டர் ஜெமீந்தார்' உட்பட ஏராளமான படங்களில் நடித்திருக்கிறார். என்.டி. ராமாராவுடன் இணைந்து இவர் நடித்த 'பாதாள பைரவி' அன்று மிகவும் பிரபலமாக பேசப்பட்டதுடன், அந்தப் படம் ஹிந்தியில் தயாரான போது அதிலும் ரங்காராவ் அதே பாத்திரத்தில் தோன்றி நடித்து பிரமிக்க வைத்தார்.

வெற்றி பெற்றது.

சிவாஜி கணேசன், பத்மினி, சரோஜாதேவி இணைந்து நடித்த 'பாலும் தேனும்' படத்தில் சரோஜா தேவிக்குத் தந்தையாக மிகவும் இயல்பாக, சிறப்பாக நடித்திருந்தார். எஸ்.வி.ரங்காராவ் நாற்பது வயதாகும் போது அறுபது வயது வேடத்தில் நடித்தார். அவரின் நடிப்புக்கேற்றாற் போல அவரின் குரலும் அவருக்கு



இவர் தமிழில் கடைசியாக நடித்த படம் 'அன்பு சகோதரர்கள்' இப்படத்தில் ஜெய்சங்கர், மேஜர் சுந்தரராஜன், ஏ.வி.எம். ராஜனுடன் இணைந்து நடித்திருந்தார். இவர் ஆந்திராவை, சேர்ந்தவராக இருந்த போதும் கூட தமிழை மிக நன்றாக அழுத்தம் திருத்தமாகப் பேசி நடித்தார். மேலும் அன்றைய குணச்சித்திர நடிகர்களான எஸ்.வி.சுப்பையா, பாலையா, நாகையா போன்ற நடிகர்களுக்கு இணையாகவும் அதற்கப்பாலும் நடிப்பில் வெளுத்துக் கட்டினார்.

ஏ.வி.எம். தயாரிப்பில் எஸ்.எஸ். ராஜேந்திரன் விஜயகுமாரி, ஏ.வி.எம். ராஜன், புஷ்பலதா நடிக்க 'நானும் ஒரு பெண்' என்ற படத்தை ஆரம்பிக்கவிருந்த நிலையில் எஸ்.எஸ்.ஆர்., ஏ.வி.எம். ராஜனுக்கு தந்தையாக விஜயகுமாரிக்கு மாமனாக முதலில் நடிக்கப் பேசப்பட்டவர் பாலையாவாகும். ஆனால் பின்னர் எஸ்.வி. ரங்காராவ் ஒப்பந்தம் செய்யப்பட்டார். 'நானும் ஒரு பெண்' ரங்காராவின் ஒப்பற்ற பண்பட்ட நடிப்பினால் பெரும்

அருமையாக ஒத்துழைத்தது.பாதாள பைரவி இவரின் புகழுக்கு ஒரு மைல் கல்லாக இருந்தது. மிகச் சிறந்த நடிகரான இவர் 56 வயதில் மாரடைப்பால் மரணமானார். இன்று மிமிக்ரி என்ற பல குரல்களில் பேசுபவர்கள் பழைய நடிகர்கள் முதல் இன்றைய புதிய நடிகர்கள் வரை அனைவரின் குரல்களிலும் பேசுவார்கள். ஆனால் 'ரங்காராவ்' குரலில் பேசுவது சற்றுக் கடினமாகும். அந்தளவுக்கு தன்னுடைய பாத்திரப் படைப்புக்கு உயிரூட்டும் வண்ணம், ஏற்ற இறக்கத்துடன் பேசுவர். இவர் சண்டிராணி, பாதாளபைரவி ஆகிய படங்களை ஹிந்தியில் மொழி மாற்றம் செய்த போதும் தன் சொந்தக் குரலிலேயே ஹிந்தி பேசியமை குறிப்பிடத்தக்கது. பண்பட்ட நடிகரான ஆந்திராவைச் சேர்ந்த எஸ்.வி.ரங்காராவ் தமிழ் ரசிகர்களின் உள்ளத்தில் இன்னமும் வாழ்வதற்குக் காரணம் அவரின் பண்பட்ட நடிப்பு மட்டுமல்ல ரசிகர்களை மதித்து நடந்த நல்ல பண்புமாகும். ✱

பாலா.சங்குபிள்ளை

# தமிழ் அன்னைகள்

''நந்தகி இந்த போட்டோவைப் பாருடீ'' தோழி ஒருத்தி நந்தகியின் பக்கம் புகைப்படத்தை நீட்டினாள். ''நந்து உன்னோட அழகுக்கு இவன் எங்க? இந்த போட்டோவப் பாரு சூப்பரா இருக்கிறான்'' இவ்வாறு பல அபிப்பிராயக் குரல்களும், கலாய்ப்புகளும் இந்தக் குரல்களுக்கு சொந்தக்காரர்கள் நந்தகியின் தோழிகளும், உறவுகளும்தான். ஆம் நந்தகியின் வீடு இப்போதெல்லாம் கலகல என்று புன்னகையை சூடிக் கொண்டிருக்கிறது காரணம் -- வெளிநாட்டில் பிறந்து வளர்ந்த நந்தகி, இப்போது இலங்கையில் வசிப்பதற்காக வந்திருக்கிறாள்.

தமிழ்ப் பற்று நிறைந்த நந்தகி, இங்குதான் தன் வாழ்க்கைத் துணையை தெரிவுசெய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்திருக்கிறாள். எல்லாவற்றுக்கும் மேலாக நந்தகி ஒரு மருத்துவர். பல நிழற்படங்கள் அவளைச் சுற்றிக் குவிந்திருந்தன. நந்தகியின் தோழிகள் ஆர்வமாய் தம் தெரிவுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். ஏனோ நந்தகியின் மனம் அவற்றில் லயிக்கவில்லை. நேற்றைய சம்பவம் அவள் மனத்திரையை ஆக்கிரமித்திருந்தது. அந்தத் தளிர்களின் ''ஙே...ஙே..'' என்ற அழுகைக்குரல் மட்டும் அவள் இதயம் முழுக்க நிறைந்திருந்தது. நந்தகியின் விழிகள் மணிக்கூட்டையும் வாசலையும் மாறி மாறி மேய்ந்தன.

வாசலில் ஓட்டோ சத்தம் கேட்டது. மலர்ந்த முகத்துடன் நந்தகி வாசலை நோக்கி விரைந்தாள். முழங்கால் துண்டிக்கப்பட்ட நிலையில்



மாற்றுக்கால் பொருத்தப்பட்ட ஓர் இளைஞன் அவன் கைகளில் இரட்டைக் குழந்தைகள் இருவர் அணைக்கப்பட்டிருந்தனர். விரைந்து சென்று குழந்தைகளை வாங்கிக்கொண்ட நந்தகி ''வாங்க.. லவன்'' என்றவாறே அழைத்துச் சென்றாள். நந்தகியின் உறவுகள் யார் என்பது போல விழிகளில் வினாக்களுடன் நந்தகியை ஊடுருவினார்கள். அவர்களின் ஆவலை நீடிக்க விரும்பாதவளாய் ''இவர் லவன். வன்னியில நடந்த கோர யுத்தத்தில் தன்னோட இளம் மனைவியை இழந்தவர். இந்த யுத்தம் என்ற அரக்கனால் நம்ம உறவுகள் அனுபவிச்ச வலிகளும், அவலங்களும் இதயம் உள்ள எந்த மனிதனையும் உருக வைக்கும். ஒரு தமிழ்ப் பெண்ணா இருக்கிற எண்ணால இந்த தமிழுக்காக எதுவுமே செய்ய முடியவில்லையே என்ற குற்ற உணர்வு. நித்தம் உயிர்கள் செத்துக்கொண்டிருந்த போது எனக்குள்ள ஏற்பட்டுது. இந்தக் குற்றவுணர்வு எனக்கு மட்டுமல்ல ஒவ்வொரு புலம்பெயர் தமிழனுக்கும் இருந்திருக்கும். இந்த மண்ணுக்குத்தான் எங்களால எதுவுமே செய்ய முடியல. இந்த மண்ணில வாழற மக்களுக்காக நிறையவே செய்யலாம். இந்தக் குழந்தைகளைப் போல எத்தனையோ தளிர்கள் தாய், தந்தை இல்லாம அனாதையா வாழ்றாங்க.

தமிழை நேசிக்கிற ஒவ்வோர் இளைஞனும், யுவதியும் தனக்காக அழகான மனைவியையோ அறிவான கணவனையோ தேர்ந்தெடுக்கிறத விடுத்து, ஆதரவற்ற தமிழ் உறவுகளுக்கு வாழ்க்கையைக் கொடுங்க. அனாதரவாக இருக்கிற குழந்தைகளுக்கு தாய்மையையும், பாதுகாப்பையும் கொடுங்க. இதைத்தான் தமிழுக்காக எங்களால செய்யமுடியும். என் உறவுகளே இவ்வளவு நேரமும் எனக்காக ஒரு வாழ்க்கைத் துணையை செலக்ற் பண்ண நிறையவே கஷ்டப்பட்டு இருப்பீங்கள். நானே எனக்கான துணைவரை தெரிவு செய்திருக்கிறன்'' என்று கூறிவிட்டு லவனை நோக்கினாள். அப்போது அவசரமாய் புறப்பட எத்தனித்த தோழிகளிடம் ''ஏய்... எங்க போறீங்க?'' பரபரப்பாய் கேட்ட நந்தகியிடம் ''எங்கள் தமிழ் உறவுகளுக்கு வாழ்க்கை கொடுக்கப் போறம்'' இது தோழிகளின் ஒருமித்த குரல்.

ஆம், நந்தகியின் பற்று தோழிகளிலும் தொற்றிக்கொண்டது. இனி இவர்கள் தமிழ்க் குழந்தைகளுக்கு மட்டுமல்ல, தமிழுக்கும் அன்னையாகி விட்டார்கள். ✱

மருதோடை நிலா



# குதியுயர்ந்த பாதணிகள் பாலுணர்வைத் தூண்டும்?

மூன்றே வயதான இளம் சிறுமிகளுக்குக் கூட லண்டனில் உள்ள சில்லறை வியாபாரிகள் குதி உயர்ந்த பாதணிகளை விற்கின்றனர். ஆனால்,குதி யுயர்ந்த பாதணிகள் பாலியல் உணர்வை பிஞ்சிலேயே விதைக்கும் என்ற அச்சம் பெற்றோர் மத்தியில் தற்போது நிலவுகின்றது.

டொம் குருயிஸ் - கேட்டி ஹோம்ஸ் நடிகர் தம்பதிகளின் மகள் சூரி குருயிஸ். இத்தகைய குதியுயர்ந்த பாதணிகளை அணிந்ததன் மூலம் இவர் இந்த மோகத்தைப் பற்ற வைத்துள்ளார் என்கிறது லண்டன் டெலி கிராப் பத்திரிகை. அநேகமான சந்தர்ப்பங்களில் இச் சிறுமி குதியுயர்ந்த பாதணிகளுடன் புகைப்படம் எடுக்கப் படுகின்றார்.

இங்கிலாந்தில் Asda, Gap Kids, Next ஆகியு மூன்று நிறுவனங்களும் சிறுமிகளுக்கான குதியுயர்ந்த பாதணிகளைத் தயாரிப்பதில் முன்னணி வகிக்கின்றன. மம்ஸ் நெட் (Mums net) எனப்படும் பெற்றோருக்கான அமைப்பைச் சேர்ந்த ஜஸ்டின் ரொபர்ட்ஸ் பின்வருமாறு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். ''விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சில பாதணிகளைப் பார்த்தபோது எனக்கு அவை சிறுமிகளை விட நடனமாடும் பெண்களுக்கே பொருத்தமானவை எனத் தோன்றியது'' என்றார் அவர்.

''சர்ச்சையிலிருக்கும் இந்த விவகாரம் சிறுமிகள் பாலியல் உணர்வை பிஞ்சிலேயே அடைவதற்கு வழி வகுக்கின்றது. இத்தகைய பாதணிகளை விற்பவர்களிடம் நாம் பின்வருமாறு கூறினோம். 'நீங்கள் விற்பனைக்கு வைத்திருக்கும் பாதணிகளை நீங்களே உற்றுப் பாருங்கள். எவ்விதத்திலாவது அவை சிறுமிகளுக்கு பொருத்தமானவை என உங்கள் மனசாட்சி சொல்கிறதா?'' என்றும் ஜஸ்டின் ரொபாட்ஸ் கேள்வி எழுப்பினார்.

'மம்ஸ் நெட்' அமைப்பு, ''சிறுமிகள் சிறுமிகளாகவே இருக்கட்டும்'' (Let Girls Be Girls) என்கிறது.சிறுமிகளைப் பிஞ்சிலேயே பாலியலில் பழக்க வைக்கும் இந்த மோகத்துக்கு துணை போக வேண்டாமெனவும், இத்தகைய எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் பொருட்களை விற்க வேண்டாமெனவும் இந்த அமைப்புக் கோருகிறது.

நெட் மம்ஸ் (Net Mums) எனும் மற்றுமோர் பெற்றோர் அமைப்பைச் சேர்ந்த நிகாலோ லாமோண்ட் கருத்து தெரிவிக்கையில், ''எனது மகளுடன் நான் பொருட்கள் வாங்க கடைக்கு போனபோது மூன்றே வயதான என் மகளைப் போன்ற சிறுமிகளுக்கான பாதணிகள் எவ்வளவு குதியர்வுடன் வந்துள்ளன என்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தேன். சாதாரண பாதணிகளை விட குதியுயர்ந்த பாதணியையும் நடப்பதற்கு சிரமம் தருவதுடன் சிறுமிகள் ஆபத்துகளுக்கு முகம் கொடுக்கும் நிலைமையையும் அதிகரிக்கின்றது'' என்கிறார்.

பாதங்கள் பற்றிய நிபுணரான கிரேகோர மெக் கோஷிம் தெரிவிக்கையில், சிறுமிகள் குதியுயர்ந்த பாதணிகளை அணியக் கூடாதென எச்சரிக்கின்றார். இரண்டு அங்குலத்துக்கு மேற்பட்ட குதியுயர்ந்த எந்தப் பாதணியும் கணுக்காலை திருப்பி விடலாம். அவற்றை அணிவதன் மூலம் முதுகில் தசை இழுபாடு ஏற்பட்டு சிறுமிகளின் வளர்ச்சியை பெருமளவு பாதிக்கும் காரணிகளாக அமைந்து விடலாம்'' என்றும் எச்சரித்துள்ளார்.

தற்போது லண்டனில் 'டிஸ்னி இளவரசி சிறுவர் பாதணிகள்' என்ற பெயரில் மூன்று சென்ரி மீற்றர் குதிக்கால் உயர்வுடன் பாதணிகளை விற்கும் அஸ்டா (Asda) நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர், ''தமது பாதணிகள் பற்றிய எவ்வித முறைப்பாட்டையும் சில்லறை வர்த்தகர்கள் பெற்றிருக்கவில்லை'' என்கிறார்.


சூரி குருயிஸ் (Suri Cruise) அணிந்து கொண்டு பிரபலப்படுத்தும் குதிக்கால் உயர்ந்த பாதணிகள் பெற்றோர் மத்தியில் சூடான விவாதத்தை கிளப்பி விட்டுள்ளன. எனினும், இப் பாதணிகள் தன் மகளை எவ்விதத்திலும் பாதிக்கவில்லையென அச் சிறுமியின் தாய் நிர்தாட்சணியமாக கூறுகிறார். ''அவை நடனத்தில் நாட்டமுள்ள சிறுமிகளுக்கான பாதணிகள் அவற்றை நான் என் மகளுக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறேன். அவளும் அவற்றை அணிய விரும்புகிறாள். அதில் எந்தத் தப்பும் எனக்கு புரியவில்லை'' என அவர் விளக்கமளித்தார்.

சிறுமிகள் மத்தியில் பிஞ்சிலேயே பாலியல் இச்சையை தூண்டுவதாக எழுந்த விமர்சனத்தையடுத்து ஏழு வயதுக்கு உட்பட்ட சிறுமிகளுக்காக வடிவமைக்கப்பட்ட சிறு திண்டுக்கள் கொண்ட மார்புக் கச்சையுடனான நீச்சல் உடைகளை பிரைமோர்க் (Primork) நிறுவனம் ஏப்ரல் மாதத்தில் வாபஸ் பெற்றது.

அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த டேவிட் கெமரூன் இத்தகைய ஆடைகள் முற்றிலும் அவமானம் ஏற்படுத்தக்கூடியவை என்று விமர்சனம் செய்துள்ளார். அத்துடன் எமது சிறுமிகள் பிஞ்சிலேயே பாலியல் ரீதியாக பாழ்பட்டுப் போவதற்கான வர்த்தக நடவடிக்கை எனவும் சாடியிருந்தார்.

தமிழில் - சுப்பர்



“நான் படகு ஒன்றின் மூலம் அவுஸ்திரேலியா செல்ல முயற்சித்தேன். வீணாகக் கஷ்டப்பட்டு எனது பணம் முழுவதையும் இழந்தேன்.”

சத்தூர், வயது 28
வெளிநாட்டில் தடுத்து வைக்கப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டவர்.

ஒழுங்கற்ற முறையில் அவுஸ்திரேலியா செல்வதற்காக சத்தூர் தனது வாழ்நாள் சேமிப்புக்கள் அனைத்தையும் செலவிட்டதுடன் கடனும் வாங்கினார். துரதிஷ்டவசமாக ஆட்கடத்தல்காரர்கள் வழங்கிய உறுதிமொழி நிறைவேறவில்லை. மற்றொரு நாட்டில் தடுத்து நிறுத்தப்பட்ட சத்தூர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார். தற்போழுது, சத்தூர் எல்லாவற்றையும் இழந்துள்ளார். தன்னையும், தனது குடும்பத்தையும் பராமரிக்க முடியாதுள்ளது. முறையற்ற விதத்தில் அவுஸ்திரேலியா செல்ல முயற்சிக்கும் இலங்கையர்கள் எதிர்கொள்ளும் அவலங்களை விளக்கும் கதைகளில் ஒன்றாக இது அமைந்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் எண்ணிலடங்கா இலங்கையர்கள் ஆட்கடத்தல்காரர்களுக்கு பலிக்கடாக்களாகின்றனர். படகு மூலம் முறையற்ற விதத்தில் பயணம் செய்பவர்கள் பட்டினியையும் துன்பங்களையும் எதிர்கொண்டு, தமது குடும்பம் உட்பட அனைத்தையும் இழக்கும் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர். நீங்கள் எதனை இழக்கப் போகின்றீர்கள்?


**இலங்கையர்களின் புகலிடக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படுவதை அவுஸ்திரேலியா இடைநிறுத்தியுள்ளது.**

உங்கள் பணத்தை பயனற்ற பயணத்திற்கு வீணாக்க வேண்டாம்.

அவுஸ்திரேலிய அரசாங்கம் உங்களுக்கு வழங்கும் சேமநலச் செய்தி.

ஒருவர் உண்மைச் சம்பவங்கள் மற்றும் மக்கள் கூறிய கதைகள், அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தச் சமூக அறிவித்தல் தயாரிக்கப்பட்டுள்ளது.






எம். பாலகிருஷ்ணன்,
வெள்ளவத்தை.

**கேள்வி:-** போரில் சின்னாபின்னமான வன்னி மாவட்டமும் அதன் மக்களும் ஒரு நல்ல நிலைமைக்கு வர இன்னும் பத்து ஆண்டுகள் ஆகுமா?

**பதில்:-** அரசாங்கத்தின் வாக்குறுதிகள் அடிக்கடி காற்றில் பறப்பதால், நீங்கள் கேட்பது போல் பத்து ஆண்டுகள் கழிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. வன்னி மக்களின் தலைவிதி அது.

கமல்,
மட்டக்களப்பு.

**கேள்வி:-** அணுவாயுதப் பரவல் தடை ஒப்பந்தம் என்றால் என்ன பித்தரே?

**பதில்:-** அணுக்குண்டுச் சோதனை செய்த நாடுகளான அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்ஸ், சீனா ஆகிய நாடுகள் தவிர வேறு எந்த நாடும் அணுக்குண்டு செய்யலாகாது என்று மற்ற நாடுகளைத் தடுக்கும் வகையிலான ஒப்பந்தமே இது. அதாவது குழந்தை பெறாமலே கருத்தடை செய்து கொள்ள வேண்டும் என்று கேட்பது போன்றது. இந்த ஒப்பந்தம் 1967 இல் உருவானது. 1964 இல் மேற்படி ஐந்து நாடுகளிடமும் 36, 287 அணுக்குண்டுகள் இருந்தன. அமெரிக்காவின் கையிருப்பு மட்டும் 30,751 ஆக இருந்தது.


பாஸில்,
கொழும்பு.

**கேள்வி:-** பொன்சேகா இல்லாத வெற்றி விழாக் கொண்டாட்டம் எத்தகையது?

**பதில்:-** மாப்பிள்ளை இல்லாத மணவறை போல...!

தவம்,
கண்டி.

**கேள்வி:-** உங்களுக்குப் பிடித்தமான திரைப்படப் பாடல் ஆசிரியர்கள் யார்?






**பதில்:-** கவிஞர் கண்ணதாசன், கவிஞர் முத்துலிங்கம், மருதகாசி ஆகியோர்.

சேரன்,
யாழ்ப்பாணம்.

**கேள்வி:-** புராணங்களில் பெரிய புராணத்தின் விசேஷம் என்ன?

**பதில்:-** பொதுவாக எல்லாப் புராணங்களும் தெய்வங்களைப் பற்றியதாக இருக்க, பெரிய புராணமோ இறைவனின் தொண்டர்களையும் அவர்களது பக்தியைப் பற்றியுமே பேசுகிறது. மற்றொரு வித்தியாசம், எல்லாப் புராணங்களும் சமஸ்கிருதத்தில் இருந்து மொழிபெயர்க்க அல்லது தழுவி எழுதப்பட, பெரிய புராணமோ தமிழிலேயே எழுதப்பட்டதாகும்.

சிவஞானம்,
மட்டக்களப்பு.

**கேள்வி:-** இறைவன் ஏன் மனிதர்களைச் சோதனைகளுக்கு உட்படுத்துகிறான்?

**பதில்:-** அவர்களது விசுவாசத்தையும் இறைபக்தியையும் கணிப்பதற்கு...!

முருகன்,
வவுனியா.

**கேள்வி:-** நாயன்மார்கள் என்றால் யார்?

**பதில்:-** துறவோர், பெருமையில் சிறந்தோர், சிவனடியார், கடவுள் என அதற்குப் பல பொருள்கள் உண்டு.

ரத்தினம்,
வெள்ளவத்தை.

**கேள்வி:-** எதற்குமே வயது தேவையா?

**பதில்:-** அறிவும் அனுபவமும் இருந்தால், வயதுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தேவையில்லை. புத்தர் அரண்மனையை விட்டு வெளியேறியபோது அவருக்கு வயது 21; அக்பர் பட்டம் பெற்றபோது அவருக்கு வயது 12; மார்க்கோபோலோ உலகப் பயணத்தைத் தொடங்கும்போது அவருக்கு வயது 17.

பரணி,
மன்னார்.

**கேள்வி:-** சுமார் ஒரே பொருளுடைய வெற்றி, விறல் ஆகிய இரு சொற்களும் என்னென்ன அர்த்தங்களில் பிரயோகிக்கப்படுகின்றன?

**பதில்:-** வெற்றி என்பது புறப் பகைவர்களை வெற்றி கொள்ளும் உடல் ரீதியான வெற்றி. விறல் என்பது ஐம்பொறிகளாகிய அகப் பகைவர்களை வெற்றி கொள்வதைக் குறிக்கும்.

அருளப்பு,
திருமலை.

**கேள்வி:-** வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற இந்தியப் பாடகி யார் பித்தரே?

**பதில்:-** லதா மங்கேஷ்கர்.

கேதீஸ்,
பொலன்னறுவை.

**கேள்வி:-** இன்றைய உலகில் மிருகங்களைத் திருமணம் செய்யும் நபர்கள் இருக்கிறார்களா பித்தரே?

**பதில்:-** ஏன் இல்லாமல்? கழுதையைத் திருமணம் செய்து கொண்ட ஒருவரைப் பற்றி நீங்கள் கேள்விப்படவில்லையா? தமிழ்நாடு கம்பத்தைச் சேர்ந்த 42 வயதான ஒரு தொழிலாளி 2005 ஆம் ஆண்டு கன்னிகழியாத ஒரு பெண் கழுதையைத் திருமணம் செய்து கொண்டார். அவருடைய பெயர் சுப்பிரமணியம்.

ஜாதகப் பொருத்தமின்மை காரணமாக நீண்ட காலமாகத் திருமணமாகாதிருந்த ஒரு நபர், சோதிடரின் ஆலோசனைப் படி கழுதைக்குத் தாலி கட்டினார். கழுதைக்குத் தாலி கட்டிய அறுபது நாட்களுக்குள் பெண் கிடைக்கும் என்று சோதிடர் சொன்னாராம்.

கேதீஸ்,
பொலன்னறுவை.

**கேள்வி:-** பித்தரே, திருமண வாழ்வைப் பூந்தோட்டத்துக்கு ஒப்பிடலாமா?

**பதில்:-** சிலரைப் பொறுத்தவரை ஒப்பிடலாம். மற்றும் சிலருக்கு 'புதைமணல்' ஆக அது இருக்கலாம்.

*****

## சொற்சிலம்பம் போட்டி இல. 424

சொற்சிலம்பம் 424 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித் தினம் 2010 ஆம் ஆண்டு ஜூலை 11 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜூலை 18 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 422 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல.422

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 வ | ■ | 2 ஆ | சா | 3 ப | ங் | 4 க | ம் |
| 5 ரா | 6 க | ம் | ■ | ரு | ■ | ட | ■ |
| 7 க | ரி | ■ | 8 சு | த் | த | ம் | ■ |
| ம் | ■ | 9 பா | ர | தி | ■ | ■ | 10 மா |
| ■ | ■ | 11 தா | தா | ■ | 12 பு | 13 தி | து |
| 14 ச | 15 வ | ம் | ■ | 16 உ | ய | ரு | ■ |
| 17 க | ரி | ■ | 18 ம | யி | ல் | ■ | 19 ஆ |
| 20 தி | சை | ■ | 21 கா | ல் | ■ | 22 தே | டு |

## சொற்சிலம்பம் போட்டி இல. 422
### பரிசு பெறுவோர்

1. எம்.எப்.எம். மிஸ்காத்,
மாஞ்சோலைச்சேனை,
சின்னக் கிண்ணியா,
கிண்ணியா - 03.

2. திருமதி. சந்திரா ரவீந்திரன்,
'திருவேரகம்'
199/57, தும்புறுகிரிய வீதி,
ஹட்டன்.

3. திருமதி. ராஜினி புண்ணியமூர்த்தி
இல. 36, புகையிரத நிலைய வீதி,
மட்டக்களப்பு.

## சொற்சிலம்பம் போட்டி இல. 422
### பாராட்டுப் பெறுவோர்

01. சாலிஹ் எம். றியாழ்,
பொலன்னறுவை.
02. சி. சிவலிங்கம்,
மட்டக்களப்பு.
03. திருமதி. ரஞ்சினி சிவஞானம்,
மட்டக்களப்பு.
04. ம. தில்லைநாதன்,
யாழ்ப்பாணம்.
05. திருமதி. எஸ். ஞானம்,
கொழும்பு - 06.
06. எஸ். என். மணி,
நுவரெலியா.
07. கு. பவளம்,
கொழும்பு - 13.
08. ஐ. தாஜுடீன்,
அட்டாளைச்சேனை - 10.
09. திருமதி. ரஞ்சினி ஜெயரத்தினம்,
வெள்ளவத்தை.
10. ஆர். குழந்தைவேலு,
திருகோணமலை.
11. திருமதி. விக்டோரியா ஜெயராஜ்,
வத்தளை.
12. கௌ. மு. சார்ல்ஸ்,
வவுனியா.
13. எம்.எம். மலர்விழி ஜேசுதாசன்,
கொழும்பு - 13.
14. அ. சேரன்,
கொழும்பு - 06.
15. ம. தில்லைநாதன்,
யாழ்ப்பாணம்.

## சொற்சிலம்பம் போட்டி இல.424

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | | 4 |
| | ■ | | ■ | 5 | | ■ | |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | ■ |
| | ■ | 9 | | ■ | 10 | | 11 |
| ■ | 12 | | | | ■ | 13 | |
| 14 | | ■ | | ■ | ■ | ■ | |
| | ■ | 15 | | ■ | 16 | 17 | |
| 18 | | | ■ | 19 | | | ■ |

## சொற்சிலம்பம் போட்டி இல. 424

### இடமிருந்து வலம்

1. மலை உச்சி.
3. அரண்மனை
5. நட்சத்திரம்
6. மயக்கமூட்டும் பானம்
7. கவர்ந்துகொள்
9. ரணம்
10. ஒத்தாசை
12. அரசர் தலையில் இருப்பது
13. பகைவன்
14. பசுவில் இருந்து (பால்) எடு
15. மாலைக்கு எதிர்
16. அறைகூவல்
17. தலையிருக்க இது ஆடக் கூடாது
18. சாதனை படைத்தோருக்கு வழங்கப்படுவது
19. விருந்தாளி

### மேலிருந்து கீழ்

1. ஒரு ராசி
2. துப்பாக்கியில் இருந்து வெளிப்படுவது
3. வீட்டுப் பிராணி ஒன்று
4. சாரத்துக்கு இந்தியாவில் சொல்லப்படும் பெயர்
5. இதில் வைத்த வெண்ணெய்யை கிருஷ்ண பகவான் திருடித் தின்றதாகக் கூறுவர்.
7. களஞ்சியம்
8. கணவனை இழந்தவள்
9. நுழை
11. பிளவு
12. ஞாபகத்தில் இருந்து அகற்று
14. உபகரணம்
15. கேட்பதற்கு உதவுவது
16. சூழ்ச்சி
17. முறைப்பாட்டுக்காரன்

# எஸ்.பி.பி 25



பாட்டுடைத் தலைவன். களிப்பும் காதலும் ததும்பும் எஸ்.பி.பி-யின் குரல் தமிழ் சினிமாவின் அடையாளங்களில் ஒன்று. பல்லவிகளும் சரணங்களும் வாழ்வான எஸ்.பி.பி-யின் பெர்சனல் பக்கங்கள்...

✱ பாலு பிறந்த ஊர் ஆந்திராவில் உள்ள கொனேட்டாம் பேட்டை. திருப்பதியில் படித்து முடித்து, பாடும் வாய்ப்புத் தேடி சென்னை வந்தவர். ஸ்ரீபதி பண்டிதரதயுல பாலசுப்ரமணியம் என அழைக்கப்படுகிற எஸ்.பி.பி-க்கு சாவித்திரி என்ற மனைவி. காதல் மணம். பல்லவி, சரண் என இரண்டு குழந்தைகள். பல்லவி பாடகியாக இருந்திருக்கிறார். சரண் பாடகராகவும், நடிகராகவும், தயாரிப்பாளராகவும் இருக்கிறார்!

✱ முதன்முதலாக எஸ்.பி.பி. திரைப் பாடலாகப் பாடியது 'சாந்தி நிலையம்' படத்துக்காக 'இயற்கை எனும் இளைய கன்னி, ஏங்குகிறாள் துணையை எண்ணி'தான். ஆனால், திரைக்கு முதலில் வந்தது 'அடிமைப் பெண்' படப் பாடலான 'ஆயிரம் நிலவே வா'!

✱ பாடலைத் தவிர, நடிப்பிலும் அசத்தியவர். தெலுங்கு, கன்னடம், தமிழ் என மூன்று மொழிகளில் 50 படங்களுக்கு மேல் நடித்திருக்கிறார். 'கேளடி கண்மணி', 'காதலன்' இரண்டும் இன்றும் நினைவில் நிற்பவை!

✱ எஸ்.பி.பி. இதுவரை ஆறு முறை தேசிய விருதுகள் வாங்கியிருக்கிறார். இந்தி, தமிழ், தெலுங்குப் பாடல்களைப் பாடியதற்காகப் பெற்ற விருதுகள். 'சங்கராபரணம்', 'ருத்ர வீணா', 'ஏக் தூஜே கேலியே', 'மின்சாரக் கனவு' என இவர் பாடியதெல்லாம் ஒலி பரப்பாகாத நாளே இல்லை!

✱ 'ஏக் தூஜே கேலியே' படம் ஹிட்டுக்குப் பிறகு மும்பையில் ஒரே நாளில் 19 பாடல்கள் பாடியவர். இதுதான் எல்லா பாடகர்களையும் விட எஸ்.பி.பி -யின் சாதனை.

✱ இளையராஜாவும், எஸ்.பி.பி-யும் மிக நெருங்கிய நண்பர்கள். இருவரும் 'வாடா, போடா' எனப் பேசிக்கொள்ளும் அழகு எல்லோரையும் வியக்கவைக்கும்!

✱ சுத்தமான சைவ உணவுப் பழக்கம். இவ்வளவு பெரிய ஆகிருதிகொண்ட இவர், சாப்பிட எடுத்துக்கொள்கிற நேரம் ஐந்தே நிமிடங்கள். தயிர் சாதம்... இஷ்ட உணவு!

✱ இதுவரை 42,000 பாடல்களுக்கு மேல் பாடி இருக்கிறார். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, பெங்காலி, ஒரியா, துளு, படகா, மராட்டி என ஒரு டஜன் மொழிகளில் பாடுபவர்!

✱ எஸ்.பி.பி. தன் குரலைப் பாதுகாக்க, எந்தச் சிறப்புக் கவனமும் மேற்கொள்வது இல்லை. குளிர்ந்த நீர், ஐஸ்கிரீம், இனிப்பு என எல்லாம் சாப்பிடுவார்!

✱ மூச்சுவிடாமல், 'கேளடி கண்மணி'யில் 'மண்ணில் இந்தக் காதல்', 'அமர்க்களம்' பட 'சத்தம் இல்லாத தனிமை கேட்டேன்' என எஸ்.பி.பி. பாடிய பாடல்கள் மிகப் புகழ் பெற்றவை. இன்றளவும் அவரது தனிக் கச்சேரியில் விரும்பிக் கேட்கப்படுகின்றன இந்தப் பாடல்கள்!

✱ எஸ்.பி.பி-க்குப் பிடித்த பாடகர்கள் முகமது ராபி, ஜேசுதாஸ். முகமது ராபியின் பாடல்களை விரும்பிக் கேட்பார். டி.எம்.எஸ். அண்ணா பாடிய எந்தப் பாடலிலும் அபஸ்ருதியைக் கேட்கவே முடியாது எனப் பாராட்டி மகிழ்வார்!

✱ எம்.ஜி.ஆரே விரும்பிக் கொடுத்த பாடல் 'ஆயிரம் நிலவே வா'. அந்தப் பாடலுக்கு எஸ்.பி.பி. அழைக்கப்பட்டபோது, குளிர் காய்ச்சலில் இருந்தார். 'ரெஸ்ட் எடு. நீ எத்தனையோ பேரிடம் எம்.ஜி.ஆர். பாடலுக்குப் பாடுகிறேன் எனச் சொல்லி இருப்பாய். மூணு நாளைக்குப் பிறகு நீயே வந்து பாடு!' எனச் சொல்லி வாய்ப்பு கொடுத்தார்!

✱ கர்நாடக இசைக் கச்சேரி செய்ய வேண்டும் என்பது எஸ்.பி.பி-யின் தணியாத தாகம். விரைவில் ஒரு நிகழ்ச்சியை எதிர்பார்க்கலாம்!

✱ பிடித்த இசையமைப்பாளர், இளையராஜாதான். ஏ.ஆர்.ரஹ்மானின் இசை மீது மிகுந்த மரியாதை இருந்தாலும், 'ராஜா... ராஜாதான்' என்கிற கட்சி!

✱ 'மழை' படத்துக்காக எஸ்.பி.பி. ஒரு பாடலைப் பாடினார். அவர் ஒலிப்பதிவு ஸ்டுடியோவுக்குள் அடியெடுத்துவைத்து, பாடி, வெளியேறியது எல்லாம் 12 நிமிடங்களில் முடிந்துவிட்டது!

✱ கிரிக்கெட் விளையாட்டின் வெறியர் எஸ்.பி.பி. சச்சின், இவரது ஆர்வத்தைப் பார்த்துவிட்டு, தன் கையெழுத்திட்ட பேட் பரிசு அளித்திருக்கிறார்!

✱ 'துடிக்கும் கரங்கள்' படத்தில் ஆரம்பித்து 60 படங்களுக்கு இசை அமைத்திருக்கிறார். எல்லா மொழிப் படங்களும் இதில் அடக்கம்!

✱ பிறந்த தினம் ஜூன் 4, 1946. இப்போது 65 வயதாகிறது. இன்றும் பிஸியாக பாடிக்கொண்டே இருக்கிறார். பிறந்த நாளைக் கொண்டாடுவதில் விருப்பம் இல்லை!

✱ 'முதல் மரியாதை' படத்தில் சிவாஜிக்குப் பதிலாக நடித்திருக்க வேண்டியவர். பாரதிராஜா வற்புறுத்தியும் கடைசி நேரத்தில் எஸ்.பி.பி மறுத்துவிட்டார்!

✱ ரஷ்யா தவிர, எஸ்.பி.பாலசுப்ரமணியம் போகாத நாடுகளே பூமியில் இல்லை. 'எப்படி அந்த கம்யூனிஸ்ட் பூமி விட்டுப்போச்சு' என இப்போதும் அடிக்கடி சொல்லி குறைபட்டுக்கொள்வார்!

✱ சினிமாவில் இருந்தாலும் சினிமாக்காரர்கள் யாரும் இதுவரை வீட்டுக்கு வந்தது இல்லை. ஏனோ, இப்போதும் தனிமைதான் இவருக்கு விருப்பம். சினிமாவையும் வீட்டையும் தள்ளித் தள்ளியே வைத்திருக்க விரும்புவார்!

✱ எஸ்.பி.பி பிரமாதமாக வரைவார். மிக நன்றாகப் புல்லாங்குழல் வாசிப்பார். இரவுகளில் புல்லாங் குழல் இசை இவர் அறை வழி கசிவதை இன்றைக்கும் கேட்கலாம்!

✱ எஸ்.பி.பி-யின் பள்ளித் தோழரான விட்டல், ஆரம்ப காலம் தொட்டு, இன்று வரை இவருடனே இருக்கிறார். திரையுலகின் ஆச்சர்ய நண்பர்களாக இவர்களைக் குறிப்படுவார்கள். கால்ஷீட், உணவு, உடல்நலம் எல்லாம் பேணிக்காப்பது விட்டலின் பொறுப்பு!

✱ தெலுங்குப் படங்களில் நிறைய 'ராபி' பாடல்கள் எழுதியவர். 'கவிஞர்கள் அமையாவிட்டால் நீங்களே எழுதிவிடுங்களேன் பாலு' என இசையமைப்பாளர்கள் இவரிடம் வற்புறுத்துவார்கள்!

✱ கடந்த 20 வருடங்களில் அதிகமான விமானப் பயணங்கள் மேற்கொண்டவர் என எஸ்.பி.பி-யைக் குறிப்பிடுகிறார்கள். மும்பைக்கும், பெங்களூருக்கும், ஹைதராபாத்துக்குமான அவசரப் பயணங்கள் அதிகம்!

## அச்சுறுத்தும் மெக்சிகோ...

(22ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயத்தில் பிரிட்டனும், அமெரிக்காவும் அமைதி காப்பது, மற்ற நாடுகளுக்குக் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

எண்ணெய்க் கசிவை முழுமையாகத் தடுத்து நிறுத்துவதற்கு பிரிட்டிஷ் பெற்றோலிய நிறுவனம் என்ன திட்டம் வைத்துள்ளது? மெக்சிக்கோ வளைகுடாவில் உள்ள எண்ணெய்க் கிணற்றுக்குள் இன்னும் எவ்வளவு மசகு எண்ணெய் இருப்பு உள்ளது? ஏற்கனவே கடலில் கலந்துவிட்ட மசகு எண்ணெயை முழுமையாக அகற்றிவிட முடியுமா? என்ற கேள்விகளுக்கு வெளிப்படையான பதில் எதுவும் தெரிவிக்க பிரிட்டிஷ் பெற்றோலிய நிறுவனம் மறுத்து வருகிறது.

''இந்த ஆழ்கடல் துயரம் இன்னும் எத்தனை நாளைக்கு நீடிக்கும் என்பது உறுதியாகத் தெரியவில்லை. அதுவரை கடல்வாழ் உயிரினங்கள் செத்து மடிவதையும், சுற்றுச்சூழல் மாசுபடுவதையும் தடுத்து நிறுத்த முடியாது. சர்வதேச நாடுகள், இந்த விடயத்தில் தீவிரமாகக் களமிறங்கினால் மட்டுமே, இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படும்'' என்பது, சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் கருத்து.

அமெரிக்க கடல் பகுதியில் இதுவரை நடந்த எண்ணெய்க் கசிவுகளில், தற்போது மெக்சிக்கோ வளைகுடாவில் ஏற்பட்ட எண்ணெய்க் கசிவுதான், மிகப் பெரிய அளவிலானது எனக் கூறப்படுகிறது. கடந்த 1989இல் அலஸ்காவில் ஏற்பட்ட எக்சோன் வால்டாஸ் எண்ணெய்க் கசிவு விபரீதத்தின் பாதிப்பை விட, தற்போது மெக்ஸிக்கோவில் ஏற்பட்ட பாதிப்பு மிகவும் அதிகம் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒட்டுமொத்தமாக, சர்வதேச அளவில் 1991இல், வளைகுடா யுத்தத்தின்போது ஈராக், பேர்சியன் வளைகுடா பகுதியில் ஏற்பட்ட எண்ணெய்க் கசிவுதான், மிகப் பெரிய அளவிலானது. மெக்சிக்கோ வளைகுடாவில் ஏற்பட்டுள்ள எண்ணெய்க் கசிவைத் தடுத்து நிறுத்துவதற்கான புதிய யோசனையை, சேஷாத்ரி ராம்குமார் என்ற இந்திய விஞ்ஞானி கூறியுள்ளார். இவர், டெக்சாசில் உள்ள சுற்றுச்சூழல் மற்றும் மனித நல கல்வி மையத்தில் பேராசிரியராகப் பணியாற்றுகிறார்.

இவர் குறிப்பிடுகையில், ''எண்ணெய்க் கசிவைத் தடுப்பதற்கு தற்போது 'சின்தடிக் பூம்' எனப்படும் முறைதான் பயன்படுத்தப்படுகிறது. இவற்றின் மூலம் குறைந்த அளவு எண்ணெயை மட்டுமே உறிஞ்ச முடியும். மேலும், சுற்றுச்சூழலுக்கும் இதனால் பாதிப்பு ஏற்படும். எண்ணெய்க் கசிவைத் தடுப்பதற்காகவே, 'பைபர்டெக்ட்' என அழைக்கப்படும் பருத்தி கார்பன் உறிஞ்சியைக் கண்டுபிடித்துள்ளேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

''கார்பன் கலந்து தயாரிக்கப்பட்டுள்ள இந்தப் பருத்தி கார்பன் உறிஞ்சி, மூன்று அடுக்குகளைக் கொண்டதாக இருக்கும். மேல் மற்றும் கீழ் அடுக்குகள் பருத்தியை உள்ளடக்கி இருக்கும். இவை கடலில் உள்ள எண்ணெயை உறிஞ்சும் தன்மை கொண்டவை. நடுவில் உள்ள அடுக்கில் இருக்கும் கார்பன் எண்ணெயில் உள்ள தீமை விளைவிக்கக்கூடிய இரசாயனப் பொருட்களை உள்ளிழுக்கும் திறன் உடையது'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பருத்தி கார்பன் உறிஞ்சி, அதன் எடையைப் போல், 40 மடங்கு எண்ணெய்க் கசிவை உறிஞ்சும் திறன் உடையது. இதனால், சுற்றுச்சூழலுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது'' என்றும் சேஷாத்ரி ராம்குமார் தெரிவித்துள்ளார்.

மெக்சிக்கோ வளைகுடாவில் எண்ணெய்க் கசிவு ஏற்பட்டபின், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இதுவரை நான்கு தடைவைகள் அந்தப் பகுதிக்கு நேரடியாகச் சென்று ஆய்வு நடத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் குறிப்பிடுகையில், ''அமெரிக்காவின் இரட்டைக் கோபுர தாக்குதலால் ஏற்பட்ட பாதிப்பை விட, இது மிகவும் மோசமானது. அப்போது சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்பை போல் தற்போதும் ஏற்பட்டுள்ளது. இந்த விபரீதத்தின் மூலம், அமெரிக்காவின் சுற்றுச்சூழல் கொள்கையை மறுபரிசீலனை செய்யவேண்டிய நேரம் வந்துவிட்டது. குறிப்பாக, மசகு எண்ணெய் எடுக்கும் பணிகள் தொடர்பான கொள்கையில் மாற்றம் தேவை'' எனத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் எங்களுக்கு ஒரு பாடமாக அமைந்ததோடு மட்டுமல்லாமல், மிகப் பெரிய சவாலாகவும் அமைந்துவிட்டது. இதற்குக் காரணமான நிறுவனத்தின் மீது கடும் நடவடிக்கை எடுப்பதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தகுந்த இழப்பீடும் பெற்றுத் தரப்படும்'' என்றும் ஒபாமா குறிப்பிட்டுள்ளார்.



# ராசி-பலன்

## 28 - 06 - 2010 முதல் 04 - 07 - 2010




அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்

சாஸ்திரங்களில் வல்லுநராக விளங்கும் மேஷ ராசி அன்பர்களே!

இந்த வாரம் உங்கள் தீவிர முயற்சியின் மூலம் சிறு காரியங்களில் எதிர்பார்க்கும் வெற்றியை அடைவீர்கள். நண்பர்களுடன் ஏற்பட்ட மனவேறுபாடுகள் விலகி நட்பு பலப்படும். புதிய முயற்சிகளில் பொறுமை தேவை.

அலுவலகத்தில் பணியாற்றுவோர், உயர் அதிகாரிகளின் ஆதரவோடு சில சலுகைகளைப் பெறுவீர்கள். சக நண்பர்களிடம் வீண் பேச்சுகளை தவிர்ப்பது அவசியம்.

குடும்பம் சிறு சிறு பிரச்சினைகளுடன் நடைபெறும். பழைய கடன்களின் தொல்லைகள் இருக்கும். ஆரோக்கியத்தில் பெண்கள் கவனமாக இருப்பது அவசியம். கலைஞர்கள், சகக்கலைஞர் மூலம் புதிய வாய்ப்பைப் பெறுவர்கள்.

அதிர்ஷ்ட எண்கள் : 2,5,9 அதிர்ஷ்ட நிறம் : வெண்மை அதிர்ஷ்டக் கிழமை : திங்கள்




கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீடம் 1,2

அச்சமற்ற உறுதியான மனம் கொண்ட ரிஷப ராசி அன்பர்களே!

காரியங்களில் கவனமாகவும், நிதானமாகவும் செயல்படுவீர்கள். எதிர் நிற்கும் தாமதங்களைக் கண்டு தளர்வடைய மாட்டீர்கள். பணவரவுகள் தள்ளிப் போகலாம். முக்கிய காரியங்களில் ஈடுபடும்போது அதிக கவனமாக இருப்பது அவசியம். உத்தியோகஸ்தர்கள் பொறுப்புகளில் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம். அலுவலகம் பற்றிய ரகசியங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதைத் தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படலாம். சகோதர வழி உறவுகளில் மனவேறுபாடுகள் தோன்றக்கூடும். கலைஞர்கள் தீவிர முயற்சிகளின் பேரில் வாய்ப்புகளைப் பெறக்கூடும். எதிர்பார்க்கும் வருமானம் இல்லாவிட்டாலும், வேலைகளில் மனத்திருப்தி இருக்கும்.

அதிர்ஷ்ட எண்கள் : 1,5,6 அதிர்ஷ்ட நிறம் : சிவப்பு அதிர்ஷ்டக் கிழமை : ஞாயிறு




மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2,3 ஆம் பாதங்கள்

கருணை மழை பொழியும் சுபாவம் பெற்ற மிதுன ராசி அன்பர்களே!

எடுத்த காரியங்களில் இந்த வாரம் சிறப்பான வெற்றி பெறுவீர்கள். என்றாலும், சில செயல்களில் மீண்டும் முயற்சிக்க வேண்டிய சூழ்நிலை உண்டாகும். பணம் கொடுக்கல், வாங்கல்களிலும், பத்திரங்களில் கையெழுத்திடு வதிலும் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நன்மை தரும். உத்தியோகஸ்தர்களில் சிலருக்குப் பதவி உயர்வு ஏற்படலாம். எதிர்பார்த்த இடங்களுக்கு மாற்றம் கிடைத்து மனைவி, மக்களுடன் சேர்ந்து வசிக்கும் நிலை உண்டாகும். சிலர் சம்பள உயர்வு பெறக்கூடும். குடும்பம் சீராக நடைபெறும், கணவன்-மனைவி ஒற்றுமை பலப்படும். இல்லத்தில் சுபநிகழ்ச்சிகள் நடைபெற முன்னேற்பாட்டுடன் ஈடுபடுவீர்கள். பெண்கள், மனம் மகிழும் சம்பவம் ஒன்று நடைபெறும்.

அதிர்ஷ்ட எண்கள் : 5,6,9 அதிர்ஷ்ட நிறம் : பச்சை அதிர்ஷ்டக் கிழமை : புதன்




புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்

தான தருமங்கள் செய்வதில் சிறப்புப் பெற்ற கடக ராசி அன்பர்களே!

முக்கிய பிரச்சினைகளில் சிந்தித்து, செயல்பட்டு வெற்றி அடைவீர்கள். என்றாலும், சில செயல்களில் தளர்வான சூழ்நிலை ஏற்படக்கூடும். மனதில் குழப்பங்களும், தடுமாற்றங்களும் வரலாம். பண வரவுகள் தள்ளிப் போகலாம். செலவுகளுக்குக் குறைவிருக்காது.

உத்தியோகத்தில் உள்ளவர்கள் செயல்களில் கவனமாக ஈடுபடுவது நல்லது. சிறிய தவறும் உயர் அதிகாரிகளுக்குப் பெரிதாகத் தோன்றக்கூடும். நீண்ட நாட்களாக எண்ணிய ஒரு எண்ணம் எதிர்பார்த்தபடி முடியும்.

குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்படும். சிறு சிறு பிரச்சினைகள் சாமர்த்தியமாகச் சமாளிக்கப்படும். சுபநிகழ்ச்சிகள் திட்டமிட்டபடி நடைபெறும். பெண்களுக்கு எதிர்பாராத மாற்றங்கள் தேடி வரும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளில் மகிழ்வாக செயல்புரிவார்கள்.

அதிர்ஷ்ட எண்கள் : 5,6,9 அதிர்ஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு அதிர்ஷ்டக் கிழமை : வெள்ளி




மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்

எந்தச் செயலையும் முன்னின்று முடிக்கும் சிம்ம ராசி அன்பர்களே!

உங்கள் செயல்களில் இந்த வாரம் தீவிர முயற்சி தென்பட்டாலும், சில செயல்களிலேயே வெற்றியைச் சந்திப்பீர்கள். தாமதங்கள் முன்நிற்பதைத் தவிர்க்க முடியாமல் போகலாம். முக்கிய முடிவுகளைத் தள்ளிப் போடுவது அவசியம். நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த செய்தி ஒன்று உங்களைத் தேடி வந்து மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

உத்தியோகத்தில் உள்ளவர்கள் பொறுப்புகளில் கவனமாக இல்லாவிட்டால் உயர் அதிகாரிகளின் கோபப் பார்வைக்கு இலக்காக நேரலாம். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகளை அவ்வப்போது சந்திக்க நேரும். சுபநிகழ்ச்சிகளுக்குத் தடைகள் தோன்றி மறையும். வரன் தேடுவோருக்கு நல்ல வரன் கிடைக்கும் வாய்ப்பு கைகூடி வரும்.

அதிர்ஷ்ட எண்கள் : 2,5,9 அதிர்ஷ்ட நிறம் : சிவப்பு அதிர்ஷ்டக் கிழமை : செவ்வாய்




உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்

கல்வியில் சிறந்த புலமை பெற்ற கன்னி ராசி அன்பர்களே!

இந்த வாரம் பல காரியங்களில் மனதைச் செலுத்தினாலும் சிலவற்றில் மட்டுமே வெற்றி ஏற்படும்.

உத்தியோகத்தில் சிலருக்கு இடமாற்றம் ஏற்படலாம். சிலர் விருப்ப ஓய்வில் செல்லக்கூடும். சுயதொழில் செய்பவர்களுக்கு பழைய வாடிக்கையாளர் மூலம் புதிய நபர் அறிமுகமாகலாம். வேலைகள் இருந்தாலும், வரவேண்டிய பணம் கைகளுக்கு வரத் தாமதமாகும்.

குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகளை அவ்வப்போது சந்திக்க நேரலாம். சுபநிகழ்ச்சிகள் தள்ளிப் போகலாம். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெற சக கலைஞர்கள் மூலம் முயற்சிகளை மேற்கொள்வர்.

அதிர்ஷ்ட எண்கள் : 3,6,9 அதிர்ஷ்ட நிறம் : வெளிர்மஞ்சள்
அதிர்ஷ்டக் கிழமை : வியாழன்




சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்

முற்போக்கு எண்ணங்கள் கொண்ட துலாம் ராசி அன்பர்களே!

திட்டமிட்ட காரியங்கள் பலவற்றில் வெற்றியைச் சந்திப்பீர்கள். நண்பர்களும், உறவினர்களும் உங்கள் செயல்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். நிதி உதவிகள் பெற மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறும். சொத்து வாங்குதல், விற்பனை முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு.

உத்தியோகத்தில் எதிர்பாராத திருப்பம் ஏற்படும். விரும்பிய இடத்திற்கு மாற்றமும், பதவி உயர்வும் கிடைக்கலாம். செய்யும் செயல்களில் வெற்றியும் புகழும் ஏற்படும். தனவரவுகள் அதிகரிக்கும். குடும்பம் சீராக நடைபெறும். கடன் தொல்லைகள் இருக்காது. கலைஞர்களுக்கு பிரபல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வந்து மகிழ்ச்சி தரும்.

அதிர்ஷ்ட எண்கள் : 5,8,9 அதிர்ஷ்ட நிறம் : வெளிர்நீலம் அதிர்ஷ்டக் கிழமை : சனி




விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

ஆன்மீகத்தில் ஆர்வம் காட்டும் விருச்சிக ராசி அன்பர்களே!

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த விஷயங்கள் சாதகமாக முடிவதைக் காண்பீர்கள். தளர்வடைந்த செயல்களில் முக்கியஸ்தர்களின் உதவியுடன் தீவிர முயற்சி செய்து வெற்றி பெற முற்படுவீர் கள். உத்தியோகத்தில் சிலருக்கு விருப்ப ஓய்வு பெறும் சந்தர்ப்பம் ஏற்படலாம். உயரதிகாரிகளையோ, அலுவலக செயல்பாடுகள் பற்றியோ அறிமுகம் இல்லாதவர்களிடம் விமர்சனம் செய்வது பிரச்சினைகளை உண்டாக்கும். குடும்பத்தில் சிறு சிறு தொல்லைகளைச் சந்திக்க நேரலாம். கடன் தொல்லைகள் கட்டுக்கடங்கி இருக்கும். ஆரோக்கியக் குறைபாடுகளும் இருக்கக்கூடும். பெண்களுக்கு சேமிப்பு செலவாகக்கூடும். கலைஞர்கள் புதிய ஒப்பந்தம் பெற தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கலாம்.

அதிர்ஷ்ட எண்கள் : 5,8,9 அதிர்ஷ்ட நிறம் : வெளிர்கருநீலம் அதிர்ஷ்டக் கிழமை : சனி




மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்

முன்னெச்சரிக்கை உணர்வு அதிகம் கொண்ட தனுசு ராசி அன்பர்களே!

நீண்ட நாள் எதிர்பார்த்த ஒரு நல்ல செய்தி தபால் மூலம் வந்து சேரும். தீவிர முயற்சியோடு செயல்பட்டு எடுத்த காரியங்களில் வெற்றி பெற முற்படுவீர்கள். சிலவற்றில் தளர்ச்சி, தடங்கல் ஏற்பட்டாலும், உரியவர்களின் உதவியோடு முயன்று முன்னேறுவீர்கள். பணவரவுகளில் சில உடனே வருவது போல் தோன்றினாலும் தாமதமாகலாம். நீண்ட காலமாக இழுபறியில் இருந்த செயல் ஒன்று உடனே முடிவுக்கு வரக்கூடும். உத்தியோகத்தில் எதிர்பாராத திருப்பம் ஏற்படலாம். தொல்லை கொடுத்து வந்த நபர் இடமாற்றலாகக் கூடும். எதிர்பார்க்கும் வருமானம் கிடைத்து குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். குடும்பம் சீராக நடைபெற்றாலும், சிறு சிறு பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும். பெண்களுக்கு குடும்பத்தில் பாராட்டு கிடைக்கும்.

அதிர்ஷ்ட எண்கள் : 3,5,9 அதிர்ஷ்ட நிறம் : மஞ்சள் அதிர்ஷ்டக் கிழமை : வியாழன்




உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்

பிறரிடம் விட்டுக் கொடுத்துப் பழகும் மகர ராசி அன்பர்களே!

பல காரியங்களில் முயற்சி செய்து முன்னேற்றத்தை நோக்கி நடைபோட்டாலும், அவ்வப்போது சிறு சிறு இடையூறுகள் தோன்றக்கூடும். தடைகளைத் தாண்டி, கொடுத்த வாக்கைக் காப்பாற்ற துடிப்போடு செயல்படுவீர்கள்.

உத்தியோகத்தில் உள்ளவர்கள், பணிகளில் அதிக கவனத்தோடு இருப்பது அவசியமாகும். பணிகளில் தடை, தாமதங்கள் ஏற்படலாம்.

குடும்பம் சிறு சிறு பிரச்சினைகளோடு நடைபெறும். பெண்கள் தாய் வழி உறவுகளிடம் வீண் பேச்சுகளைக் குறைப்பதால் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். கலைஞர்கள் தீவிர முயற்சிகளின் பேரில் புதிய வாய்ப்புகளைப் பெற்றாலும் வருமானம் சுமாராகவே இருக்கும்.

அதிர்ஷ்ட எண்கள் : 1,5,9 அதிர்ஷ்ட நிறம் : சிவப்பு அதிர்ஷ்டக் கிழமை : ஞாயிறு




அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்

மற்றவர்களின் மனமறிந்து பழகும் கும்ப ராசி அன்பர்களே!

முக்கியமான சில காரியங்களில் முன்னேற்றமான பலன்களைப் பெறுவீர்கள். தளர்வடைந்த செயல்களில் தக்க நபர்களின் உதவியுடன் முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.

உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு பதவி உயர்வும் சம்பள உயர்வும் ஏற்படக்கூடும். பணிகளில் கவனமில்லாமல் தடுமாற்றங்களைச் சந்திக்கலாம். உயரதிகாரியின் பாராட்டைப் பெற முயல்வீர்கள்.

குடும்பம் சீராக நடைபெற்றாலும், அவ்வப்போது சிறு சிறு பிரச்சினைகளும் இருக்கக்கூடும்.

அதிர்ஷ்ட எண்கள் : 1,6,9 அதிர்ஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு அதிர்ஷ்டக் கிழமை : வெள்ளி




பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

திறமையோடு பேசி நல்ல பெயர் எடுக்கும் மீன ராசி அன்பர்களே!

காரியங்களில் கவனமாக இருந்து இந்த வாரம் முழுக்க வெற்றிக்காகப் பாடுபடுவீர்கள். புத்திசாலித்தனம் மேம்பட்டு இருந்தாலும், சில காரியங்களில் முக்கிய நண்பர்களின் உதவி தேவைப்படக்கூடும்.

உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு அலுவலகத்திலேயே உயர்வும், மரியாதையும் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் எதிர்பார்த்த கடன் தொகைகள் சிலருக்குக் கிடைக்கும்.

குடும்பம் அதிக பிரச்சினைகள் இன்றி நடைபெறும். ஒன்றிரண்டு பிரச்சினை ஏற்பட்டாலும், பெண்களே சாமர்த்தியமாகச் சமாளித்து விடுவார்கள். சுபநிகழ்ச்சி பற்றிய முன்னேற்பாடுகளில் கவனம் செலுத்துவீர்கள். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெற்றாலும், எதிர்பார்க்கும் வருமானம் இல்லாமல் போகலாம்.

அதிர்ஷ்ட எண்கள் : 5,6,9 அதிர்ஷ்ட நிறம் : பச்சை அதிர்ஷ்டக் கிழமை : புதன்

# 'ரிங்மாஸ்டர்' மரடோனா






உதைபந்தாட்ட உலகில் பலமான அணிகளில் ஒன்று ஆர்ஜன்ரீனா. அந்த அணிக்கு பயிற்சியாளராக இருப்பவர் முன்னாள் பிரபல உதைபந்தாட்ட வீரர் மரடோனா. இளம் வயதிலேயே பயிற்சியாளராக களம் புகுந்துள்ள இவர் எப்படி அணி வீரர்களை வழிநடத்துகிறார் என்பதைப் பார்ப்போம்.

பயிற்சியாளரை எதிர்த்து பிரான்ஸ் வீரர்கள் பயிற்சிக்குப் போகாமல் புறக்கணித்தார்கள். பேபியோ கெபேலா ஏன்தான் இங்கிலாந்து அணிக்குப் பயிற்சியாளராக பொறுப்பேற்றோம்? என்று புலம்புகிறார். மார்சிலோ லிப்பி கிழட்டு இத்தாலி வீரர்களைத் தெரிவு செய்துவிட்டு நொந்து போயுள்ளார். ஸ்பெயின் பயிற்சியாளர், அணியின் சொதப்பல் ஆட்டத்தால் பரிதவிப்பில் இருக்க, மரடோனா மட்டும் தென்னாபிரிக்காவில் ஹாயாக வலம் வருகிறார். இத்தனைக்கும் அவர்கள் அத்தனை பேரையும் விட பயிற்சியிலும் அனுபவத்திலும் வயதிலும் மரடோனா குறைந்தவர். மரடோனாவுக்குப் பயிற்சியாளர் பதவியும் புதியது.

உலக கிண்ணத் தொடருக்குத் தட்டுத்தடுமாறித் தகுதிபெற்ற ஆர்ஜென்ரீனா எளிதாக அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது. இதனால், தற்போது உலகக் கிண்ணத்தை ஆர்ஜென்ரீனா கைப்பற்றும் என்று பலர் பந்தயம் கட்டியுள்ளனர் எனவும் கூறப்படுகிறது. மரடோனா பயிற்சி கொடுக்கிறாரோ இல்லையோ, அணி வீரர்கள் அத்தனை பேரிடமும் பாசமும் நேசமுமாக நடந்து கொள்வார். அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக ஆர்ஜென்ரீனா உதைபந்தாட்டச் சங்கத்திடம் சண்டை போடவும் அவர் தயங்குவது இல்லை. ஒருவருக்குச் சின்னத் தலைவலி என்றாலும், அடுத்த நிமிடம் மரடோனா அங்கு சென்றுவிடுவார். அந்த அளவுக்கு அணி வீரர்கள் மீது அக்கறை செலுத்துவதால், அவர்களுக்கும் மரடோனா மீது தனி மரியாதை உண்டு.

இந்த உலகக் கிண்ணப் போட்டி தொடங்குவதற்கு 5 நாட்களுக்கு முன்னரே தென்னாபிரிக்கா சென்றுவிட்டார் மரடோனா. அப்போது, ஆர்ஜென்ரீனா வீரர்கள் தங்கவுள்ள ஹோட்டல், பயிற்சி எடுக்கும் மைதானம் உட்பட அத்தனை இடங்களையும் ஒன்று விடாமல் சுற்றிப் பார்த்த மரடோனா, வீரர்களின் விருப்பத்திற்கு ஏற்ப பல மாற்றங்களையும் செய்தார். வேறு எந்தப் பயிற்சியாளரும் செய்யாத விடயம் இது.

அதுபோல் வீரர்களின் மகிழ்ச்சிக்கு உலை வைக்கும் எந்த விடயத்தையும் மரடோனா செய்வதும் இல்லை. முக்கியமாக 'செக்ஸ்'. போட்டி உள்ள நாட்கள் தவிர பிற நாட்களில் ஆர்ஜென்ரீனா வீரர்கள் தாராளமாக செக்ஸ் வைத்துக் கொள்ளலாம். வீரர்களின் சொந்த விடயங்களில் மரடோனா எந்த விதத்திலும் தலையிடுவது இல்லை. உலகக் கிண்ணப் போட்டி நடக்கும்போதுபல பயிற்சியாளர்கள் செக்ஸுக்குத் தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்து பயிற்சியாளர் பேபியோ கெபேலோவுக்கு இதில் முதலிடம்.

அடுத்ததாக, வீரர்களுக்கிடையே ஒற்றுமை மிக அவசியம் என்பதை மரடோனா உணர்ந்துள்ளார். அதனால் வீரர்களுக்குள் சண்டையை ஏற்படுத்தும் எந்த விடயத்தையும் அவர் அனுமதிப்பது இல்லை. ஆர்ஜென்ரீனாவின் நடுக்கள வீரரான செபஸ்டியான், வீரானும் 'இன்டர்மிலான்' (உள்ளூர் அணி) அணித்தலைவர் ஜேவியர் செனட்டியும் கீரியும் - பாம்பும் போன்றவர்கள். அதுபோல் கம்பியோசோவுக்கும் வீரானைக் கண்டாலே பிடிக்காது. இந்த 3 பேரில் சிறந்தவர் யார் என்பதை மரடோனா அலசி ஆராய்ந்தார். வீரான் முதலிடம் பிடிக்க மற்ற இருவருக்கும் விடைகொடுத்தார். கூட்டு ஆட்டமான உதைபந்தாட்டத்தில் கூடவே இருந்து குழி பறித்தால் தோல்விதான் மிஞ்சும் என்பதை உணர்ந்தவர். இதையெல்லாம் தாண்டி மரடோனா உண்மையான கால்பந்து வீரர். பணத்திற்காக அவர் ஆடியது கிடையாது. இந்த உலகக் கிண்ணப் போட்டியில் பணத்துக்காகத்தான் ஆர்ஜென்ரினாவின் பயிற்சியாளராகப் பொறுப்பேற்றார் என்ற பீலேவின் குற்றச்சாட்டு அபத்தமானது. மரடோனாவிற்கு பணக கஷ்டம் என்றால், பல கோடி டொலர்களைக் கொட்டிக் கொடுக்க அவரது ரசிகர்கள் தயாராக உள்ளனர். உண்மையிலேயே அவர் உதைபந்தாட்டத்தின் மேல் தனி காதல் கொண்டவர். அதனால்தான் சாகக் கிடந்தவரின் கையில் ஆர்ஜென்ரீனா சாகா வரம் பெறக் காத்திருக்கிறது.



நிருத்தனா நடனப்பள்ளியின் 35 ஆவது ஆண்டு விழாவையொட்டி திருமதி. சிவானந்தி ஹரிதர்ஷனின் மாணவிகள் வழங்கும் நடன நிகழ்வு 26 ஆம் திகதி சனிக்கிழமை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறுகிறது. இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவலகத்தின் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் கலந்துகொண்டு சிறப்பிப்பார்.




நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் அடகுச்சேவை

- 365 நாள் வங்கிச் சேவை
- நீடித்த வங்கி நேரங்கள்
- அதிகபட்ச பாதுகாப்பும் நம்பகத்தன்மையும்
- முன்னறிவித்தல் இன்றி மீட்கலாம்
- பகுதி பகுதியான மீட்பு வசதி

யாழ்ப்பாணக் கிளை: 35, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 4 920 283 - 5

அடகுச்சேவை வவுனியா மற்றும் மட்டக்களப்பிலும் பெற்றுக்கொள்ளலாம்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பி எல் சி - PQ 118

Nations Trust Bank
Nations
Gold Advances



SONDERVERKAUF!



1950.-
statt 3250.-

Polstergruppe Rosy,
Leder schwarz



995.-
statt 1590.-

Bett Toscana,
Metall schwarz

Schlafzimmer Basel,
weiss Wenge

Möbel Ferrari
Kleine Preise
Grosse Auswahl

www.moebel-ferrari.ch

HINWIL Wässeristrasse 26
Tel. 044 931 20 40

Täglich offen von 9.00 bis 20.00 Uhr

Direkt-Kedit -
6 Monate ohne Zins